83

காலி பரிபாலன சிகிச்சாதீபம் என்கிற

மாட்டுவாகடம்

[வியாதியும் பரிகாரமும்]



பதிப்பாளர்:

அமரம்பேடு. இராஜாரத்தின முதலியார்

…மகள் விலாசம் பிரஸ்

…ராயப்பிள்ளை வீதி, சென்னை-1.

175. செட்டியார் தெரு, கொழும்பு.

K21:4:6
N60

உ

கடவுள் துணை

காலி பரிபாலன சிகிச்சா தீபம்

என்கிற

மாட்டு வாகடம்

ஆசிரியர்:

திருநெல்வேலி. நெல்லையப்பபிள்ளை.

பரிசோதகர்:

மதுரை. T. குப்புசாமி நாயுடு.

பதிப்பாளர்:

அமரம்பேடு. இராஜாரத்தின முதலியார்

மலர்மகள் விலாச அச்சுக்கூடம்

சென்னை - 1.

இதன் விலை] 1960 [ரூபா 2-50

ரிஜிஸ்டர் காபிரைட்

23, தாண்டவராயப்பிள்ளை வீதி.

ரிஜிஸ்டர் காபிரைட் அறிவிப்பு

இதனால் சகலமானவர்களுக்கும் தெரிவிப்பது யாதெனில்: இந்த காலிபரிபாலன சிகிச்சாதீபம் என்னும் மாட்டுவாகடம் ஆகிய நூலை, திருநெல்வேலி. நெல்லையப்பப் பிள்ளை அவர்கள் இயற்றியதுடன், மதுரை. த. குப்புசாமி நாயுடு அவர்களால் பல ஏட்டுப்பிரதிகளைக்கொண்டு யாவரும் எளிதில் அறிந்துகொள்ளும்பொருட்டு பிழையறச்சீர்திருத்தி சென்னை ஜீவகாருண்ய விலாச அச்சுக்கூடத்து அதிபர் கோளப்பஞ்சேரி. செல்லப்பமுதலியார் அச்சிட்டு தன்பேரால் ரிஜிஸ்டர் காபிரைட் செய்து வெளியிட்டு தான் அனுபவித்து வந்தனர். ஷை கோ. செல்லப்பமுதலியார் அவர்களிடம் அமரம்பேடு. இரங்கசாமிமுதலியார் சன்ஸ், சென்னை பூமகள் விலாச அச்சுக்கூடத் தலைவர்களில் ஒருவராகிய அமரம்பேடு. முத்துவடிவேல் முதலியார் அவர்கள் 1926ளு ஜனவரிமீ 19உயில் கிரையத்திற்குப்பெற்று எமது பூமகள் விலாச அச்சுக்கூடத்தில் அச்சிட்டு தன்பேரால் ரிஜிஸ்டர் காபிரைட் செய்து அனுபவித்து வந்ததை, அடியிற்கண்ட நான் 1951ளுத்தில் டிம்மி 12 - பேஜ் ஸயிஸில் ஒருபதிப்பு அச்சிட்டு வெளியிட்டு வந்தேன். இப்போது 1960ளுத்தில் டபில் கிரௌன் 16 - பேஜ் ஸயிஸில் அதனை அச்சிட்டு மகாகனம்பொருந்திய கவர்ண்மெண்டார் அவர்கள் சட்டப்படி என்பேரால் ரிஜிஸ்டர்காபிரைட்செய்து வெளியிட்டுள்ளேன். ஆகையால் இந்நூலை எனது உத்தரவின்றி யாரும் அச்சிடக் கூடாது என்பதைத் தெரியப்படுத்தி யிருக்கிறேன்.

அ. இராஜரத்தின முதலியார்.

க வ னி ப் பு

இந்நூல் அநேகர் விருப்பத்திற்கிணங்கியவாறு செய்குணம், மருந்துவகைகள், உபயோகிக்கும்விதம், ரசியம், சூடுபோடுதல், முக்கிய கவனிப்பு முதலியவற்றை தனித்தனியாகப் பிரித்து இந்தப் பதிப்பை ஒழுங்குபடுத்தி சுத்தப் பிரதியாய் வெளியிட்டிருப்பதால் இதை யாவரும் சுலபமாய் உபயோகப்படுத்திக்கொள்ளலாம்.

முகவுரை

சர்வ ஜகந்நியந்தாவாகிய ஈசனால் சிருஷ்டிக்கப்பட்ட இவ்வுலகத்தில் நாற்கால் உயிர்வருக்கங்களுள் மனிதர்களின் முக்கிய பிரயோசனத்துக்காக உரித்தாவதால் மாட்டுவருக்கம் அதி உத்கிருஷ்டம் என்பது சர்வத்திர சம்மதம். அவற்றில் ஆண்வருக்கமாகிய எருதுகள் ஓரிடத்திலிருந்து மற்றோரிடங்களுக்குச் செல்பவர்களும், பளுவான சாமான் முதலியவைகளைக் கொண்டுபோய்ச் சேர்ப்பவர்களுமாகிய இவர்களுக்கு வண்டி இழுத்தல் முதலிய வேலைகளையும், வேளாண்மைத் தொழிற்கு உழுதல், பரம்படித்தல், போரடித்தல் முதலிய தொழில்களையும், மற்றும் பிரவிர்த்திக்காரருக்குப் பொதி சுமத்தல், இயந்திரஞ் சுற்றுவித்தல் முதலிய பல அலுவல்களையும், எளிதாகவும் சகாயமாகவும் சடுதியாகவும் முடித்துக் கொள்வதற்கு உபயோகப்படுகின்றன.

அன்றியும்,

"தொழுதூண்சுவையின் உழுதூணினிது"

"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாந்
தொழுதுண்டு பின்செல்பவா"

என்று மஹான்கள் வாக்கியத்தில் சொல்லிய வண்ணம் இந்த உலகத்திலுள்ள சமஸ்த தொழிற்கும் காரணமாகவும் சிறந்ததாகவும் இருப்பது உழவுத் தொழில்; அவற்றிற்கு முக்கிய காரணமாகியவை.

"வானமழை பொழிந்தாலும் வளம்படுவ தெவராலே
ஞானமறை யவர்வேள்வி நலம்பெறுவ தெவராலே
சேனைகொடு பொருமன்னர் செருகளத்திற் செருக்குமதே
யானைவலி யெவராலே யிவரெருதின் வலியாலே."

"ஊட்டுவார் பிறருளரோ வுலகுதனி லுழுபகடு
பூட்டுவார் புகழன்றிப் பிறர்புகழும் புகழாமோ
நாட்டுவார் சயத்துவச நயப்பாரை யிவர்க்குநிகர்
காட்டுவார் யார்கொலிந்தக் கடல்சூழ்ந்த வையகத்தே."

"பார்பூட்டுந் திசையனைத்தும் பகடுகளும் பரம்பூணு
போர்பூட்டுங் காமனுந்தன் பொருசிலைமேற் சரம்பூட்டான்
கார்பூட்டுங் கொடைத்தடைக்கைக் காவேரி வளநாடர்
ஏர்பூட்டி லல்லதுமற் றிரவியுந்தேர் பூட்டானே."

பெண்வருக்கமாகிய பசுக்கள், மெய்க்குறுதி, பாலாவது செய்பாவது / என்றபடி திவ்யாமிர்தமாகிய க்ஷீரத்தைக் கொடுத்து அதனால் சரீரபலம் ஜிக்வாருசி முதலியவைகளைக் கொடுப்பதுமன்றி, அக்ஷீர சமோகமான அநேக வஸ்துக் களையும் கொடுக்கின்றன. அன்றியும் இவ்வெருதுகளும் பசுக்களும் இந்து மதாசாரக் கிரியைகளுக்கு இன்றியமை யாத அநேக முக்கிய பொருள்களையும் கொடுக்கின்றன.

இவ்வாறு முக்கிய பிரயோசன வஸ்துவாயிருக்கிற மாடு களின குணகுணம், அவற்றைப் பாதுகாக்கத்தக்க முறை, அவற்றிற்கு வியாதி முதலியவை நேரிட்டால் நிவர்த்திக்க வேண்டிய சிகிச்சை என்னும் இவைகள் மனிதர்களுக்குப் பெரும்பாலும் திட்டமாகத் தெரியவேண்டியவையா யிருக்க, தெரியாதிருக்கிறது தக்கதன்று என்பதை யார்தான் ஒத்துக் கொள்ளாதார்.

ஆனல் இவற்றைப்பற்றிய சாஸ்திரம் இந்துக்களுக்கு இருந்தும் யாது காரணத்தினலோ மற்ற சாஸ்திரங்கள்போல பண்டிதர்களால் அப்பியசிக்கப்படுகிறதில்லை. பாமரர்கள் பெரும்பாலும் தங்கள் விவேகத்துக்கு எட்டினமட்டும் அப்பியசித்திருக்கிறதுண்டு. அவ்வைதிகர்களுங்கூட சமயத்

தில் உதவுவார்கள் என்பது துர்லபம். அது போலிவைத்திய மாய் இருந்தும் செய்வித்துக்கொள்ள வாய்க்காமையால் ஜனங்களுக்கு விளைகிற வருத்தமும் நஷ்டமும் மிகுதி. இப்படியிருக்க, இக்குறையை நிவர்த்திக்கும் பொருட்டு பல இடங்களிலுமிருந்து அவ்வைத்திய சாஸ்திரப் பிரதிகளை வருவித்து ஆராய்ந்தும், நெடுநாளைய அனுபோகமுள்ளவ ரிடம் விசாரித்தும், எனக்கே தெரிந்த முப்பது வருடத்து அனுபவத்தைக்கொண்டும், இந்நூலைக் கோர்த்து "மாட்டு வாகடம்" என்று பெயர் கொடுத்துச் சித்தப்படுத்தினன். இந்நூலுக்கு 1845-ம் வருடத்தில் அசிஸ்டெண்டு சர்ஜன் டப்பிளியு கில்கிரிஸ்டுதுரை அவர்கள் ஆங்கிலேய பாஷையில் பிரசித்தம் செய்திருக்கிற புத்தகம் கொஞ்சம் சாதகமா யிருந்தது. இது சர்வ ஜனங்களும் எளிதில் வாசித்து உணர்ந்து கருதிய பயனை அடையவேண்டும் என்ற ஒரே நோக்கங்கொண்டு எளிய நடையில் எழுதப்பட்டது. ஆகை யால் இதில் எழுத்து சொல் நடை முதலிய குற்றங்கள் இருப்பினும், அதனைப் பேரறிவாளர்கள் குற்றமாகப் பாவிக் காமல் சமஸ்தமும் குணமாகவே அங்கீகாரம் செய்யும்படி கேட்டுக்கொள்ளுகின்றேன்.

தா. நெல்லையப்பப்பிள்ளை

திருநெல்வேலி.

சிறப்புப்பாயிரம்

ஜெயந்திமாநகரம்

குஞ்சிஐயபாரதிகள் இயற்றியது.

நிலமண்டில ஆசிரியப்பா

சீர்பெறுநெல்லைத் திருநகரத்தில்
ஏர்பெறமேவு மிணையிலாயோகன்
பாரினைக்காக்கும் பண்புடையாளன்
காரினைக்காக்குங் கனமரபுதித்தான்
நாயகமாக நவின்றகாலிங்க
ராயகோத்திரத்தி னண்ணியமணியாம்
ஐந்தருவும்விர லாகியகரத்தால்
சந்ததஞ்சொர்ணந் தருங்கொடைக்கன்னன்
தங்கணுமுத்துக் குமாரசுவாமித்துரை
சங்கமாய்நோற்ற தவத்தினிலுதித்த
மைந்தரின்முன்வரு மங்களசீலன்
செந்திருநாளுந் திகழ்புயலோலன்
நப்பண்மாமதத்தி னுட்டியகமிட்டி
மெம்பர்களுள்ளும் விறல்கெழுவேந்தன்
தந்திரத்தொழில்கள் சாற்றுதற்கரிய
மந்திரமுணர்ந்த வல்லமையாளன்
மன்னவரேத்த வருமதியுள்ளான
தன்னிகர்தானுந் தருமநன்னெறியான்
சிந்துநீர்முகந்து செல்பொழிவனபோற்
செந்தமிழ்க்கவிதை தினந்தினஞ்சொரிவான்
இங்கிலாந்தரச ரெவருமகிழ
வெங்கணுஞ்செங்கோ லியற்றிடுநிருபன்

அரவணைத்துயில்வோ னுமெனவந்த
சரவணமுத்துத் தயாநிதிதனையும்
விப்பிராதியர்புகழ் மேன்மைதங்கியதோர்
சுப்பிரமணிய சுகுணரூபனையுங்
காதலினுரிய கனிட்டராய்க்கொண்டு
மேதினிதன்னில் விளங்கியமேரு
வல்லுமாமுலையார் மதனெனுமழகன்
நெல்லையப்பேந்திர நிபுணனும்வள்ளல்
பாலியமுதலாய்ப் பழகியவனுபவஞ்
சாலவுந்தெரிந்த தனமையினாலும்
பற்பலபாஷைப் பண்டிதர்பகர்ந்த
கற்புவாகடங்கள் கற்றதினாலுங்
கையினெல்லியங் கனியெனவிந்த
வையமின் றுணர வாசகநடையாய்
மாட்டிலக்கணமும் வழுவுறுகுற்றமும்
நாட்டியதொழுவா நன்னிலத்தலமும்
நடைகதிமந்தம் நாடிக்குறிப்பிட்டு
அடைவுடன்பார்க்கு மளவினதமைவும்
நித்தியங்கொடுக்க நிகழ்த்துறுதீனியும்
சுத்தநீர்காட்டச் சொல்லியவியல்பும்
நிறைவுடனிதஞ் செயவேண்டியநியமமும்
பரவுநீரிற்குளிப் பாட்டிடுமுறையும்
சிறந்திடுவிசேஷ தீவனநிதானமும்
திறந்தருமசாலா செய்துதவொழுங்கு
அகதமில்பிணியும் அப்பிணிதீர்ந்தே
உய்ந்திடவகையா யுரைத்திடுமருந்துங்
குசைநுனியதனிற் கூர்த்தபேரறிவால்
திசையெலாம்விளங்கத் திரட்டியேமாட்டு
வாகடமென்று வழங்கினனிந்நூல்
வாகுடனுலகின் வளம்பெறவாழி.

திருநெல்வேலி

அ. சங்கரநாராயணப் பிள்ளை

அவர்கள் குமாரரும்

இந்நூல் அதிகாரிக்கு ஜேஷ்டமாதா புத்திரருமாகிய

ச. சுப்பிரமணியப்பிள்ளை

இயற்றிய

கட்டளைக்கலித்துறை

பயன்குறியா துலகோர்க் குபகாரம் பரிந்துசெய
அயன்படைத்தே யருநெல்லை யப்பேக்கிர னாக்கியவிவ்
வியன்பெறு வாகட நூல் தனையார்க்கும் விளங்கவைத்தான்
நயன்மொழி வாய்மைநஞ் சுப்பிரமண்ய நராதிபனே.

அசுவசாஸ்திரம்

இந்நூலில் குதிரை ஜனிக்கும் வேளை, பற்களால் ஆயுள் அறிதல், குதிரை வாங்கும்போது பார்க்கும் சகுணங்கள், ஜாதி-ராசி-சுழி, சுபாவிர்த்தம்-அசுபாவிர்த்தம், முக்கியமாய் கவனிக்கவேண்டிய சுழிகள், உதவாத குறிகள், குதிரையின் மங்களக் குறிகள், அளவு, வருணம், அவசியமாய் அறியும் பலன்கள், நாடியினால் வியாதியையறிதல், வியாதியின்குணம் உள்வியாதி, அந்தந்த நோய்க்குத் தகுந்த மருந்துகளுடன் குதிரைகளை வைத்திருக்கும ஒழுங்கும் சேர்த்து அச்சிட்டு அழகிய பைண்டு செய்யப்பட்டுள்ளது. விலை ரூபா 2-50.

அட்டவணை

விஷயம்	பக்கம்
தெய்வ வணக்கம்	17
மாடுகளின் இலக்ஷணம்	17
மாடுகளுக்குரிய குற்றங்களும் அடையாளமும் சுழியும்	19
எருதுப்புரை	26
மாட்டுக்கு தினஞ் செய்ய வேண்டிய நியமம்	27
தண்ணீர் குடிக்கச் செய்யும் தன்மை	28
தீனி - (உணவு)	29
விசேஷ தீவனம்	29
உயரமான எருதுகளுக்கு தினம் போடவேண்டிய தீனியின் அளவு	31
குளிப்பாட்டல்	32
வெள்ளைப்பூண்டு மசாலா	32
இஞ்சி மசாலா	33
ஆட்டுத்தலை மசாலா	33
பெரும்பூசினிக்காய்மசாலா	35
உடும்பு மசாலா	35
வெள்ளுச்சி மசாலா	35
ஜீரண மசாலா	36
உஷ்ண சாந்தி மசாலா	36
இதுவுமது	37
நல்லபாம்பு மசாலா	37
குமட்டிக்காய் ஊறுகாய்	38

விஷயம்	பக்கம்
எருதுகளுக்கு கொடுக்கும் லேகியம்	39
அலரிவேர் லேகியம்	40
சவாரி லேகியம் நிஜாம் முறை	40
வேறு முறை	41
அதிக லாகிரியானால் முறிப்பு வகை	41
லேப்பு	41
அப்படி குளிப்பாட்டின மறுநாள் அல்லது 2-ம் நாள்கொடுக்கும் மசாலா	42
கண்டங்கத்திரிகாய் லேப்பு	42
வாய் கழுவுதல்	43
புல்லும் தண்ணீரும் ஓதிக் கொடுக்க சக்கரமும் அதற்குரிய மந்திரமும்	44
சாதாரணமாய் எல்லா மாடுகளுக்கும் தண்ணீர் ஓதிக் கொடுக்க மந்திரம்	45
அடைப்பன் நோய்	45
வேறு முறை	46
க்ஷ வியாதி வேறுவகை	46
முட்டடைப்பன் நோய் 7-வித முறை	47
முன்னடைப்பன்நோய் 8-வித முறை	50

விஷயம்	பக்கம்
முன்னடைப்பன் பின்னடைப்புக்கு 2-வித முறை	53
பின்னடைப்பன் நோய் 7-வித முறை	53
ஊதடைப்பன் நோய் 9-வித முறை	56
கொட்டடைப்பன் நோய்	60
நெஞ்சடைப்பன் நோய் 6-வித முறை	60
உள்ளடைப்பன் நோய் 2-வித முறை	63
நெளியடைப்பன் நோய்	63
சங்கடைப்பன் நோய்	64
சதையடைப்பன் நோய்	64
சந்தடைப்பன் நோய்	65
செருக்கடைப்பன் நோய்	66
மூக்கடைப்பன் நோய்	66
வரட்டடைப்பன் நோய்	67
விரட்டடைப்பன் நோய்	67
சரட்டடைப்பன் நோய்	68
திரட்டடைப்பன் நோய்	68
காத்தடைப்பன் நோய்	69
குரட்டடைப்பன் நோய்	69
தாக்கடைப்பன் நோய்	70
நாக்கடைப்பன் நோய் 2-வித முறை	70
கதவடைப்பன் நோய் 3-வித முறை	71
மக்தடைப்பன் நோய்	73
நீரடைப்பன் நோய் 2-வித முறை	73
கல்லடைப்பன் நோய் 3-வித முறை	74
ஈளை மூக்கடைப்பன் நோய்	75
மூக்கடைப்பன் நோய் 7-வித முறை	75
தவளை மூக்கடைப்பன்நோய்	79
மூக்குத்தண்டடைப்பன் நோய்	79
சகல அடைப்பனுக்கு மருந்து	80
ஈரல்முட்டி நோய் 8-வித முறை	80
தடியீரல்முட்டி நோய்	84
கிராமுட்டியின் நோய் 2-வித முறை	84
வயிறு ஊதினல்	85
திரட்டி ஈரல்முட்டி நோய்	85
சுழத்தி நோய் 8-வித முறை	86
தவளை நோய் 6-வித முறை	90
தேளேறுமுடத்தின் நோய்	93
கறணை நோய் 2-வித முறை	94
அங்கிரி நோய்	96
உலர்த்தி நோய்	96
ஈரலுலர்த்தி நோய்	97
எரு உலர்த்தி நோய்	98
வறட்சி நோய்	98
பெரு நோய்	99
பெருவெக்கை நோய் 3-வித முறை	101

விஷயம்	பக்கம்
குன்னி நோய்	
3-வித முறை	102
குரல் நோய்	104
குரல்முட்டி நோய்	105
குதவளைத்தாக்கன் நோய்	105
குடல் நோய்	
2-வித முறை	106
குடல்வாத நோய்	
2-வித முறை	106
குடற்பளுவன் நோய்	107
குடல்முறுக்கு நோய்	108
குலை நோய்	
2-வித முறை	108
குலைப்பன் நோய்	109
குடை நோய்	
2-வித முறை	109
குட்ட நோய்	110
குழவிகடி நோய்	110
கொடு நோய்	111
கோல நோய்	111
புலி நோய்	
2-வித முறை	112
புலியின் நோய்	
4-வித முறை	113
சிறுபுள்ளு நோய்	
2-வித முறை	114
நம்புரி நோய்	115
கருங்காலி நோய்	116
மகாவிருட்டி நோய்	116
விருட்டி நோய்	
3-வித முறை	117
பன்றி நோய்	
3-வித முறை	119
பன்றித்தாக்கன் நோய்	121
பன்றிகுருக்கை நோய்	121
பன்றிமுட்டி நோய்	122
நன்குலை நோய்	122
காய்ச்சல் நோய்	
2-வித முறை	123
அஸ்திகரத்தின் நோய்	128
ஈரலைப்பற்றிய காய்ச்சல் நோய்	125
மந்தத்தைச் சார்ந்த காய்ச்சல் நோய்	125
ஜன்னிநோய் அல்லது காய்ச்சல் நோய்	126
ஜன்னி நோய்	
3-வித முறை	127
விருட்டி பெருநோய்	129
மூளையைப் பற்றிய ஜன்னிநோய்	129
முகவாத ஜன்னிநோய்	130
வலிப்பன் நோய்	
2-வித முறை	131
நாய்புரி நோய்	131
நாய்வலிப்பு நோய்	132
நரம்புவலிப்பு நோய்	133
கண்டவலிப்பு நோய்	133
கொடுவலிப்பு நோய்	134
குலைகூனிவலிப்பு நோய்	134
திருக்குவலிப்பு நோய்	134
குதிரைவலிப்பு நோய்	
3-வித முறை	135

விஷயம்	பக்கம்
ஆணிவலிப்பு நோய்	137
ஜன்னிவலிப்பு நோய்	138
முசல்வலிப்பு நோய்	138
வெதுப்பு நோய் 7-வித முறை	138
தீராத எருக்கல் 2-வித முறை	141
சீதளவெதுப்பு நோய்	142
சில்வெதுப்பு நோய்	142
பெருவெதுப்பு நோய்	143
குடல்வெதுப்பு நோய்	144
ஒழுக்குவெதுப்பு நோய்	145
மூலவெதுப்பு நோய்	145
மந்தவெதுப்பு நோய்	146
அழல்வெதுப்பு நோய் 3-வித முறை	147
இரத்தவெதுப்பு நோய் 2-வித முறை	149
கடுவெதுப்பு நோய்	150
சீதவெதுப்பு நோய் 2-வித முறை	150
பிரளிவெதுப்பு நோய்	151
சீதக்கழிச்சல் நோய் 4-வித முறை	152
இரத்தக்கழிச்சல் நோய்	153
கழிச்சல் நோய்	155
கிராணிகழிச்சல் நோய்	155
கழிகிற மாட்டுக்கு வேறுவிதம்	156
துர்ப்பல வியாதிக்கு	156
ஷை வியாதி குணமானபின் கொடுக்கவேண்டிய மசாலா	157
வேறு முறை	157
புள்ளிருந்தமாட்டின் நோய்	158

உ

கடவுள் துணை

மாட்டு வாகடம்

தெய்வ வணக்கம்

சுரிகுழலுங் கருவிழியு மதிமுகமு மொழிற்பிரபைத்
தோடார் காதும்
இருதனமு மபயவர தத்துடனே பளிக்குவட
மேடார் கையும்
அரியதுகின் மருங்கசைய வடியேற்குப் பலகலையு
மளித்தென் னுவிற்
பரிபுரமு முரலநட மாடுகின்ற பாரதிதாள்
பணிதல் செய்வாம்.

மாடுகளின் இலக்ஷணம்

சவாரி வண்டிகளுக்கு உபயோகமாய் வருகிற
காளைமாடுகள் கீழ்கண்ட லக்ஷணங்களை
பொருந்தி யிருந்தால் உத்தமம்.

நிறம்—மயிலை, கருமயிலை, சங்குவெள்ளை, கருவெள்ளை, சந்தனப்புல்லை, இருண்ட செவலை இந்த ஆறு நிறங்களும் உத்தமம்.

சரீரம்—நீண்டதாகவும், குதிரைச்சரீரம்போலத் திரட்சியாயும் இருக்கவேண்டும். முன் பின் உயரம் சமமாய் இருக்க வேண்டும்.

எலும்புகள்—பருமனாக இருக்கவேண்டும்

ரோமங்கள்—அழுத்தமாய் இருக்கவேண்டும்.

தலை—சிறிதாய் இருக்கவேண்டும்.

முகம்—நீண்டதாகவும், சதைபயன்னியிலும் இருக்க வேண்டும்

கொம்புகள்--பொடியாகவும், கறுப்புநிறமாகவும் இருக்க வேண்டும்.

கண்கள்—பெரிதாய் இருக்கவேண்டும்.

காதுகள்—சிறியதாய் இருக்கவேண்டும்.

நாடி—இரட்டைநாடி அல்லது ஒதுக்குநாடியாய் இருக்க வேண்டும்.

கழுத்து—இரட்டைக் கழுத்தாய் இருக்கவேண்டும்.

நாரை—தொங்காமல் ஒட்டி இருக்கவேண்டும்.

கடைவயிறு—கைக்கு ஒரு ஒட்டைநீளத்துக்கு அதிகப் படாமல் இருக்கவேண்டும்.

குறுக்கு—இரட்டைக் குறுக்காய் இருக்கவேண்டும்.

தொப்பூழ்—ஒட்டி இருக்கவேண்டும்.

பிட்டி—விரிவாய் இருக்கவேண்டும்.

வால்—பொடியாகவும், சாணிபோடும்போது தூக்கி மடக்கிக்கொள்ளும் தன்மையுள்ளதாகவும் இருக்கவேண்டும்.

பின்பக்கம்—விரிவாக இருக்கவேண்டும்.

பவளவாய்—சிறுசாக இருக்கவேண்டும்.

தாரை—கறுப்புநிறமாய் இருக்கவேண்டும்.

கால்கள்—கனமாகவும், குறியதாகவும் இருக்கவேணும்.

சந்துகள்—அடைப்பாக இருக்கவேண்டும்.

குளம்புகள்—குத்துக் குளம்பாயும், கற்குளம்பாயும் இருக்கவேண்டும்.

சுழிகள்—சிமிழின்மேல் ஒற்றைச்சுழி யிருப்பது உத்தமம். அதற்கு ரிஷபச்சுழி யென்று பெயர். முதுகில் பட்டரைச்சுழி இருக்கவேண்டும். இந்தச்சுழி சிமிழிலிருந்து பின்னே ஒரு சாணுக்குள் ஒற்றையாக யிருக்கும். அல்லது நடுமுதுகுக்குப் பின்னேயும் ஒற்றைச்சுழி யிருக்கலாம். இதற்குப்பின் பட்டரைச்சுழி யென்று பெயர். நெற்றியில் இரண்டுசுழி ஒன்றன்பின் கீழ் ஒன்று நேரே கீழ்நோக்கி

யிருப்பது உத்தமம். இதற்குக் குடைமேற்குடை என்று பெயர்.

குறிப்பு:—மாடு விலைக்கு வாங்கப் பார்க்கும்போது அந்த மாடு தன் ஒற்றைவிலாவை அல்லது வயிற்றை நக்கினாலும், தன் தலையைக் கீழும் மேலும் அசைத்தாலும் நல்ல சகுனம் என்று இந்துக்களால் எண்ணப்படுகிறது.

மாடுகளுக்கு உரிய குற்றங்கள்

சவாரி வண்டிகளுக்கு உபயோகமாய் வருகிற
காளைமாடுகள் கீழேகண்ட
குற்றங்களைப் பொருந்தி யிருத்தல் ஆகாது.

[அவையவம் - அடையாளம் - பலன்]

1 அவையவம் - கெருடமுகம் அல்லது முகவெண்டலை.

அடையாளம் - முகத்தில்மட்டும் வெள்ளை நிறமாய் இருக்கும்.

2 அவையவம் - ஊற்றுக்கண்.

அடையாளம் - கண்ணிலிருந்து தண்ணீர் வடித்துக் கொண்டு இருக்கும்.

பலன் - நாட்சென்றால் பார்வை குன்றும்.

3 அவையவம் - சதைக்கண்.

அடையாளம் - கண்ணின் கடையிற் சிவந்த நிறமாகச் சதை படர்ந்திருக்கும்.

பலன் - மேற்கண்டபடி.

4 அவையவம் - புள்ளிக்கண்.

அடையாளம் - கடைக்கண்ணில் வெள்ளை நிறமாகப் புள்ளி இருக்கும்.

5 அவையவம் - தொங்கு காது.

அடையாளம் - காதுகள் நேரே விறைப்பா யில்லாமல் கீழ்நோக்கித் தொங்கிக்கொண்டு இருக்கும்.

பலன் - வேகமிராது.

6 அவையவம் - கொள்ளிக்கொம்பு.

அடையாளம் - கொம்பின் முனை தட்டையாகவும், கறடு பாய்ந்தும், உச்சியில் கொஞ்சம் பள்ளமாகமும், கூர்ந்து பார்க்கில் அந்தயிடம் தீவிரமாகவும் இருக்கும்.

7 அவையவம் - தோற்கொம்பு.

அடையாளம் - கொம்பு அலைந்துகொண்டிருக்கும்.

8 அவையவம் - இடங்கட்டுக் கொம்பு.

அடையாளம் - வலது கொம்பு முன்னாகவும், இடது கொம்பு பின்னாகவுங் கூடி ஒன்றோடு ஒன்று ஒட்டியிருக்கும்.

9 அவையவம் - தடிக்கொப்பு.

அடையாளம் - கொம்பு நிரம்பவும் பருமனாக யிருக்கும்.

10 அவையவம் - காடுபார்த்த கொம்பு.

அடையாளம் - வலதுகொம்பு வலதுபுறத்தைப்பார்க்கச் சாய்ந்தும், இடதுகொம்பு இடதுபுறத்தைப் பார்க்கச் சாய்ந்தும் இருக்கும்.

11 அவையவம் - பருந்தலை.

அடையாளம்-தலை உடலளவுக்கு மிகுதியாக இருக்கும்.

பலன் - மந்த நடையாக இருக்கும்.

12 அவையவம் - ஒற்றைநாடி.

அடையாளம் - முன்காலடி மத்தியில் ஒரு நரம்பு ஓடி யிருக்கும்.

பலன் - சரீரம் மெலிவாக இருக்கும்.

13 அவையவம் - தொங்கு நாரை.

அடையாளம்-கழுத்தடியில் அதிகமாகத்தசைதொங்கும்.

பலன் - மந்த நடையாக இருக்கும்.

14 அவையவம் - ஒற்றைக்கழுத்து.

அடையாளம்-மாட்டின் தலையைக் குனியச்செய்துபார்த்தால் கழுத்தின் மேற்பக்கம் படலமாயில்லாமல் ஒடுங்கினதாய் இருக்கும். பலன் - கழுத்துப் பிலமிருக்க மாட்டாது.

15 அவையவம் - ஒட்டுக்கழுத்து.

அடையாளம் - கழுத்து உடலின் அளவுக்குத் தக்க நீளமும் பருமனும் இல்லாதிருக்கும்.

பலன் - கழுத்துப்பில மிருக்கமாட்டாது.

16 அவையவம் - சாய்வு சிமிழ்.

அடையாளம் - சிமிழ் அதிகமாய்ப் பருத்து நடக்கும் போது சாயும்.

17 அவையவம் - முதுகு நெளிவு.

அடையாளம் - முதுகு மத்தியில் நெளிந்திருக்கும்.

பலன் - குறுக்குப்பிலம் இருக்கமாடடாது.

18 முன் தணிவு.

அடையாளம் - சரீரத்தின் மேற்புரத்தில் சிமிழோரமா யிருக்கிற முன்பக்கம், பின்பக்கத்தைப் பார்க்கிலும் தணிந்து இருக்கும்.

பலன் - வண்டியில் தலைகுனிந்தே வரும்.

19 அவையவம் - தொங்கு தொப்பூழ்.

அடையாளம்-ஒட்டியிராமல் தொங்கிக்கொண்டிருக்கும்.

பலன் - சற்றுத்தூரம் ஓடினுல் அயர்ந்துபோம்.

20 அவையவம் - இறங்குசட்டம்.

அடையாளம் - வால் அடியில் இரண்டுபக்கமும் பின் குறுக்கின் பிரதான எலும்பிலிருந்து அதிகமாகக் கீழ்நோக்கிச் சாய்ந்திருக்கும்.

பலன் - பின்பலம் இருக்கமாட்டாது.

21 அவையவம்-பூவால் அல்லது வெடிவால்.

அடையாளம் - வால் நுனியில்மட்டும் வெள்ளை நிறம் இருக்கும்.

22 அவையவம்-தடிவால்.

அடையாளம்-மிகவும் பருத்து இருக்கும்.

பலன்-மந்தமாய் இருக்கும்.

23 அவையவம்-தொடையடி கூழை.

அடையாளம்-வால்முட்டுக்குக்கீழ்வராமல் தொடைக்குச் சமமாகக் கூழையாக இருக்கும். அதில ரோமம் இல்லாமலும் அல்லது சொற்பமாயும் இருக்கும்.

24 அவையவம்-கொள்ளிக்கால்.

அடையாளம - ஒற்றைக்காலில் மட்டும் வெள்ளைநிறம் இருக்கும்.

25 அவையவம்-சாத்துக்கால்

அடையாளம்-முன்காலின் முட்டுகள் சமீபமாய் உள் பக்கம் நெருங்கி இருக்கும்.

பலன-ஓடமாட்டாது.

26 அவையவம்-இணையடிகால்.

அடையாளம் - நடக்கும்போது முன்கால்கள் ஒன்றோடொனறு உறையும்.

பலன்-ஓடமாட்டாது.

27 அவையவம்-பின்னுகால்.

அடையாளம் - நடக்கும்போது பின்னத்தின் கால் இரண்டும் நேரே வையாமல மாறி மாறி வைக்கும்.

28 அவையவம-வெட்டுக்கால்.

அடையாளம் - நடக்குமபோது பின்கால் குளம்பின் முனையைப் பூமியில் தேய்ததுக்கொண்டு நடக்கும்.

பலன்-குளம்பு சீக்கிரததில் அற்றுப்போகும்.

29 அவையவம்-மந்திக்கால்.

அடையாளம்-பினகால் முட்டுநிரம்பவும்வளைந்திருக்கும்.

பலன்-சவாரியில் சீக்கிரததில் கால் ஓய்ந்துபோகும்.

30 அவையவம்-அரைகுளம்பு.

அடையாளம - நடக்குமபோது முன்கால் குளம்பைத் திருக்கப பூமியில தேயததுகொண்டு நடக்கும.

பலன-தேயப்படுகிற குளம்பு சீக்கிரம் அறறுப்போகும்.

31 அவையவம்-விரிகுளம்பு.

அடையாளம்-குளம்பின் இருபாகமும் நெருங்கி இராமல் விரிவாய் இருக்கும்.

பலன்-மண் கல் முதலானது குளம்பின் இடையிலேறித் துன்பம் உண்டாகும்.

32 அவையவம்-பணப்புள்ளி.

அடையாளம்-சரீரமெங்கும் கலிப்பணம்போல வெள்ளையாகப் புள்ளிகள் இருக்கும்.

பலன் - இந்தப்புள்ளி நூற்றுக்கு அதிகமாயிருந்தால் குற்றமில்லை என்று சேர்த்துக் கொள்ளுவாரும் உண்டு இக்குற்றம் வெள்ளைமயிலை இந்த நிறமுள்ள மாடுகளுக்கு இராது.

33 அவையவம்-தொழுமறை அல்லது பால்மறை.

அடையாளம் - சரீரமெங்கும் சுமார் ஒருதுட்டு அகலம் வட்டம் வட்டமாய் இருக்கும்.

பலன்-இது குற்றமில்லை என்று சொல்லுவாரும் உளர்.

34 அவையவம்-தடிமறை.

அடையாளம் - மேற்கண்ட விதப்படி தடிப்பாக இருக்கும் கையினால் தடவினாலும் தடிப்புத்தோன்றும்.

பலன்-சற்றுதூரம் வெளியில்போனால் இளைத்துப்போம்.

35 அவையவம்-சுண்டுவாதம்.

அடையாளம்-கட்டுத் தலத்திலிருந்து அவிழ்த்தவுடனே நடக்கும்போது கொஞ்சதூரம் பின்கால்கள் இரண்டு அல்லது ஒன்று சுண்டி நடக்கும்.

36 அவையவம்-கால்வாரி.

அடையாளம் - கட்டுத் தலத்தில் நிற்கும்போது முன் காலைக்கொண்டு பூமியைப் புறண்டிக்கொண்டு நிற்கும்.

37 அவையவம்-உடலாட்டம்.

அடையாளம்-கட்டுத தலத்தில் நிற்கும்போது சரீரத்தை எப்போதும் அசைத்துக்கொண்டே நிற்கும்.

38 அவையவம்-சுடுகாடு நக்கி.

அடையாளம்-முன்வாயில் சுழி இருக்கும் அல்லது முன் வாயில் தன் நிறத்துக்குப் பேதமான நிறத்தில் நெருக்கமாய்ப் புள்ளிகள் இருக்கும் அல்லது கொடிப்போல படர்ந்திருக்கும்.

39 அவையவம்-இடிமேல் இடி.

அடையாளம் - நெற்றியில் இரண்டு அல்லது மூன்று சுழிகள் ஒன்றைப் பார்க்க ஒன்று எதிர்த்திருக்கும் அல்லது மேல் நோக்கி இருக்கும்.

40 அவையவம்-வாய்ப்பூட்டு.

அடையாளம் - கீழ்வாய் முகக்கட்டையில் இரண்டு சுழி இருக்கும்.

41 அவையவம்-செவிப் பாம்பு

அடையாளம்-கன்னக்கட்டை ஓரமாகக் காதின் அடியின் கீழ் தன் நிறத்துக்குப் பின்னமாக நிறத்தில் ஒரு நீண்ட சுழி இருக்கும்.

[சுழிகள் - பலன்]

1 சுழிகள்-முற்பாடை பிற்பாடை.

அடையாளம்-முதுகில் முன் பின்னாக இரண்டு சுழிகள் இருக்கும்.

2 சுழிகள்-விலங்கடி.

அடையாளம்-முதுகில் குறுக்காக இரண்டு சுழிகள் இருக்கும்.

3 சுழிகள் - ஷை.

அடையாளம்-பின்சட்டம் இரண்டிலும் இரண்டு சுழிகள் இருக்கும்.

4 சுழிகள் - ஷை.

அடையாளம் - முன்கால் இரண்டிலும் உட்புறத்தில் ஒன்றைப்பார்க்க ஒன்று சுழிகள் இருக்கும்.

5 சுழிகள் - கெடி.

அடையாளம் - முதுகில் குறுக்காக இரண்டு சுழிகள் ஒன்றோடு ஒன்று சம்பந்தப்பட்டிருக்கும்.

பலன்-இச்சுழியை டம்மாணச் சுழிகள் என்று சொல்லு வதும் உண்டு.

6 நீர்ச்சுழி. அடையாளம் - முதுகில் கோசத்துக்கு நேரே ஒரு சுழிமட்டும் இருக்கும்.

பலன்-இந்தச் சுழியில் கைவிரலை வைத்துத் தேய்த்தால் உடனே மாடு நீர்விடும்.

7 சுழிகள்-உழவனைப்பார்த்த பூதம்.

அடையாளம் - முதுகில் நீளமாக ஒற்றைச் சுழி வாலைப் பார்க்க இருக்கும்.

பலன்-இந்தச் சுழி தலையைப்பார்க்க இருந்தால் தோஷ மில்லை.

8 சுழிகள்-ஏறுநாகம்.

அடையாளம்-பவனவாய்க்குக் கீழே தாரையில் சர்ப்பப் படம்போலே மேல்நோக்கிச் சுழி இருக்கும்.

9 சுழிகள்-இறங்கு நாகம்.

அடையாளம்-மேற்கண்ட சுழி கீழ்நோக்கி இருக்கும்.

10 சுழிகள்-கவ்வம்.

அடையாளம்-முன்னூரத்தில் இரண்டுபுறமும் சுழிகள் இருக்கும்.

11 சுழிகள்-ஒற்றைக்கவ்வம்.

அடையாளம்-மேற்கண்ட சுழி ஒருபுறமிருக்கும்.

12 சுழிகள்-பெண்டிழந்தான்.

அடையாளம் - வாலின் அடிக்குப் பக்கத்தில் குண்டி ஒன்று அல்லது இரண்டினில் மேல்நோக்கி அல்லது கீழ் நோக்கிச் சுழி இருக்கும்.

13 சுழிகள் - கறட்டு ஓந்தான்.

அடையாளம் - வாலின்மேல் கட்டாரிபோலவும் மயிர் வகிர்ந்து விட்டது போலவும் இருக்கும்.

குறிப்பு—(1) மேற்சொல்லிய குற்றங்களில் தொங்கு காது தடிக்கொம்பு பருந்தலை ஒற்றைநாடி தொங்குநாரை ஒற்றைக்கழுத்து ஒட்டுக்கழுத்து முதுகுநெளிவு முன்றணிவு தொங்கு தொப்பூழ் இறங்குசட்டம் தடிவால் மந்திக்கால் இப்பதின்மூன்றும் பாரவண்டிகளுக்கும் உழவுக்கும் உபயோகிக்கிற மாடுகளுக்கு விசேஷ தோஷமாகமாட்டாது.

குறிப்பு—(2) மாடு விலைக்கு வாங்கப் பார்க்கும்போது தன் பின்காலைக்கொண்டு தலையைச் சொரிந்தாலும், முன் காலால் பூமியைப் புறண்டினாலும், தலையை வலம இடமாக அசைத்தாலும் சகுன விரோதம் என்று எண்ணப்படுகிறது.

எருத்துப்புரை

மாடுகளுக்குப் பிணி அணுகாமல் கூடியவரையில் காப்பாற்றுவதற்கு அவைகளை எப்போதும் கட்டியிருக்கிற புரையைச் சரியான விதத்திலும் துப்புரவாயும் வைத்திருக்க வேண்டுவது அவசியம்.

எருத்துப்புரை கூடியவரை உயர்வான மேடுள்ளதாயும் காற்று சாதாரணமாய் உள்ளே பிரவேசிக்கவும், உள்ளேயிருக்கிற துர்க்கந்தக்காற்று வெளியே போகும்படிக்கான விதமாய்க் கட்டப்பட்டிருக்கவேண்டும்; நிறம்பத் தணிவாகவும் இருட்டாகவும் காற்றோட்டத்துக் கிடமன்னியிலும் இருக்கலாகாது. வருஷா காலங்களில் வெளிப்பக்கத்தில் விழுகிற ஜலத்தினால் புரையின் தளம் நீரூற்றுக்கொள்ள இடமன்னியில் உயர்வாயிருக்க வேண்டும். மேலும் தளம் மேடு பள்ளமன்னியில் சமமாகவும் அடிப்பக்கத்தைப் பார்க்கிலும் மாட்டின் கால்பக்கம் மாடு நீர்விட்டால் சாதாரணமாய் வெளியே போய்விடும்படியான விதத்தில் கொஞ்சம் சுலோப்பாயும் இருக்கவேண்டும். தளம் சுத்தமண்ணாயிருக்கிற விஷயத்தில் மாடு நீர் விடுகிறதினால் அசத்தியுண்டாகவும், அடிக்கடி ஜீரண

மாய்ப் போகவும் நேரிடுமானதால் சரலைக் கனமாய்ப் பரத்திக் கெட்டி செய்யவேண்டும். சுவர்களைச் சுண்ணும்பு குருகுமண் அல்லது செம்மண்ணுல் மூன்று மாதத்துக்கு ஒருதடவை யாவது பூசிச் சுத்தப்படுத்தவேண்டும். தினந்தோறும விழுகிற நீர் சாணம் குப்பை முதலானதை இரண்டு தடவைகளுக் குறையாமலெடுத்து வெளிப்படுத்திக் கூடியவரை துப்புரவு செய்யவேண்டும். அசுத்தங்களால் மாடுகளுக்கு நோய் அணு காமல் செய்வதற்குப் பன்றிநெய்யும் சோற்றுக கற்ருழையும் உசிதமான பதார்த்தங்கள் ஆனதால் எருதுப்புரையின தக்கு களில் கற்ருழை மூட்டை கொண்டுவந்து எப்போதுந தூக்கி வைககவேண்டியதுந் தவிர, பனறிநெய்யைக் கலசங களில் வைத்துத் துணியில் மூடிக்கட்டிப் புரைக்குள் தூக்கி இருக்கவேண்டும். வாரத்துக்கு ஒருதபா அந்தப பனறி நெய்யிற் கொஞ்சமெடுத்து மாட்டின் கண் மூககு செவி இதுகளில் தேயதது உள்ளுக்கும் கொஞசம் கொடுக்கவும். சிலநாளைக்கு ஒருதடவை புரைக்குள் சாம்பிராணிப்புகை காட்டுவது உததமமாய் இருக்கும்.

மாட்டுக்கு தினஞ் செய்யவேண்டிய நியமம்

சவாரிமாட்டைத் தினந்தோறும காலமே 6-மணிக்குச் சாயந்திரம 4-மணிக்கு கட்டுததறியைவிட்டு அவிழ்தத வுடனே தலை உயர்ந்திருக்குமபடி தூக்கிக் கட்டிச் சவரியனல் செய்த குதப்பன் அலலது வைக்கோலால கொசுககடி அழுககு முதலானது போகும்படி சரீரம முழுக்கத் தேய்த்துப் பினபு சரீரத்திலிருக்கிற கழிவு ரோமஙகள் உதிருமபடி கைகளினல் சரீரம் முழுக்க மாலீஸ்செய்து துடைதது முகம கண் காது மூக்கு சரடு கால்கள் இவைகளைக் குளிர்ந்த தண்ணீரினல் கழுவி அநத ஈரம் உலருகிறவரை அபபடியே நிறுத்தியிருந்து பின்பு மாட்டை யவிழ்த்து முன் கட்டி யிருந்த இடமல்லாத வேறொருயிடத்தில் கட்டித் தீனி போட வேண்டும.

சவாரிபோனல் அப்படிப் போய்வந்தவுடனே மாட்டின வாயிலிருக்கிற வெண்ணுரையைக் கையினல துப்புரவா

வழித்து மேற்கண்டபடி மாலிஸ் முதலானது செய்து தண்ணீர் குடிக்கச்செய்து கட்டுத்தடியில் கட்டவேண்டும். சவாரி போயவந்தவுடனே வாயிலிருக்கும வெண்ணுரையை வழிக்காவிட்டால் அந்த நுரை மாட்டின் வயிறறுக்குள் போகவும் அதினால் மாட்டுக்கு வியாதி யுண்டாகவும் நேரிடும்.

மாலிஸ் செய்கிறதினால் மாட்டுக்குத் தினந்தோறும் தேகத்தில் உண்டாகிற வலி தீரவும், சோம்பல் நீங்கி சுரு சுருப்பு உண்டாகவும், கழிவுரோமங்கள் உதிரவும் இடமாயிருக்கும். இப்படிச் செய்யாவிடில் மாட்டின் தோலில் உட்புறத்தில் கிருமிகள் உற்பத்தியாகி அதினால் தினவு முதலான பலவிதமான சருமவியாதிகள் சம்பவிக்கும் என்று டாக்டர் கில்கிறிஸ்ட்டு துரை அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

தண்ணீர் குடிக்கச்செய்யும் தன்மை

காலமே மேற்குறித்தபடி மாலிஸ் செய்தபின்பு சுமார் 8-அல்லது 9-மணிக்குச் சாயங்காலம் அப்படி மாலிஸ் செய்யு முன் 4-மணிக்கு தண்ணீர் குடிக்கச் செய்யவேண்டும். ஆனால் சவாரி மாடுகளுக்கு காலமேயாவது சாயங்காலமாவது சமீபதூரஞ் சவாரி போகவேண்டியிருந்தால் அப்படிப் போய் வந்த பின்பும் நிரம்பத் தூரம் சுவாரிபோக வேண்டியிருந்தால் அப்படிப் போவதற்கு சுமார் ஒருமணி நேரத்துக்கு முன்பும் தண்ணீர் குடிக்கச செய்யவேண்டும். சவாரி மாடுகளுக்கு சுத்தஜலம் கொடுப்பதே உசிதம். கழுநீர் முதலான ஊறல் ஜலங்குடித்தால் வயிறு பெருகவும் சவாரியில் எருகவுமான கெடுதலுக்கு இடமுண்டாகும். பாரவண்டி மாடுகளுக்கு ஊறல் ஜலங்கொடுப்பது மெத்தப் பிரயோசனந்தான். பருத்திவிதையை முதனாள் அரைத்து காடி கழுநீர் அல்லது சுத்தஜலததில் கலக்கி வைத்திருந்து மறுநாள் அதைத் தொட்டியில்விட்டு மேலே கொஞ்சம முழுப் பருத்தி விதையைத் தூற்றிக் குடிக்கச் செய்யவேண்டும்.

தீனி-(உணவு)

மாடுகளுக்குப் போடுகிற தீனிகளில் சோழநாற்று எல்லாவற்றிலும் உபயோகமுள்ள தன்மையுள்ளது. அது கிடையாத இடங்களில் கார்ச்சம்பாநெல் வைக்கோல் உசித மானது மற்ற வைக்கோல் முதலான தீவனங்கள்-(உணவு) அவ்வளவு பிரயோசன முள்ளதல்ல. பச்சைப்புல் பொதுவாய் நன்மையுள்ளதாக இருந்தாலும், சவாரிமாடுகள் அதைத் தின்றால் சவாரியில் எருக்கல் உண்டாகும் ஆனதால் அவ் வகை மாடுகளுக்குப் புல் தீவனம்போடுவது உசிதமல்ல. எவ்வித தீவனமும் மாட்டுமுன்பாக ஒரேமட்டாய் அதிகமாக வைத்துவிடாமல் தின்னத் தின்ன கொஞ்சம் கொஞ்ச மாக வைத்து வரவேண்டும். தீவனங்களை ஒரேமட்டாய் நிரம்பப்போடுகிற பக்ஷத்தில் மாடுகள் அவாவுடனே தின்ன மாட்டா. அதுவுந்தவிர தீவனமும் வீணாய்ச் சேதமாகவும் போகும்.

விசேஷ தீவனம்

மாடுகளுக்குச் சாதாரணமாய் வைத்துவருகிற மேற் குறித்த தீவனத்தைத் தவிர விசேஷ தீவனம் கொடுத்து வரவேண்டுவதும் அவசியம்.

பச்சைக்கடலை கொள்ளு (பச்சைக்காணம்) பருத்தி விதை இவைகளில் அவரவர்களுடைய சௌகரியத்துக்குத் தக்கதை கீழேகண்ட விதிப்படி மாடுகளுக்குக் கொடுத்து வரவேண்டும்.

மேற்சொன்ன தினுசுகளிலொன்றை தனிமையாக வாவது, இரண்டு அல்லது மூன்றையுஞ் சேர்த்தாவது கொடுக்கலாம். இந்தத் தீவனம் மாடுகளுக்குச் சதையையும் இரத்த விருத்தியையும் பலத்தையும் உண்டாக்கத்தக்கது. சொற்பமாவது தினந்தோறும் கொடுத்துவருவதே உசிதம். சிலநாட்களுக்கு ஒருதடவை அமோகமாகக் கொடுக்கிற தினால் யாதொரு பிரயோசனமுமில்லை. மேலும் அப்படி கொடுக்கிற தீவனம் சாதாரணமாய் சீரணத்துக்குவர இட மன்னியில் வியாதியை உண்டாக்கத் தக்கதாயும் இருக்கிறது.

மேற்குறித்த தினுசுகளில் பச்சைக்கடலை முதல்தரத் தீவனம் இதை கீழே சொல்லியிருக்கிற அளவுப்படி காலமே தண்ணீரில் நனையப்போட்டு சாயங்காலம் தண்ணீரை வடிய வைத்து மாட்டுக்கு வைக்கவேண்டும்.

பச்சைக்காணத்தை வெயிலில் நன்றாய்க் காயப்போட்டு எடுத்து திரிகையிற்போட்டு ஒருகாணம் ஐந்து ஆறு ஆகும்படி யுடைத்து அதைப் பகல் 12-மணிக்கு சீரான தண்ணீர் கொடுத்து நனைத்து வைத்திருந்து சாயங்காலம் மாட்டுக்கு வைக்கவேண்டும். நனைக்கிறதற்காக விடுகிற தண்ணீர் செவ்வையாய் ஊறுவதற்கு இடமன்னியில் குறைய கூடாது. மடியவைக்கும்படி அதிகமாக இருக்கவுங் கூடாது. காணத்தை வேகவைத்துப் போடுகிறதினால் உஷ்ணம் அதிகப்படு படுமானதால் மேற்கண்டபடி பச்சையாகப் போடுவது நன்மை.

பருத்திவிதையை முதல்நாள் இராத்திரி தண்ணீரில் ஊறப்போட்டு வைத்திருந்து மறுநாள் காலையில் 10-மணிக்கு அது ஊறப்போட்டிருக்கிற பாத்திரத்தின்மேலே வைக்கோலை யமுக்கி குப்புறக் கவிழ்த்து வைத்திருந்து சாயங்காலம் எடுத்து மாட்டுக்கு வைக்கவேண்டும். குப்புறக் கவிழ்த்தின பாத்திரம் மாட்டிற்குப் பருத்திவிதை வைக்கப்போகிற பரியந்தம் அந்த நிலைமையிலேயே யிருக்கவேண்டும். அல்லது முன்னாடி நிமிர்த்தினால் அந்தப் பாத்திரத்துள் காற்றுப் பிரவேசித்து ஊறினவிதை யுலர்ந்து போகாதிருக்கும்படி ஒரு பாத்திரத்தால் மூடி வைக்கவேண்டும். வைக்கோலை அமுக்குவதின் பிரயோசனம் விதையில் மண் ஒட்டாமலிருக்க வேண்டியதற்காகத்தான். கடலை காணம் பருத்திவிதை இவைகளில் எதையும் மேற்கண்டபடி பக்குவஞ் செய்வதற்கு முன்னாடி கல் மண் ரோமம் முதலானவைகளை நீக்கிப்போட வேண்டியதில் ஜாக்கிரதையாய் இருக்கவேண்டும். இந்தத் தினுசுகளுடன் தவிட்டைச் சேர்த்து போடுவது சவாரி மாடுகளுக்கு நன்மையானதல்ல. சாணி ஜாஸ்தியாகவும் நெகிழ்த்தியாகவும் போடுகிறதற்குந் தண்ணீர் அதிகமாகக்

குடித்து அதினால் வயிறு பெருகுகிறதற்குக் காரணமாகும். ஆனால் பாரவண்டி மாட்டுக்குத் தவிடு சேர்த்துப் போடுகிறது நலந்தான்.

உயரமான எருதுகளுக்கு தினந்தோறும் போடவேண்டிய தீனியின் அளவு

தனிப்பச்சைக்கடலை	படி	2
தனிப்பச்சைக்காணம்	,,	3
தனிப்பருத்திவிதை	,,	4
பச்சைக்கடலையும் பச்சைக்காணமும்		
பச்சைக்கடலை	,,	1
பச்சைக்காணம்	,,	$1\frac{1}{4}$
பச்சைக்கடலையும் பருத்திவிதையும்		
பச்சைக்கடலை	படி	1
பருத்திவிதை	,,	2
பச்சைக்கடலையும் பச்சைக்காணமும் பருத்திவிதையும்		
பச்சைக்கடலை	,,	$\frac{1}{4}$
பச்சைக்காணம்	,,	1
பருத்திவிதை	,,	2
பச்சைக்காணம் பருத்திவிதையும்		
பச்சைக்காணம்	,,	$1\frac{1}{4}$
பருத்திவிதை	,,	$2\frac{1}{4}$

உபயோகிக்கும் விதம்:—மேற்குறித்த உயரத்துக்குக் கம்மி ஜாஸ்தியுள்ள மாடுகளுக்கு அந்தந்தத் தரத்துக்குந் தக்கபடி இந்தப் பிரமாணத்தை வைத்து நிதானித்துக் கொள்ளவேண்டும். விசேஷ தீவனம் தினந்தோறும் போட்டு வர சௌகரியமில்லாதவர்கள் ஒன்றுவிட்டு மறுநாளாவது

தப்பாமல் போட்டு வரவேண்டும். அப்படிக்கானுல் மேற் குறித்த அளவுக்குக் கொஞ்சம் ஜாஸ்தி செய்துகொள்ள வேண்டும்.

குளிப்பாட்டல்

மாட்டை வாரத்தில் ஒருதபாவுக்குக் குறையாமலும் 2-தடவைக்கு அதிகப்படாமலும் குளிப்பாட்டவேண்டும். ஆழமாயும் கூடியவலை சுத்தமாயுமுள்ள தண்ணீரில் கொண்டு போய் பவனவாய் தெரியும்படி நிறுத்திவைத்துத் தேகமெல் லாம் செவ்வையாய்த் தேய்த்துக் குளிப்பாட்டித் தண்ணீரில் கொஞ்சம் நீந்தும்படி செய்து கொண்டுவந்து காசாவிற் கட்டியிருந்து (காசாவிற் கட்டுதல்-மாட்டுத்தலையை ஏற தூக் கிக் கட்டுதல்) ஈரம் உலர்ந்தபின் கட்டுத்தறியில் கட்ட வேண்டும். குளிப்பாட்டியானவுடனே சவாரி போகாமலிருக் கும்படி பார்த்துக்கொள்ளவேண்டும். ஒருவேளை நதி முத லான இடங்களுக்கு சவாரிபோயிருந்து அவ்விடத்தில் குளிப் பாட்டும்படி நேரிடுகிற பக்ஷத்தில் குளிப்பாட்டி யானதின் பேரில் வண்டியில் மாட்டை ஓட்டாமல் தன் நடையாகக் கொண்டுவர வேண்டும். பாரவண்டிமாட்டை நடந்து வந்த வுடனே குளிப்பாட்டுவது நல்லது. ஆனல் பின்பு அன்றைத் தினம் நடையில்லாமல் இருக்கும்படி செய்யவேண்டும்.

வெள்ளைப்பூண்டு மசாலா

வெள்ளைப்பூண்டு	பலம்	5
மஞ்சள்	,,	2
மிளகு	,,	2
சுக்கு	,,	2
ஓமம்	,,	$1\frac{1}{4}$
கருஞ்சீரகம்	,,	2
காட்டுச்சீரகம்	,,	2
கடுகுரோகணி	,,	$\frac{1}{4}$
வால்மிளகு	,,	2
வாய்விளங்கம்	,,	2
வசம்பு	,,	$\frac{1}{4}$

மாசிக்காய்	பலம்	2
மருட்டிமொக்கு	,,	1
அபினி	,,	¼
சருள்ளி	,,	20
வெல்லம்	,,	10

உபயோகிக்கும் விதம்:—இவைகளை நன்ருய் இடித்து 10-பலம் நெய்விட்டுப் பிசைந்து எலுமிச்சங்காய்ப் பிரமாணம் உருட்டி வைத்துக்கொண்டு சவாரி போய் வந்தவுடனே கொடுத்து வரவேண்டும். மாடு தாசாவாகும்.

இஞ்சி மசாலா

இஞ்சி	பலம்	1
மிளகு	,,	¼
வெல்லம்	,,	5

உபயோகிக்கும் விதம்:—இவைகளை இடித்துக் காலமே கொடுக்கவேண்டியதுந் தவிர, மாலையில் வெல்லம் பலம்-5, நெய் பலம்-5, இவ்விரண்டும் கொடுக்கவேண்டியது. இந்தப் படி ஒருமாசம் குறையாமல் தினந்தோறும் கொடுக்க வேண்டும். மாடு தாசாவாகும்.

ஆட்டுத்தலை மசாலா

செம்மறி ஆட்டின்தலை இரண்டு, கால் எட்டு இவைகளைத் தீயில் வாட்டி ரோமங்களைப் போக்கித் தரித்து ஒரு பானையில்போட்டு அது மூங்கும்படி தண்ணீர்விட்டு எலும்புகள் வெள்ளை நிறம் வருகிறவரை வேகவைத்து வெந்தபின்பு எலும்புகள் முழுக்கப்பிறக்கி உதறியெடுத்து வேறொரு பாத்திரத்திற்போட்டு வேறு தண்ணீர்விட்டு நன்ருய்க்கழுவி அந்த எலும்பைத் தூரப்போட்டுவிட்டுக் கழுகின ஜலத்தை மூந்தின தண்ணீருடனே விட்டு அதிலிருக்கிற வெந்த மாமசங்களை எடுத்து வேறு பாத்திரத்தில் வைத்துக்கொண்டு ஷை தண்ணீரில் 2-படி பச்சை அரிசியைத்தட்டி வேகவைக்க வேண்டியது. வெந்ததின் பின்பு ஷை மாம்சங்களையுங் கூடப்

போட்டு 2-படி திரித்த உழுந்துமாவையும் தட்டிக் கிண்டிக் கொஞ்ச நேரஞ்சென்று இறக்கி,

(ஒருபலம் என்பது ரூபாயிடை $5\frac{1}{4}$)

மஞ்சள்	பலம்	1
மிளகு	,,	2
சீரகம்	,,	1
கொத்தமல்லி	,,	3
இஞ்சி	,,	3
சுக்கு	,,	3
ஓமம்	,,	3
வசம்பு	,,	$\frac{1}{4}$
கடுகு	,,	$1\frac{1}{4}$
சருள்ளி	,,	10
வெள்ளைப்பூண்டு	,,	5
நறுக்குமூலம்	,,	$1\frac{1}{4}$
திப்பிலி	,,	$1\frac{1}{4}$
காருகோலரிசி	,,	$1\frac{1}{4}$
மிளகாய்வத்தல்	,,	1
சன்ன இலவங்கப்பட்டை	,,	2
சிறுநாகப்பூ	,,	1
காயம்	,,	$\frac{1}{4}$
நல்லெண்ணை அல்லது நெய்	,,	1

உபயோகிக்கும் விதம்:—இந்த மருந்துகளில் ஓமத்தை இளவறுப்பாக வறுத்தும், மற்றதைப் பச்சையாகவும் இடித்துத் தூள்பண்ணி, ஷை தூளையும் அதில் தட்டி எண்ணையையும் விட்டுப் பிசைந்து, இரண்டு மாடுகளுக்கும் கவளமாகக் கொடுக்கவும். சாயங்காலம் குடிக்க வெந்நீர்விடவும். மூன்றும்நாள் குளிர்ந்த தண்ணீரில் கொண்டுபோய் நிறுத்திக் குளிப்பாட்டவும். நாலாம்நாள் முதல் விசேஷ தீனி வைக்க வேண்டும். ஐந்தாம்நாள் முதல் வண்டியில் கட்டலாம். இந்த மசாலா வருஷத்துக்கு இரண்டுதபா கொடுத்துவந்தால் மாடு புஷ்டியாக இருக்கும்.

பெரும்பூசினிக்காய் மசாலா

(சாம்பல்பூசினிக்காய், தடியங்காய் எனவழங்கும்)

உபயோகிக்கும் விதம்:—ஒரு பெரும் பூசினிக்காயை கைபோகும்படியான அகலத்தில் வட்டமாக ஒரு பக்கத்தில் அறுத்து அந்த வழியாக ஷை காய்க்குள் தட்டப்பயறு-பச்சைப்பயறு-வயல்பயறு-கல்பயறு அல்லது, விரிதட்டான் பயறு கடலை-துவரை-உளுந்து-மொச்சை காணம் வகைக்குக் $\frac{1}{4}$-படி வீதம் செலுத்தி மேலே சொல்லியபடி அறுத்த துண்டினால் மூடி ஒரு மண் பாத்திரத்தில் வைத்து மேல்சட்டி போட்டு மூடி சீலைமண்செய்து பூமிக்குள் ஒருவாரம் புதைத்துவைத்திருந்து 8-ஆம் நாள் எடுத்து, புளித்த பசுவின் மோர் 2-படி விட்டு நன்றுயாட்டிக் கொடுக்க வேண்டியது, மாடு புஷ்டியாகும்.

உடும்பு மசாலா

பெண்ணுடும்பு இரண்டு கொண்டுவந்து நகமும் தலையும் தள்ளி மற்றதை மைப்போல இடித்து,

மஞ்சள்	பலம்	1
மிளகு	,,	2
சுக்கு	,,	2
வெள்ளைப்பூண்டு	,,	2
சருள்ளி	,,	5

உபயோகிக்கும் விதம்:—இவைகளையுங் கூடச் சேர்த்து இடித்து $\frac{1}{2}$-படி உளுந்துமாவும் சேர்த்துப் போதுமான நெய்யும் நல்லெண்ணையும் விட்டுப் பிசைந்து, மாங்காய்ப் பிரமாணம் யுருட்டி வைத்துக்கொண்டு, தினந்தோறும் துயர்த்து, ஒவ்வொரு உண்டைவீதம் காலையில் கொடுத்து வரவேண்டும்

வெள்ளுச்சி மசாலா

மஞ்சள்	பலம்	2
கஸ்தூரிமஞ்சள்	,,	1
மிளகு	,,	1

கிராம்பு	பலம்	1
ஜாதிக்காய்	காய்	4
ஜாதிபத்திரி	பலம்	4
ஏலம்	,,	2

உபயோகிக்கும் விதம்:—இவைகளை இடித்துத் தூள் செய்து வைத்துக்கொண்டு 8-படி வெள்ளுச்சியை நன்றாய் இடித்து, அதையும் $1\frac{1}{2}$-படி உளுந்துமாவையும் கூடப் போட்டு, 30-கோழிமுட்டையையும் உடைத்துவிட்டு, நல்லெண்ணையை அதில்விட்டு, நன்றாய்ப் பிசைந்து இரண்டு மாடுகளுக்கும் கவளமாகக் கொடுத்து சாயங்காலம் குடிக்க வெந்நீர் விடவும். மூன்றும் நாள் குளிர்ந்த ஜலத்தில் கொண்டுபோய்க் குளிப்பாட்டி வந்தவுடனே, 2-படி பச்சையரிசி சாதம் பொங்கி தயிர்விட்டுப் பிசைந்து கவளமாகச் செய்துகொடுக்கவும். இந்தப்படி நாலாநாளும் குளிப்பாட்டி வந்தவுடனே கொடுக்கவேண்டும். ஆறும்நாள் முதல் விசேஷ தீனி வைக்கலாம். இந்த ஆறுநாளும் வண்டி ஏர் முதலானதும் கட்டக்கூடாது.

ஜீரண மசாலா

மஞ்சள்	பலம்	$\frac{1}{2}$
மிளகு	,,	5
வெள்ளைப்பூண்டு	,,	5
இஞ்சி	,,	10

உபயோகிக்கும் விதம்:—இந்த மருந்துகளை இடித்து அது கொள்ளுமான கடைநெய் விட்டுப் பிசைந்து கவளமாகக் கொடுக்க சாயங்காலம் குடிக்க வெந்நீர் விடவும். மூன்றும் நாள் குளிர்ந்த ஜலத்தில் கொண்டுபோய் நிறுத்திக் குளிப்பாட்டி சாயங்காலமுதல் விசேஷ தீனி வைக்கலாம், நாலாம் நாள் முதல் வண்டி முதலானதும் கட்டலாம்.

உஷ்ண சாந்தி மசாலா

உபயோகிக்கும் விதம்:—வேனிற்காலத்துக்கு மாட்டுக்குக் காங்கை ஏறாமல் இருக்கும்பொருட்டு ஒருதபா அல்லது

இரண்டுதபா இதன் அடியிற்கண்ட மசாலாக்களைக் கொடுத்து வரவேண்டும்.

(1) மாடு ஒன்றுக்கு 1-படி பச்சைக்காணத்தை ஊறப் போடாமல் நன்றாயாட்டிப் போதுமான தனி பனங்கள்ளில் கலக்கி, ஒரு பாத்திரத்தில்விட்டு குடிக்கச் செய்யவும். இதை ஒட்டவேண்டுமானால் நன்றாய் கைதேர்ந்தவர்களால் ஒட்ட வேண்டும். கொஞ்சம் தவறினால் சுவாசக்குழலில் ஏறி மாட்டுக்கு மோசம்வரும்.

(2) 1-படி பச்சையரிசியைப் பொங்கி, அந்தச் சாதத் தில் நல்ல தயிர் படி-2, சுருள்ளி பலம்-20, அரிந்துப்போட்டு மூன்றும் ஒன்றாகப் பிசைந்து, இரண்டு மாடுகளுக்கும் கவள மாகக் கொடுக்கவும். மறுநாள் குளிர்ந்த தண்ணீரில் குளிப் பாட்டவேண்டும். மூன்றாம் நாள் விசேஷ தீனி வைக்க வேண்டும்.

(3) வெந்தியம் பலம்-25, நன்றாய் அரைத்து அதில் 1-படி நெய் அல்லது நல்லெண்ணெ படி-1 சேர்த்து இரண்டு மாடுகளுக்கும் கொடுக்கவும். சாயங்காலம் குடிக்கக் கொஞ் சம் வெந்நீர் விடவேண்டும். மூன்றுநாள் குளிர்ந்த ஜலத்தில் குளிப்பாட்டி அன்றுமுதல் விசேஷ தீனி வைக்கவும். நாலா நாள் முதல் வண்டி ஏர் முதலானதில் கட்டலாம்.

இதுவுமது

கடலைமாவு	படி	2
உளுந்துமாவு	,,	2
வெந்தையமாவு	,,	2

உபயோகிக்கும் விதம்:— போதுமான நல்லெண்ணெ விட்டுப் பிசைந்து மாங்காய்ப்பிரமாணம் உருட்டி வைத்துக் கொண்டு தினந்தோறும் ஒரு உருண்டை கொடுத்துவரவும்.

நல்லபாப்பு மசாலா

ஒரு நல்லபாம்பை தலைமுதல் ஒருசாண்நீளம் அறுத்துத் தள்ளிவிட்டு உடலுக்குள் அரைக்காலபடி பச்சைக்கடலை யைச் செலுத்தி அரைபலம் ரசமும் விட்டுப் புதுப்பாண்டத்

திலே அடைத்து மூடி மேலே சீலைமண்செய்து பூமியில் மூன்றுவாரம் புதைத்துவைத்திருந்து எடுத்து ஷை கடலைகளை மட்டும் எடுத்து வைத்துக்கொண்டு மாடு ஒன்றுக்கு நாலு கடலைவீதம் அன்றாடம் கொடுத்து வரவேண்டும் மாட்டுக்கு வேகம் உண்டாகும்.

குமட்டிக்காய் ஊறுகாய்

பேய்க்குமட்டிக்காய்களை 20-கொண்டுவந்து நாலு பிளப்பாக அறுத்து அதில்,

மஞ்சள்	பலம்	½
மிளகு	,,	1
வசம்பு	,,	¼
கருஞ்சீரகம்	,,	1
காட்டுச்சீரகம்	,,	1
கடுகுரோகிணி	,,	½
நறுக்குமூலம்	,,	1
மிளகாய்வற்றல்	,,	3
வெள்ளைப்பூண்டு	,,	2
குரோசாணிஓமம்	,,	1
வாய்விளங்கம்	,,	½
வெட்பாலைஅரிசி	,,	½
வெந்தயம்	,,	2
இந்துப்பு	,,	5
கறியுப்பு	படி	2

உபயோகிக்கும் விதம்:—இவைகளை இடித்து காயில் சேர்த்து மண்பாத்திரத்தில் வைத்து மூடி, சீலைமண்செய்து குதிரைலாயம் அல்லது எருதுகொட்டாயில் முப்பதுநாள் புதைத்துவைத்திருந்து, பின்பு அதை எடுத்து வைத்துக் கொண்டு மாடு ஒன்றுக்கு ஒரு காய்வீதம் காலையில் காலையில் கொடுத்து வரவேண்டும்.

தீரும் வியாதி:—இதினால் சிலவியாதிகள் வாரமல் தடைபடுவதுமன்றி அதுகளுக்கு போதுமானவரையில் தீனிதின்று தண்ணீரும் சரியானபடி குடிக்கும்.

எருதுகளுக்கு கொடுக்கும் லேகியம்

மஞ்சள்	பலம்	$1\frac{1}{2}$
மிளகு	,,	9
சுக்கு	,,	5
திப்பிலி	,,	2
வங்காளநறுக்குமூலம்	,,	7
கருஞ்சீரகம்	,,	$2\frac{1}{4}$
காருகோலரிசி	,,	$2\frac{1}{4}$
கொத்தமல்லி	,,	3
சருள்ளி	,,	5
வெள்ளைப்பூண்டு	,,	3
மிளகாய்வற்றல்	,,	3
சோம்பு-(நட்சத்திரசீரகம்)	,,	5
இந்துப்பு	,,	1
கண்டங்கத்திரிவேர்	,,	6
வேலிப்பருத்திவேர்	,,	7
கொமட்டிவேர்	,,	11
கடுகு	,,	5
கீழாநெல்லிவேர்	,,	$3\frac{1}{2}$
கொழுஞ்சிவேர்	,,	3
நத்தைச்சூரிவேர்	,,	3

உபயோகிக்கும் விதம்:-இந்த வேர்களை நிழலில் உலர்த்தி இடித்துப் பொடிசெய்து, ஷை மருந்துகளையும் இடித்துப் பொடிசெய்து ஒன்றாய்க்கலந்து, பிரண்டையை இடித்து சாரு பிழிந்து, அந்தச் சாரைவிட்டு, இந்தப் பொடிகளையும் பிசைந்து, மாங்காய்ப் பிரமாணமாக உருண்டைசெய்து ஒரு மண்பாண்டத்தில் வைத்து வைக்கவும். ஷை பிரண்டை ரசமுழுதும் மருந்துடன் சேர்ந்து காய்ந்தபின்பு அதில் பப்பத்து உண்டையாக எடுத்து ஒரு மண்பானையில் போட்டு நொறுக்கி, அதற்குப் போதுமான சாராயம்விட்டுப் பிசைந்து, நார்த்தங்காய்ப் பிரமாணமாக உருண்டைசெய்து மண் பானையில் வைத்துக்கொண்டு, ஒருநாள்விட்டு மறுநாள் இரவு உள்ளுக்குக் கொடுத்து வரவேண்டும்.

தீரும் வியாதி:-இம் மருந்தினல் தினந்தோறும் தின்கிற தீனி சாதாரணமாய் ஜீரணமாகி அதினல் மாடு புஷ்டியாகவும் விசேஷமாய் வியாதிகள் உண்டாகாமலிருக்கவும் ஹேதுவாகும்.

அலரிவேர் லேகியம்

அலரிவேர்	பலம்	20
பேய்க்குமட்டி வேர்	,,	20
ஊமத்தைவேர்	,,	20
எட்டிக்கொட்டை	,,	1
ஜாதிக்காய்	,,	2½
ஜாபத்திரி	,,	½
கிராம்பு	,,	1
ஏலம்	,,	1
அபினி	,,	¼

உபயோகிக்கும் விதம்:-இதுகளை எல்லாம் பொடிசெய்து அதற்குப் போதுமான நெய்விட்டு அதிரசபாகம்போல் கிளரி வைத்துக்கொண்டு, பாக்குப் பிரமாணம் காலமே காலமே கொடுத்துவர வேகம் உண்டாகும். இந்தப்படியே எப்பொழுதும் கொடுத்துவரலாம்.

சவாரி லேகியம் (நிஜாம் முறை)

சுத்திசெய்த கெஞ்சா	பலம்	20
மிளகு	,,	10
ஜாதிக்காய்	,,	5
கசகசா	,,	5
மருட்டிமொக்கு	,,	5
வெல்லம்	,,	40

உபயோகிக்கும் விதம்:—இதுகளை ஒன்றுய்ச் சேர்த்து இடித்துப் 10-பலம நெய்விட்டுப் பிசைந்து, புன்னைகொட்டைபிரமாணம் உருட்டி வைத்துக்கொண்டு சவாரி போகும் போது கொடுக்கவேண்டும்.

இதுவுமது

அபினி	பலம்	1
ஜாதிக்காய்	,,	2
மருட்டிமொக்கு	,,	1

உபயோகிக்கும் விதம்:—இதுகளை இடித்து நெய்விட்டுப் பிசைந்து வைத்துக்கொண்டு சவாரி போகும்போது ஒரு ரூபா இடை கொடுத்து வரவேண்டும்.

அதிக லாகிரியானல் முரிப்புவகை

முரிப்பு:—எலுமிச்சம்பழம், ஈருள்ளி இரண்டு தினுசும் நெய்யில் கலந்து கொடுக்க வேண்டியதுந் தவிர, புளிச்ச தண்ணீரும் குடிக்கச் செய்யவேண்டும். சாந்தமாகும்.

குறிப்பு:—இவ்விரண்டுவகை லேகியமும் போதையை உண்டாக்கத் தக்கதுகள். ஆனதால் புஷ்டியாயுள்ள மாடுகளுக்குமட்டும் கொடுக்கலாம்; துர்ப்பலமுள்ள மாடுகளுக்கு கொடுத்தால் லாகிரி தாங்காமல் கீழே விழுந்துவிடும்.

கவனிப்பு :—புஷ்டியாயுள்ள மாடுகளுக்கு கொடுக்கிற விஷயத்திலும், வண்டி ஓட்டுகிறவன் ஜாக்கிரதையாக இருக்க வேண்டியது.

லேப்பு

பரிகாரம்:—மாடு அதிகதூரம் சவாரி போனதினல் உண்டான கால்கடுப்பு இரத்தக்கட்டுக்கு அடியிற்கண்ட பரிகாரம் செய்யவேண்டும்.

உபயோகிக்கும் விதம்:—கோடை தண்ணீரில் கொஞ்சம் வெள்ளாட்டுச் சாணியை அரைத்துக் கலக்கிக் கொதிக்க வைத்து இறக்கி இளஞ்சூட்டுடனே மாட்டின் சரீரமுழுக்க காயக்காய இரண்டு மூன்றுதபா அடிக்கவேண்டும். மறுநாள் பெரிய பாத்திரங்களில் வெந்நீர் போட்டு வைத்துக்கொண்டு கை பொறுக்கும்படியான சூட்டுடனே தகரம் அல்லது லேசான போகிண்ணத்தினல் கோறி, மாட்டின் நாலு சந்துகள், நெஞ்சுக்கொழுந்து, மற்றும் சரீரம் முழுக்கவும்

நன்றாய் அடிக்கவேண்டும். மூன்றுநாட் காலமே குளிர்ந்த தண்ணீரில் கொண்டுபோய் 1-மணி நேரம் நிறுத்திக் குளி பாட்ட வேண்டியது.

குறிப்பு:—அப்படி குளிப்பாட்டின மறுநாள் அல்லது இரண்டாநாள் உள்ளுக்கு இதன் அடியில்கண்ட மசாலா கொடுக்கவேண்டும்.

மிளகு	பலம்	4
திப்பிலி	,,	1
நறுக்குமூலம்	,,	½

உபயோகிக்கும் விதம்:—இந்த மூன்று மருந்துகளையும் ஒன்று இரண்டாக இடித்து ஒரு மண்பாத்திரத்தில் போட்டு, வெற்றிலை பலம்-2 கூடப்போட்டு, குறுணித்தண்ணீர் விட்டு முதலநாள் இராத்திரியே தீப்போட்டு, மறுநாள் காலையில் ஒரு படியாக வறறவைத்து இறுத்து, அந்த கஷாயத்தில் கோழிமுட்டை 25-அல்லது 40-உடைததுவிட்டு, ¾-படி நல்லெண்ணையும்கூட விட்டு, இரண்டு மாடுகளுக்கு கொடுக்கவும். சாயங்காலம் கொஞ்சம் வெந்நீர் குடிக்க விட வேண்டும். மூன்றுநாள் குளிர்ந்த ஜலத்தில் 1-மணி நேரம் நிறுத்தி குளிப்பாட்ட வேண்டும். அன்றுமுதல் விசேஷ தீவனம் வைக்கலாம். நாலாநாள முதல் வண்டி ஏர் முதலானதில் கட்டலாம். கால்கடுப்பு லேசாயிருக்கிற விஷயத்தில் மேல்கண்டபடி லேப்பு அடித்தால் போதும். இந்த மசாலா வை லேப்பு அடித்து சிலநாளைக்குப் பின்புங் கொடுக்கவும்.

கண்டங்கத்திரிக்காய் லேப்பு

உபயோகிக்கும் விதம்:-கண்டங்கத்திரிக்காய் தனி தனி முள் முருக்குக்காய், ஆமணக்குமுத்து இம்மூன்றையும் இடித்துப் பெரிய பாததிரததில் போட்டுப் போதுமான தண்ணீர்விட்டு வேகவைக்க வேண்டியது. கொதிக்கின்ற சமயத்தில் கேழ்வரகு மாவு, கோதுமை மாவு, கடுகுப்பொடி, கரிய பவளப்பொடி (மூசாம்பரம்) இதுகளையும போட்டு நன்றாய் கிண்டி, வேகவைத்து கீழே இறக்கி வைத்துக்

கொண்டு, அதில் கொஞ்சம் நல்ல தயிரைவிட்டுக் கிண்டி இளஞ்சூட்டுடனே மாட்டின் சரீரமெல்லாம் அடிக்கவேண்டியது. மறுநாள் மேலே சொல்லியிருக்கின்ற விதப்படி வெந்நீர் அடிக்கவேண்டும். மூன்றுநாள் காலமே குளிர்ந்த தண்ணீரில் கொண்டுபோய் 1-மணி நேரம் நிறுத்தி குளிப்பாட்ட வேண்டியது.

வாய் கழுவுதல்

கஸ்தூரிமஞ்சள்	பலம்	½
வால்மிளகு	”	¼
மிளகு	”	1
காட்டுச்சீரகம்	”	1
கருஞ்சீரகம்	”	1
வசம்பு	”	¼
அக்கராகாரம்	”	½
கறியுப்பு	”	3½

உபயோகிக்கும் விதம்:—இவைகளில் உப்பு தவிர மற்றதை ஒன்று இரண்டாக இடித்து உப்பையும் சேர்த்துப் பதக்குத் தண்ணீரில் போட்டு கொதிக்கவைத்து அந்தச் சக்கையில் மாட்டிற்கு ஒருபிடி உள்ளுக்குக் கொடுத்து மற்றதை கொஞ்சம் கொஞ்சமாக எடுத்து நாக்கில் நன்றாய் அழுத்தித் தேய்த்து ஷை வெந்நீரை விட்டுவிட்டு வாயை நன்றாய் கழுவவேண்டும். இந்தப்படி மாதம் 2-தடவை செய்யவேண்டும்.

தீரும் வியாதி:—இதினால் கபம், கோழைகள் வெளியாகவும், பல்லில் சேரப்பட்ட காரை எடுபடவும், வாயில் உண்டாகும் துர்கந்தம் நீங்கவும், நாவறணை முதலான வியாதிகள் வராமலிருக்கவும் ஹேதுவாகும்.

வியாதியும் பரிகாரமும்

காப்பு

முத்திவழி தனையறிந்து வாழுங்கும்ப
முனிராம தேவரிடைக் காடர்பின்னும்
சித்தசெனர் வெவ்வேறாய் மகிழ்ந்துசொல்லிச்
சிறந்திலகு மாட்டின்வா கடத்தைபெல்லாம்
நித்தியமும் பாரிலுள்ளோர் மகிழவேண்டி
நேசமுட னுரைசெய்தே யச்சிற்போடச்
சத்திசிவன் புதல்வராய் வந்துதித்த
தந்திமுகன் பன்னிருகை செவ்வேள்காப்பே.



நாவிந்த நமசிவாயா நாயுருவி நமசிவாயா
நாகம்போற் சீறி நமன்போல வாரவனை
நாவுருவத் தைச்ச நாயுருவி காளிசுவா.

புல்லும் தண்ணீரும் ஓதிக்கொடுக்க சக்கரம்

"ஓம் மஹா கணபதயே நமஹா"

நயவசிம்
நயவசிம்
மயசிநவ
நயவசிம. நய
வசிம்

13	5	19	5
18	6	11	10
7	21	3	10
14	9	8	20

மநயவசிம
நயவசி
சிநவமய
நயலசிமநயல
சிமந

சிமநயவசிமநயவ
வமயசிந
நயவசிமநயவசிம்

வசிமநயவசிமநய
யசிநவம
மநயவசிமநயவசி

மந்திரம்:— ஓம் மாதங்கி, ஓம் பரமேஸ்வரி, பார்வதி, இலட்சுமி, கொம்போடே வந்த கோமாரி, அழல்வெக்கை சீதவெக்கை தோன்றும். எப்பேர்ப்பட்ட வியாதிகளெல்லாம் நான் ஓதிய தண்ணீரோடும் போகப்போக சுவாகா.

சாதாரணமாய் எல்லா மாடுகளுக்கும்

தண்ணீர் ஓதிக் கொடுக்க மந்திரம்

எட்டுத் திக்கும் கட்டினேன், ஏழு கிரகத்தையும் கட்டினேன், பத்துத் திசையும் கட்டினேன், படமெடுத்து ஆடும் பாம்பையும் கட்டினேன், கொல்லவந்த கூர்வாள் கூர்பரிலை கட்டினேன், வடக்கே போகின்ற வடமண்டலமும் கட்டினேன், அழைக்க எதிர் வாரீர், சிவசிவா சுவா சுவாமி ஆணையில்.

அடைப்பன் நோய்

செய்குணம்:—பட்படென ஆடும், திகைத்து நிற்கும், பலகால் நீர்விடும்.

மருந்து:—கொன்றையிலை
வெற்றிலை

உபயோகிக்கும் விதம்:—அரைத்து வெண்ணீரில் கலக்கிப் புகட்டவும்.

இந்தப்படிச்
சுடவும்

மருந்து:—குமட்டியிலை
கொழுஞ்சி இலை
கீழ்வாய் நெல்லியிலை

உபயோகிக்கும் விதம்:—அரைத்து காடியில் கலக்கி உள்ளுக்குக் கொடுக்கவேண்டும். வெந்நீர் வைக்கவும்.

நசியம்:—சிறுகீரை	குப்பைமேனி
தைவேளை	வெங்காயம்
வெள்ளைப்பூடு	வசம்பு
மிளகு	சுக்கு

உபயோகிக்கும் விதம்:-இலைகளை சரிபாகமாய் வைத்துக் கொண்டு சீலையில் பொட்டலம்கட்டி மூக்கில் நசியம் விடவும்.

வேறு நசியம்:—முகம் கறுக்கும், உடல்வீங்கும், அசந்து நிற்கும்.

பசுமாட்டுக்கு இடதுபாரிசமும்
காளைமாட்டுக்கு
வலது பாரிசமும் இந்தப்படிக்கு
சூடு போடவும்.



வேறு:—நின்று நின்று இளைக்கும், நிலை தடுமாறும், சிறு செருமலாய்ச் செருமும்.

நிவர்த்தி:—கோடக்கிழங்கு	பலம்	1
வெந்தயம்	,,	1
வெள்ளுள்ளி	,,	1
வசம்பு	,,	1

உபயோகிக்கும் விதம்:—இவைகளை அரைத்துக் கவளமிட்டு இதன் அடியில் கண்டிருக்கிற பிரகாரம் நசியம் செய்யத் தீரும்.

ஷை வியாதிக்கு

நசியம்:—நெரிஞ்சிக்கொழுந்து
சீந்திக்கொழுந்து
வேலிப்பருத்திவேர்
கொல்லங்கோவைக்கிழங்கு

உபயோகிக்கும் விதம்:—இவைகளைச் சிறுநீர் விட்டுத் தட்டி, செவி மூக்கில் நசியம் செய்யத் தீரும்.

வேறு:—கட்டுத்தறியை அடிக்கடி முட்டிக்கொள்ளும்.

நிவர்த்தி:—பூவரசன் விரையைப் பொடிசெய்து உரி வெண்ணெயிற்போட்டு மசக்கி சிரசில் மூளைக்குச் சரியாய்ப் பூச உடனே குணம் கொடுக்கும்.

வேறு:—நாக்குவீங்கி நாக்கில் தண்ணீர் கழன்றுவிழும்.

நிவர்த்தி:—புங்கம்பழத்தை வெந்நீர்விட்டு அரைத்து உள்ளுக்குக் கொடுக்க உடனே குணம் காட்டும்.

வேறு:—பூவரசன்விரை எள்ளு இவ்விரண்டையும் வெந்நீர் வார்த்து அரைத்துக் கொடுக்கவும்.

வேறு:—வயிறு வீங்கும், மயிர் சிலிர்க்கும், தலையை தாழ்த்திக்கொண்டே நடக்கும், மேயாது.

நிவர்த்தி:—வெதுப்படைக்கி சங்கங்குப்பி மிளகு இவைகளை அரைத்துக் கொடுக்கவும்.

வேறு:—கிடையாக்கிடக்கும், தண்ணீர்போலக் கழியும்.

நிவர்த்தி:-மிளகு இலுப்பைப்புண்ணாக்கு அவுரிசாற்றில் அரைத்துக் கொடுக்கவும்.

இந்தப்படி தலையில்
சுடவும்

முட்டடைப்பன் நோய்

செய்குணம்:—திட்டுத்திட்டு என்று முக்கும், திரும்பிப் பாராது, திகரப்படும், கொஞ்சநேரம் சென்றபின் நாக்கும் குளிர்ந்துபோகும்.

மருந்து:—கொஞ்சம் மிளகை வாயில்போட்டு மென்று மாட்டினது கண்களிலும் காதுகளிலும் வாயிலும் பவன வாயிலும் உடனே ஊதவும். செருப்படி இலையை இடித்துப் பிழிந்து சரீரமெங்கும் துவாலை போடவேண்டும் பிரேதஞ் சுட்ட மூட்டம் பிரிக்குமுன் அதற்குள் அஸ்தியுடன் இருக்கிற சாம்பலைக் கொண்டுவந்து அதில் ஒரு மாங்காயளவு அரைப்புட்டி சாராயத்தில் கலக்கிக் கொடுக்கவேண்டும். குடிக்க வெந்நீர் விடவும்.

இருவிலாவிலும் நெஞ்சில்
குருக்காகச் சூடு போடவும்



அல்லது - மிளகு வெற்றிலை உப்பு மூன்றையும் வாயில் போட்டு மென்று, நாசியில் ஊதவேண்டியது. மிளகாய்

வத்தல் பலம்-1, இலுப்பைப் புண்ணாக்கு பலம்-½, கடல் நுரை பலம்-¼, சிறுநீர்விட்டு அரைத்து ¼-படி சிறுநீரில் கலக்கிக் கொடுக்கவும்.

இதுவுமது

செய்குணம்:—மயிர் சிலிர்க்கும், செவிதாழும், கண் சிவந்திருக்கும், கண்சிறுக்கும், வயிறு ஊதும், வாய் திறவாது, தீவனந்தின்னாது, நாடியைத் தாழப்போடும், மூச்சு திட்டுத்திட்டு என மண் அதிரவிடும்.

மருந்து - வெள்ளைப்பூடு	பலம்	1
வசம்பு	,,	¼
சுக்கு	,,	1
இலுப்பைப்பிண்ணாக்கு	,,	¼
சிறுதும்பை	பிடி	1
குப்பைமேனி	,,	1
தைவேளை	,,	1
நொச்சியிலை	,,	1

உபயோகிக்கும் விதம்:—இவ்வளவும் ஒன்றாய் இடித்து 2-படி காடியில் கலக்கிக் கொடுக்கவேண்டும். குடிக்க வெந்நீர் விடவும். இரு விலாவிலும் சூடுபோடவும்.

இதுவுமது

செய்குணம்:—நாலுகாலும் கிடுகிடு எனப் பதறும், நெஞ்சுவீங்கும், விழுந்து எழுந்திருக்கும், மண்ணைக்கவ்வும், மாக்கு மாக்கு என்று கதறும்.

மருந்து:—வேலிப்பருத்தியிலை
சிறுகுருஞ்சாயிலை
கொத்தான் கொளுஞ்சியிலை
சீந்தியிலை
முடக்கத்தானிலை

உபயோகிக்கும் விதம்:—இவைகளை இடித்து வகைக்குக் ¼-படி சாறு பிழிந்து கொடுக்கவேண்டும். குடிக்க வெந்நீர் விடவும்.

இருவிலாவிலும்
நெஞ்சில் குருக்காகவும்
சூடு போடவும்



இதுவுமது

செய்குணம்:—மூக்கும், குன்னி அலைந்து அலைந்து கொண்டு நிற்கும்.

ஊமச்சியை உயிருடன் கொண்டுவந்து இடித்து பிழிந்தசாறு	படி	1/4
தேங்காய்ப்பால்	,,	1/4

உபயோகிக்கும் விதம்:—இவைகளை ஒன்றாய்க் கலந்து புகட்டவும். இந்தப்படி மூன்றுநாள் கொடுக்கத் தீரும்.

இந்தப்படி
கடவாயில் சுடவும்.

இதுவுமது

செய்குணம்:—திட்டுத்திட்டு என்று மூக்கும், திரும்பிப் பாராது.

நிவர்த்தி :—ஐயுங்-கிலியும்-சவ்வும்-சிவாய நமா என்று தியானித்துக்கொண்டு, எருக்கம்பால் ஆறு தடவை ஷை மாட்டின் முதுகில் அடித்து மிளகை மென்று அபான வாயிலும் காதிலும் ஊதத் தீரும்.

இதுவுமது

செய்குணம்:-முன்னங்காலும் பின்னஞ்சந்தும் வீங்கும்.

மருந்து:—முப்புரமெரித்தான்	பலம்	1
குளப்பாலைவேர்	,,	1

உபயோகிக்கும் விதம் :—இரண்டையும் அரைத்துப் பசுவின் பாலில் கொடுக்கவும்; வியாதி தீரும்.

மேல்பூச:—அமுக்கிருவேர் வசம்பு பூலாத்திவேர் சிற்றகத்தியும் அரைத்து மேல் பூசவும்.

இரண்டு தொடையிலும் சூடு போடவும்.



இதுவுமது

பிரண்டைக் கொழுந்து	பிடி	4

உபயோகிக்கும் விதம்:—இதை அரைத்துக் காடியில் கலக்கி மூன்றுநாள் புகட்டத் தீரும்.

முன்னடைப்பன் நோய்

செய்குணம்:—முன்னங்கால் இரண்டையும் தெத்தி வைக்கும், வாய் அசையிடாது, இரண்டுகாலும் நடுக்கும், ராசிவொக்கும், இரை தின்னாது.

மருந்து:- இலுப்பைப்பிண்ணாக்கு, மளுக்காரைத்தொலி வகைக்கு எலுமிச்சங்காயளவு அரைத்து, கோடைக்காலத்து நீர் படி ஒன்றில் கலக்கி, உள்ளுக்குக் கொடுக்கவேண்டும்.

நசியம்:—கொஞ்சம் மிளகும் வெள்ளைப்பூடும் அரைத்து பேய்ப்பீர்க்கஞ்சாறும் சிறுநீரும் சேர்த்துக் கலக்கி, வடி கட்டி வைத்துக்கொண்டு, கண்களிலும் மூக்கிலும் நசியம் பண்ணத் தீரும். குடிக்க வெந்நீர் வைக்கவும்.

இடது விலாவில் சுடவும்.

இதுவுமது

செய்குணம்:—திகைத்துத் திகைத்து நிற்கும், வயிறூதும், நாலுகாலும் தள்ளும், பலபலென நீர்விடும், செவிதாழும்.

மருந்து:—சரக்கொன்றையிலை, வெற்றிலை, மளுக்காரைத் தொலி வகைக்கு மாங்காயளவு அரைத்து 1-படி வெந்நீரில் கலக்கிகொடுக்கவேண்டும். அல்லது,

சுக்கு	பலம்	1
மிளகு	,,	1

திப்பிலி	பலம்	$\frac{1}{4}$
காயம்	,,	$\frac{1}{4}$
வெள்ளைப்பூடு	,,	1
வசம்பு	,,	$\frac{1}{2}$
குப்பைமேனி	படி	1
தைவேளை	,,	1
வெள்ளருகு	,,	1

உபயோகிக்கும் விதம்:—இவைகளை எல்லாம் இடித்துச் சேர்த்து கவளம் கொடுக்கவேண்டும். குடிக்க வெந்நீர் விடவும். இடது விலாவிலும் நெஞ்சுக் கொளுந்தில் சூடு போடவேண்டும்.

இதுவுமது

செய்குணம்:—முன்னங்கால் நடுவே வீங்கும், திகரப்படும்.

மருந்து:—ஓமம் பலம் 1

உபயோகிக்கும் விதம்:— இவை 'அரைத்து கோழியவரைச்சாறு படி-$\frac{1}{2}$ கலக்கிக் கொடுக்கவேண்டும். குடிக்க வெந்நீர் விடவும்.

இதுவுமது

செய்குணம்:—அறுபது நாழிகையும் இடைவிடாமல் திகரப்படும்.

மருந்து:—மிளகு	பலம்	1
நன்னாரிவேர்	,,	2
பெருந்தும்பையிலை	பிடி	1
சங்கங்குப்பியிலை	,,	1

உபயோகிக்கும் விதம் :—இவ்வளவும் இடித்து நெய் விட்டுப் பிசைந்து கவளம் கொடுக்கவேண்டும்.

மேல்பூசு:—புத்துமண்ணும் வெள்ளாட்டுச் சாணியும் சேர்த்துக் கலக்கிக் கொதிக்கவைத்து மேலே பூசவேண்டும்.

இந்தப்படி இடதுவிலாவிலும் நெஞ்சுக் கொளுந்திலும் சூடு போடவும்.

இதுவுமது

செய்குணம்:—வயிறு ஊதும், திகைத்து நிற்கும், செவி தாழும், படபடத்து நடுங்கும், நாலுகாலும் தடுமாறும், அடிக்கடி நீர்விடும்.

உபயோகிக்கும் விதம்:—பருத்தியிலையும் குருஞ்சாயிலையும் சமமாய் இடித்து அதனுடைய நீரில் கலக்கி உள்ளுக்குக் கொடுக்கவும்.

இரண்டு விலாவிலும்
சூடு போடவும். ☞

இதுவுமது

வயிறு ஊதும், இரை தின்னாது, செவி தாழும்.

மருந்து—மனத்தக்காளிச்சாறு	படி	¼
கருநொச்சிச்சாறு	,,	¼
ஆடாதோடைச்சாறு	,,	¼
சீரகம்	பலம்	1
வெள்ளுள்ளி	,,	1
வசம்பு	,,	1
ஓமம்	,,	1
நெத்திலிக்கருவாடு	,,	1

உபயோகிக்கும் விதம்:-ஷை சாறுகளை ஒன்றாய்க் கலந்து அதில் மற்றமருந்துகளை அரைத்துப்போட்டுகொடுக்கத்தீரும்.

இதுவுமது

நெத்திலிக்கருவாடு	பலம்	10

உபயோகிக்கும் விதம்:—இதை அரைத்துக் காடித் தண்ணீரில் கலக்கிப் புகட்டத் தீரும்.

இதுவுமது

மருந்து—மஞ்சணத்திக்கொழுந்து	பிடி	4
ஓமம்	பலம்	2
வெள்ளுள்ளி	,,	2

வசம்பு	பலம்	2
சுக்கு	,,	2

உபயோகிக்கும் விதம்:—இவைகளை அரைத்து காடியில் கலக்கி புகட்டத் தீரும்.

மூன்னடப்பன் பின்னடைப்புக்கு

மருந்து:—வெருகங்கிழங்கு	பலம்	3
இலுப்பைப்பிண்ணாக்கு	,,	3
மிளகு	,,	3

உபயோகிக்கும் விதம்:—இதுகளை அரைத்து கோழி யவரையிலைச் சாற்றில் கலந்துக் கொடுக்கவும். இந்தப்படி மூன்றுநாள் கொடுக்கத் தீரும்.

இதுவுமது

பிரண்டை	பலம்	5
கோழியவரை	,,	5
கரியுப்பு	,,	5
கோழிக்காரம்	,,	5
சுக்கு	,,	5

உபயோகிக்கும் விதம்:—இவைகளை அரைத்து வேப் பெண்ணெயில் மத்தித்துக் கொடுக்கவும்.

தீரும் வியாதி:— முன்னடைப்பன் பின்னடைப்பன் தீரும்.

பின்னடைப்பன் நோய்

செய்குணம்:-பின்னந் தொடையும் பவனவாயும் அடைக்க வீங்கும்; கடைக்கண்ணாலே தண்ணீர்வடியும்; கண் குழியும்; தீனி தின்னாது; மேலே சுடும்; காலைத் தூக்கும்.

மருந்து:—முருங்கைப்பட்டை	மாங்கா அளவு
வெள்ளைப்பூடு	மாங்கா அளவு
வசம்பு	எலுமிச்சங்கா அளவு

உபயோகிக்கும் விதம்:—இவை இரண்டையும் அரைத்து 1-படியில் கலக்கிக் கொடுக்கவும்.

இரு விலாவிலும்
சூடு போடவும்.



இதுவுமது

செய்குணம்:—பின்னங்கால் நடைகூடாது, நீர்வலம் இறங்காது, வயிற்றில் வலிகாணும், படுத்துப் படுத்து எழுந் திருக்கும்.

மருந்து:—மஞ்சள்	பலம்	1
கஸ்தூரிமஞ்சள்	,,	1
அக்கராக்காரம்	,,	$\frac{1}{2}$
பெருங்காயம்	,,	$\frac{1}{4}$
சுக்கு	,,	2
குரோசாணி ஓமம்	,,	1
கடுகு	,,	1
திப்பிலி	,,	$\frac{1}{4}$
மிளகு	,,	2
மிளகாய்ப்பழம்	,,	1
வெள்ளைப்பூடு	,,	2

உபயோகிக்கும் விதம்:—எருக்கலாம்பூ ஒருபிடி இவ்வளவும் இடித்து சாராயம் விட்டுப் பிசைந்து கவளமாகக் கொடுக்கவேண்டும். இடது கடைவயிற்றில் சூடு போடவேண்டும்.

இதுவுமது

செய்குணம்:—சாணிபோடாது, வயிறு ஊதும், தீனி தின்னாது, மேல் வீங்கும், மிகுந்து படுக்கும்.

மருந்து:—குளுசுபாக்கு	பலம்	1
கடுக்காய்த்தோல்	,,	1

உபயோகிக்கும் விதம்:— இம்மருந்து இரண்டையும் அரைத்து நன்றாய்க் கழுவின கற்றாழஞ்சோறு ஒருதேங்காய்

அளவு சேர்த்து, 4-படி வெந்நீரில் கலக்கிக் கொடுக்க வேண்டும். கையில் நல்லெண்ணெயைத் தடவிக்கொண்டு பவனவாய்க்குள் விட்டு எருவை எடுக்கவும். குடிக்க வெந்நீர் விடவும்.

இடது விலாவிலும் நெஞ்சைக்
கட்டி சூடு போடவேண்டியது.

அல்லது,

வெள்ளைப்பூடு	பலம்	1
வசம்பு	,,	1
குப்பைமேனியிலை	பிடி	2
கோழியவரையிலை	,,	2
மணத்தக்காளியிலை	,,	2

உபயோகிக்கும் விதம்:—இவைகளை ஒன்றாய்ச் சேர்த்து அரைத்து வெந்நீரில் கலக்கி உள்ளுக்குப் புகட்டவேண்டும்.

இதுவுமது

செய்குணம்:—கண் சிவக்கும், கண்ணீர்வடியும், பீளை சாடும், சாணிபோடாது, நீர்விடும், பேய்முகமாய் இருக்கும்.

மருந்து:—சுக்கு	பலம்	1	பேய்க்குமட்டியிலை	பிடி	3
கடுகு	,,	1	கொளுஞ்சியிலை	,,	3
காரையிலை	பிடி	3	நொச்சியிலை	,,	3

உபயோகிக்கும் விதம்:—இவைகளை அரைத்து மோரில் கலக்கி உள்ளுக்குக் கொடுக்கவேண்டும்.

இந்தப்படிக்கு
இடதுவிலாவில் சுடவும்.



இதுவுமது

செய்குணம்:- எருவிடாது, நீர்விடும், கண் சிவந்து நீர் வடியும், பீளை சாடும், பேய்முகமாகும்.

மருந்து:—களிப்பாக்கு	பலம்	1
கடுக்காய்தோல்	,,	1

உபயோகிக்கும் விதம்:—கத்தாளஞ்சோறு ஒரு தேங்கா அளவு திரட்டி 6-படி தண்ணீரில் கலக்கிக் கொடுக்கத் தீரும்.

இதுவுமது

மருந்து—காரையிலை	பிடி	3
கொளுஞ்சியிலை	,,	3
பேய்க்குமட்டியிலை	,,	3
நொச்சியிலை	,,	3
சுக்கு	பலம்	1
கடுகு	,,	1

உபயோகிக்கும் விதம்:—இவைகளை இடித்து மோரில் கலக்கிக் கொடுக்கவும். இந்தப்படி 3-நாள் கொடுக்கத் தீரும்.

இந்தப்படிக்கு இடது விலாவில் சுடவும்.

ஊதடைப்பன் நோய்

செய்குணம்:—வயிறு ஊதும், இரைதின்னாது, செவி தாழும்.

மருந்து:—நெத்திலிக்கருவாடு	பலம்	5
வெற்றிலை	,,	5

உபயோகிக்கும் விதம்:—இவை இரண்டையும் நன்றாய் அரைத்து 2-படி காடியில் கலக்கி உள்ளுக்குக் கொடுக்க வேண்டும்.

அல்லது,

வெள்ளைப்பூடு	பலம்	1
ஓமம்	,,	1
வசம்பு	,,	$\frac{1}{4}$
சீரகம்	,,	$\frac{1}{2}$
கருவாடு	,,	1

உபயோகிக்கும் விதம்:—இந்த நாலு தினுசுகளையும் ஒன்றாய் அரைத்து இத்துடன் மணத்தக்காளிச்சாறும் கருநொச்சிச்சாறும் ஆடாதோடைச்சாறும் இம்மூனறும் வகைக்குப் படி-$\frac{1}{4}$ வீதம் சேர்த்துக் கொடுக்கவும.

இடதுவிலாவில் சுடவும்.

இதுவுமது

செய்குணம்:—வயிறு ஊதும், எருது விடா, சுருக்கு சுருக்கு என்று நீர்விடும்.

மருந்து:—கருத்தக்காக்கலங்கொடியை சமூலத்துடனே மாங்காயளவு இடித்து வசம்பு பலம்-$\frac{1}{4}$ அரைத்து,

உபயோகிக்கும் விதம்:—ஒருபடி வெந்நீரில் கலக்கிக் கொடுக்கவேண்டும். குடிக்க வெந்நீர் விடவும்.

இருவிலாவிலுஞ் சுடவும்.

இதுவுமது

செய்குணம்:-வயிறு வீங்கும், அசைந்து நிற்கும், நீரும் சாணியும் கட்டிவிடும்.

மருந்து:—மஞ்சள்	பலம்	$\frac{1}{2}$
கஸ்தூரிமஞ்சள்	,,	1
அக்காரக்காரம்	,,	$\frac{1}{2}$
சுக்கு	,,	2
காயம்	,,	$\frac{1}{4}$
குரோசாணி ஓமம்	,,	1
திப்பிலி	,,	$\frac{1}{2}$
மிளகாய்ப்பழம்	,,	1
மிளகு	,,	2
வெள்ளைப்பூடு	,,	2
எருக்கலம்பூ	பிடி	1

உபயோகிக்கும் விதம்:—இவ்வளவும் சேர்த்து ஒன்றாய் இடித்து அதற்கு போதுமான அரக்குச்சாராயும் விட்டு

பிசைந்து கவளமாகச்செய்து உள்ளுக்குக் கொடுக்கவேண்டும்; குடிக்க வெந்நீர்விடவும்.

இந்தப்படி இரண்டு விலாவிலுஞ்
சூடு போடவும்.

இதுவுமது

செய்குணம்:—வயிறு ஊதும், வாயில் நீர் வடியும், திட்டுத் திட்டு என்று மூக்கும், சாணம் போடாது.

மருந்து:—நெய்க்கொட்டான் பழம்	பலம்	5
கோழிக்காரம்	படி	$\frac{3}{4}$

உபயோகிக்கும் விதம்:—இவைகளை அரைத்து 1-படி காடியில் கலக்கிப் புகட்டத் தீரும்.

இந்தப்படிக்கு இடது
விலாவில் சுடவும்.



இதுவுமது

செய்குணம்—வயிறு ஊதும், சாணம் போடாது.

மருந்து:— கருத்தகாக்கணன் சமூலங் கொண்டுவந்து இடித்துப் பிழிந்தசாறு	படி	$\frac{1}{4}$
விளக்கெண்ணெய்	,,	$\frac{1}{4}$
பழம்புளி	பலம்	2

உபயோகிக்கும் விதம்:—ஷை சாற்றையும் எண்ணெயையும் ஒன்றாய்க் கலந்து, அதில புளியைக் கரைத்துப் புகட்டத் தீரும்.

இந்தப்படிக்கு
இடது விலாவில் சுடவும்.



இதுவுமது

செய்குணம்:—சாணம் போடாது, வயிறு பொருமும், இரை தின்னாது, உடல் வீங்கும்.

மருந்து:—களிப்பாக்கு	பலம்	3
கடுக்காய்	,,	3
கற்றாளைச்சோறு	,,	2½

உபயோகிக்கும் விதம்:—இவைகளில் களிப்பாக்கையும் கடுக்காயையும் பொடித்துக் கற்றாளைச் சோற்றிற் போட்டுப் பிசைந்து வெந்நீரில் கலக்கிப் புகட்டவும்.

இந்தப்படிக்கு
இடது விலாவில் சுடவும்.



இதுவுமது

மருந்து:—குப்பைமேனியிலை	பிடி	2
கோழியவரையிலை	,,	2
மணத்தக்காளியிலை	,,	2
வெள்ளைப்பூடு	பலம்	1
வசம்பு	,,	1

உபயோகிக்கும் விதம்:-இவைகளை அரைத்துப் புகட்டத் தீரும்.

இதுவுமது

மருந்து:—வசம்பு	பலம்	2
மஞ்சணத்திக்கொழுந்து	,,	5
தூதுவளைவேர்	,,	5
பழம்புளி	,,	3

உபயோகிக்கும் விதம்:—இதுகளை இடித்துக் காடியில் கலக்கிப் புகட்டத் தீரும். இதற்கு முந்தின பிரயோகத்தில் சொல்லியபடிக்கு இடது விலாவில் சுடவும்.

இதுவுமது

செய்குணம்:—வயிறு ஊதும், கண் சிவக்கும், வாயில் நீர் வடியும், இரை தின்னாது.

மருந்து:—மதுக்காரை வேர்ப்பட்டை	பலம்	5
மிளகு	,,	2
வெள்ளுள்ளி	,,	2

உபயோகிக்கும் விதம்:-இவைகளை அரைத்துக் காடியில் கலக்கிப் புகட்டத் தீரும். இந்தப்படி 3-நாள் கொடுக்கத் தீரும்

இந்தப்படிக்கு
இடது விலாவில் சுடவும்.

கொட்டடைப்பன் குணம்

செய்குணம்:—கழுத்துக்கோணும், அரை மேய்ச்சலாய் மேயும்.

இந்தப்படிக்கு கழுத்திலும் உ உ உ
முதுகிலும் சுடவும். உ உ உ
உ உ உ

நெஞ்சடைப்பன் நோய்

செய்குணம்:—நெஞ்சு தடிக்கும், வாயிலிருந்து நீர் வடியும், செருமும்.

மருந்து:—மிளகு	பலம்	2
திப்பிலி	”	$\frac{1}{2}$
வசம்பு	”	$\frac{1}{4}$
வெள்ளைப்பூடு	”	2
காயம்	”	$\frac{3}{4}$
குப்பைமேனி	பிடி	1
தைவேளை	”	1
வெள்ளறுகு	”	1

உபயோகிக்கும் விதம்:—இவ்வளவு ஒன்றாய் இடித்து உருண்டை செய்து கொடுக்கவேண்டும். குடிக்க வெந்நீர் விடவும்.



இந்தப்படி
இரு விலாவிலும்
சூடு போடவும்.

இதுவுமது

செய்குணம்:—காதுகள் மடங்கித் தொங்கும், தலை இறக்கமாயிருக்கும், நாடி படபட என்று அடிக்கும், கொம்புகளும் காதுகளும் சிலவேளை சூடாயும், சிலவேளை குளிர்ந்தும், மாறிமாறி யிருக்கும். சாதாரணமாய்ச் செருமல் காணும்; மேல்மூச்சு வாங்கும்; கண் ரெப்பைகளின் உள் தோல் இரத்தங்கட்டி உப்பியிருக்கும்; ஏதோ ஒவ்வொரு வேளையில் படுத்திருந்தாலும் சாதாரணமாய்ப் படுக்காது; கடைசியாய் வியாதிமுற்றிச் சுவாசக்குழியில் கெடுதியுண்டாய் சுவாசம் அதிகமாய் நாறும்.

வியாதிவரும் காரணம்:—எருதுகளை சவாரிகளிலும் மற்ற வேலைகளிலும் அதிக ஒட்டம் ஒட்டுவதினாலும் குளிர், காற்றுமழையில் அடிபடுவதினாலும் இவ்வியாதியுண்டாகிறது.

மருந்து:—கர்ப்பூரம், பொட்டிலுப்பு	அரையே அரைக்கால்	
கரியபவளம், அபினி	,,	

உபயோகிக்கும் விதம்:—இதை ஒன்றாகச் சேர்த்து பொடிசெய்து அதற்குப்போதுமான தேன்விட்டுப் பிசைந்து, மூன்று உருண்டையாகச் செய்து, நாள் ஒன்றுக்கு மூன்று வேளையும் கொடுக்கவேண்டியது.

குறிப்பு:—அதிகமாய்ப் பேதியானல் ஷை கரியபவளத்தைத் தள்ளி மற்றதைப் போடவேண்டும். 2-ரூபாயிடை நேர்வாளக் கொட்டையை அரைத்து மூன்று மாகாணி படி தேங்காயெண்ணெயில் கலக்கி 1-மணி நேரம் கொதிக்க வைத்து, இறக்கி வைத்துக்கொண்டு மார்புக்கு இரண்டு பக்கத்திலும் $\frac{1}{4}$-மணி நேரம் நன்றாய் அழுத்தித் தேய்க்க வேண்டியது. அந்த இடம் கொப்பளித்துவிடும்.

இதுவுமது

செய்குணம்:—நெஞ்சடைத்துச்செருமும், வாயில் நீர்வடியும்.

மருந்து:—மிளகு	பலம்	1
சுக்கு	,,	1
கோரக்கிழங்கு	,,	1

உபயோகிக்கும் விதம்:—இவைகளைச் சிறுநீர் விட்டு அரைத்து பசுநெய்யிலாவது ஆழாக்கு நல்லெண்ணெயிலாவது குழப்பிக் கொடுக்கவும். இந்தப்படி மூன்றுநாள் கொடுக்கத் தீரும்.

இதுவுமது

மருந்து:—மிளகு	பலம்	1
கோரக்கிழங்கு	,,	1

உபயோகிக்கும் விதம்:—இவைகளை முன்போல் அரைத்துக் கொடுக்கத் தீரும்.

இதுவுமது

செய்குணம்:— நெஞ்சு தடித்துச் செருமும், நாலு காலும் பதரும்.

நிவர்த்தி :—மேற்சொல்லிய மருந்தை மூன்றுநாள் கொடுத்து

இந்தப்படிக்கு
நாலுகாலிலும் சுடவும்.



இதுவுமது

செய்குணம்:— நெஞ்சு அடைத்து நீர்ப்பாயும் செருமும்.

மருந்து:—செருப்படி	மிளகு
நாய்கடுகு	சுக்கு

உபயோகிக்கும் விதம்:—ஒரு களஞ்சிப் பிரமாணம் கூட்டி சிறுநீர் வார்த்து அரைத்து ஆழாக்கு நெய்யுங்கூட்டி 3-நாள் கொடுக்க சொஸ்தமாகும்.

இந்தப்படிக்கு
இரண்டு விலாவிலும்
சூடு போடவும்.



உள்ளடைப்பன் நோயின் குணம்

செய்குணம்:—மயிர் சிலிர்க்கும், வாயில் நீர்வடியும், தூங்கிவிழும்.

மருந்து:—அகத்தியிலைச்சாறு	படி	½
ஆவிநெய்	,,	¾
மிளகு	பலம்	1
ஈருள்ளி	,,	5

உபயோகிக்கும் விதம்:—ஷை சாற்றையும் நெய்யையும் ஒன்ருய்க் கலந்து, அதில் மற்ற மருந்தை அரைத்துப்போட்டு கலக்கிக் கொடுக்கவும். இந்தப்படி 3-நாள் கொடுக்கத் தீரும்.

இதுவுமது

மருந்து:—மிளகாய்
பச்சைவெற்றிலை

உபயோகிக்கும் விதம்:— இவ்விரண்டையும் உறலில் போட்டு துவைத்து உள்ளுக்குக் கொடுக்க குணமாகும்

நெளியடையப்பன் நோய்

செய்குணம்:—தீவனந் தின்னுது, சாணி நெகிழ்த்துப் போடும், சரீரத்தை நெளிக்கும், சுருக்காக நடக்கும், விழும் எழுந்திருக்கும்.

மருந்து:—கடுகு	பலம்	¼
வெள்ளைப்பூடு	,,	1
வெந்தையம்	,,	1
மாதளம்பிஞ்சு	,,	4
நவ்வற்கொளுந்து	,,	3
சித்திரப்பாலடை	,,	7

உபயோகிக்கும் விதம்:—இவைகளெல்லாம் ஒன்ருய்ச் சேர்த்து அரைத்து 4-படி தேங்காய்ப்பாலில் கலக்கி உள்ளுக் கொடுக்கவேண்டும்.

சங்கடைப்பன் நோய்

செய்குணம்:—அளிமேச்சல் மேயும், திகைத்து நிற்கும், கொஞ்சநாள் சென்றபின் கிடந்து செருமும், இளைக்கும், அரைக்கண் போட்டுத் தூங்கும்.

மருந்து:—அரிதாரம்	பலம்	2
சீனி	,,	3

உபயோகிக்கும் விதம்:—½-படி சாராயத்தில் சேர்த்து உள்ளுக்குக் கொடுக்கவேண்டும்.

நசியம்:—திப்பிலி	பலம்	¼
மிளகு	,,	¼
வெற்றிலை	,,	¼
உப்பு	,,	½
கண்டங்கத்திரிப்பழம்	,,	10

உபயோகிக்கும் விதம்:—இவ்வளவும் அரைத்துச் சிந்தியிலைச் சாற்றில் கலக்கி வடிகட்டி காது மூக்கு இவைகளில் நசியம் பண்ணவும். குடிக்க வெந்நீர்விடவும்.

இந்தப்படிக்கு
இரு விலாவிலும் சுடவும்.

சதையடைப்பன் நோய்

செய்குணம்:—நல்ல பசுமாட்டிற்றுவும், முகம் வீங்கும், அழிமேய்ச்சல் மேயும், பலகாலும் சுருக்கு நீர்விடும், நிலத்தைப் பரண்டும், தண்ணீர் அரைவாய்க்கொண்டு குடிக்கும், சாணி வரண்டுபோடும்.

மருந்து:—வில்வயிலை	பலம்	10
வல்லாரையிலை	,,	7
கடுக்காய்த்தோல்	,,	5

உபயோகிக்கும் விதம்:—இவ்வளவும் ஒரு பானையில் போட்டு 6-படி தண்ணீர்விட்டு மூடி, கொதிக்கவைத்து, 1-படி தண்ணீராக வற்றினபின் இறக்கி இறுத்துக் கொடுக்க

வேண்டும். குடிக்க வெந்நீர் விடவும். இரு விலாவிலும் சூடு போடவேண்டும்.

இந்தப்படிக்கு
இரண்டு விலாவிலும்
சூடு போடவும்.



சந்தடைப்பன் நோய்

செய்குணம்:-முன்னங்காலும் பின்னம் சந்தும் வீங்கும்.

மருந்து:—மூப்புரமெரித்தான்வேர்	பலம்	1
குளப்பாளைவேர்	,,	1

உபயோகிக்கும் விதம்:—இரண்டையும் அரைத்து $\frac{1}{2}$-படி பசுவின்பாலில் கலக்கிக் கொடுக்கவேண்டும்.

அல்லது,

			வசம்பு	பலம்	$\frac{1}{4}$
மிளகு	பலம்	1	மஞ்சள்	,,	$\frac{1}{2}$
சுக்கு	,,	$\frac{1}{2}$	குப்பைமேனி	பிடி	1
திப்பிலி	,,	$\frac{1}{4}$	தைவேளை	,,	1
காயம்	,,	$\frac{1}{8}$	வெள்ளறுகு	,,	1

உபயோகிக்கும் விதம்:—இவ்வளவும் இடித்து $\frac{1}{2}$-புட்டி சாராயம்விட்டு பிசைந்து, கவளம் கொடுக்கலாம். ஒரு பெட்டைக்கோழி இரத்தமும் $\frac{1}{2}$-புட்டி சாராயமும் சேர்த்துக் கொடுக்கலாம். பிரண்டையை இடித்துச் சட்டியில் போட்டு வறுத்துத் துணியிற்கட்டிச் சூட்டுடனே வீக்கத்தில் ஒத்தல் போடவும்.

பூசுமருந்து :—அமுக்கிராவேர் வசம்பு சிற்றகத்தியிலை இவைகளை அரைத்துக் கொதிக்கவைத்து வீக்கத்தில் பூசவும். குடிக்க வெந்நீர்விடவும்.

வீங்கியிருக்கிற இடங்களில்
இந்தப்படி சுடவும்.



செருக்நடைப்பன் நோய்

செய்குணம்:—மயிர் சிலிர்த்திருக்கும், கண்களில் பீளை சாடும், அடிவயிறு ஊதிக்கொண்டிருக்கும், சீறுபூறு என இளைக்கும்.

மருந்து:—சுக்கு பலம்-1
கோவைத்தண்டும் மாங்காயளவு
ஈருள்ளியும் ,,

உபயோகிக்கும் விதம்:—சுக்குடன் சேர்த்து அரைத்து பசுவின்மோர் படி 1-ல் கலக்கி உள்ளுக்குக் கொடுக்கத் தீரும்.

இந்தப்படி
இரு விலாவிலும் சூடு
போடவும்.



மூக்கடைப்பன் நோய்

செய்குணம்:—தீவனம் தின்னாது, ஒருகாலில் நொண்டும், திக்கு திக்கு என்று மூக்கும், படுத்தால் எழுந்திராது.

மருந்து:—ஈருள்ளி படி $\frac{1}{2}$
வில்வயிலை மாங்காய் அளவு
நாடான்பருத்தி ,,

உபயோகிக்கும் விதம்:-அரைத்து ஆட்டுமோர் படி 1-ல் கலக்கி உள்ளுக்குக் கொடுக்கவேண்டும்.

இந்தப்படி
இரண்டு
விலாவிலும்
சுடவும்.



வரட்டடைப்பன் நோய்

செய்குணம்:—கண்கள் சிவந்திருக்கும், வயிறு ஊதும், மூக்கு அடைத்து நிற்கும்.

மருந்து:—சித்தகத்தியிலை	பிடி	1
வாகையிலை	„	1
சிவனார்வேம்பு	„	1
சரக்கொன்றையிலை	„	1
சிறுதும்பையிலை	„	1
குப்பைமேனியிலை	„	1
நைவேளை	„	1

உபயோகிக்கும் விதம்:—இவைகளை இடித்துச் சாறு பிழிந்து அதில் வசம்பு பலம்-$\frac{1}{4}$, வெற்றிலை பலம்-4, புகையிலை பலம்-$\frac{1}{4}$ இவைகளை ஒன்றாய் அரைத்து ஷை சாற்றில் கலக்கி அத்துடன் $\frac{1}{4}$-படி சாராயமும் கூடச்சேர்த்து உள்ளுக்குக் கொடுக்கவேண்டும். குடிக்க வெந்நீர் காட்டவும்.



இந்தப்படி இரு விலாவிலும் நெற்றியிலும் சுடவும்.

விரட்டடைப்பன் நோய்

செய்குணம்:—ஆட்டுப்புழுக்கைபோல் சாணிபோடும், நடக்கமாட்டாது.

மருந்து:—வசம்பு	பலம்	$\frac{1}{4}$
வெள்ளைப்பூடு	„	1

உபயோகிக்கும் விதம்:—இவ்விரண்டையும் அரைத்து 1-படி வெந்நீரில் கலக்கி உள்ளுக்குக் கொடுக்கவும். குடிக்க

வெந்நீர் வைக்கவேண்டும். அதில் கொஞ்சம் வடிகட்டி நாசியில் நசியம் பண்ணவும்.

இந்தப்படி
இரு விலாவிலும்
சுடவும்.



சரட்டடைப்பன் நோய்

செய்குணம்:—நாக்கை நீட்டும், உடல் பரக்கும், மூச்சு மூச்சு என்று உடலை அலைக்கும்.

மருந்து:—அத்திக்காய்	படி	$\frac{1}{2}$
மஞ்சள்	பலம்	$\frac{1}{2}$
மிளகு	,,	1
திப்பிலி	,,	$\frac{1}{4}$

உபயோகிக்கும் விதம்:—இவைகளை அரைத்து 2-படி காடியில் கலக்கிக் கொடுக்கவும்.

இந்தப்படி
இரு விலாவிலும்
சுடவும்.



திரட்டடைப்பன் நோய்

செய்குணம்:—மாட்டின் வயிற்றில் ஒருபுரத்தில் கொஞ்சம் வீக்கம்போலும், புடைப்பாகவும் திரண்டு காணும், தீனி தின்னாது, தொண்டையில் அடைக்கும், எழுந்து நிற்க மாட்டாது, கிடையுங் கொள்ளாது வருத்தப்படும்.

மருந்து:—பெருந்தும்பைச்சாறு	படி	$\frac{1}{4}$
சிறுதும்பைச்சாறு	,,	$\frac{1}{4}$
சுக்கு	பலம்	1
மிளகு	,,	1

உபயோகிக்கும் விதம்:—இவைகளை அரைத்து உள்ளுக்குக் கொடுக்கவேண்டும். குடிக்க வெந்நீர் விடவும். இந்த மருந்துகளையே சரீரம் முழுதும் துவாலே போடவேண்டும்.

காத்தடைப்பன் நோய்

செய்குணம்:—உடம்பின் இடது பக்கத்தில் வீக்கம் உண்டாகும். அதைக் கையினால் தட்டிப்பார்த்தால் டொங் டொங்கு என்று கேட்கும், மாடு வெகு வருத்தப்படும், அடிக்கடி எழுந்திருக்கிறதும் படுக்கிறதுமாய் அரட்டல் புரட்டலுமாய் இருக்கும், காலினால் வயிற்றை அடித்துக் கொள்ளும், மூச்சு அதிக தீவிரமாய் விடும்.

மருந்து :—கடுகு பலம்-7 பொடிசெய்து வைத்துக் கொண்டு அத்துடன் 1-பலம் நெய்யும் வெந்நீர் படி-½ வார்த்து இரண்டையும் அத்துடன் சேர்த்துக் கலக்கி உள்ளுக்குக் கொடுக்கவேண்டும்.

குரட்டடைப்பன் நோய்

செய்குணம்:—அரைவாய்க்கொண்டு தீனி தின்னும், கழுத்தைக் கோணலாய் வைத்துக்கொண்டு நடக்கும்.

மருந்து:— நத்தைச்சூரி விரை ¼-படியை நன்றாக இடித்து 4-திரான் அரக்கு சாராயத்தில் கலக்கி உள்ளுக்குக் கொடுக்கத் தீரும்.

அல்லது,

சீரகம்	பலம்	1
ஏலம்	,,	¼
சர்க்கரை	,,	2

உபயோகிக்கும் விதம்:—இவைகளையும் இடித்து உள்ளுக்குக் கொடுக்கலாம். குடிக்க வெந்நீர் விடவும்.

முதுகில் சூடு
போடவும



தாக்கடைப்பன் நோய்

செய்குணம்:—தீவனம் தின்னாது, கொண்டைச் செவி எடுத்துப் பார்க்கும், கண்ணை உருட்டி விழிக்கும், கடைக் கண்ணால் பார்க்கும், இரண்டு நாள் போனபிறகு வயிறு வீங்கி விழுந்துகிடக்கும்.

மருந்து:—எலுமிச்சம்பழச்சாறு	படி	$\frac{1}{8}$
கண்டங்கத்திரிச்சாறு	,,	$\frac{1}{8}$
வெள்ளைப்பூடு	பலம்	5

உபயோகிக்கும் விதம்:-பூண்டை அரைத்து ஷை சாற்றில் கலக்கி உள்ளுக்குக் கொடுக்கவும். அதில் கொஞ்சம் எடுத்து வடிகட்டிக்கொண்டு கண்கள் காதுகள் மூக்கு இம்மூன்று இடங்களிலும் நசியம் செய்யவும். குடிக்க வெந்நீர் விடவும்.

இந்தப்படி
இரு விலாவிலும்
சுடவும்.



நாக்கடைப்பன் நோய்

செய்குணம்:-தீவனம் தின்னாது, கழிஞ்சுபோம், தலையை உயர்த்திப்பார்க்கும், இரண்டு நாசிகளிலும் சளிபோலேயும் வெள்ளையாகவும் உறைந்திருக்கும், நாக்கு தடித்திருக்கும்.

மருந்து:—அத்திக்காய்	படி	$\frac{1}{2}$
ஆவாரம்பட்டை	பலம்	1
இலந்தைப்பட்டை	,,	1

உபயோகிக்கும் விதம்:-இம்மூன்றையும் இடித்து 2-படி காடியில் கலக்கிக் கொடுக்கவேண்டும். அதில் கொஞ்சம் வடிகட்டி நாசியில் நசியம் பண்ணவும். எருக்கிலையை அரைத்து சிறுநீரில் கலக்கித் துவாலை போடவும். இடது விலாவில் சுடவும்.

இதுவுமது

செய்குணம்:—இரைதேடாது, திகைத்துநிற்கும், நாக்குத் தடித்திருக்கும்.

மருந்து:—அத்திக்காய்	பலம்	10
ஆவரைவேர்ப்பட்டை	,,	10

உபயோகிக்கும் விதம்:—இவைகளை இடித்துக் காடி விட்டுப் பிசைந்து 1-படி சாறு பிழிந்து புகட்டத் தீரும்.

இந்தப்படி
இரு கன்னத்திலும்
சுடவும்.



கதவடைப்பன் நோய்

செய்குணம் :—வாய் திறவாமலிருக்கும், கண் சிவந்திருக்கும்.

மருந்து:—இந்துப்பு	பலம்	$\frac{1}{4}$
சீனிக்காரம்	,,	$\frac{1}{8}$
காயம்	,,	$\frac{1}{2}$
வேப்பங்கொழுந்து	பிடி	1

உபயோகிக்கும் விதம்:—இவைகளை நன்றாய் அரைத்து வெந்நீர் அல்லது 1-படி பசுவின்பாலில் கலக்கி உள்ளுக்குக் கொடுக்கவேண்டும். அல்லது,

சுக்கு	பலம்	1
மிளகு	,,	$\frac{1}{2}$
திப்பிலி	,,	$\frac{1}{4}$
வசம்பு	,,	$\frac{1}{4}$
காயம்	,,	$\frac{1}{2}$

உபயோகிக்கும் விதம்:—இவைகளை அரைத்து கழுதை மூத்தரத்தில் கலக்கிக் கொடுக்கவேண்டும். சாயங்காலம் வெந்நீர் காட்டவும்.

குறிப்பு:-கட்டத்தொண்டை மேலாக வலதுகால் கீழாக இழுத்துத் தலையைக் கட்டி சுடவும்.

இதுவுமது

செய்குணம்:—கொம்பைசுற்றி வீங்கும், வாய் திறவாது, கண் சிவக்கும்.

மருந்து:—இந்துப்பு	பலம்	$\frac{1}{4}$
பெருங்காயம்	,,	$\frac{1}{4}$

உபயோகிக்கும் விதம்:—இவைகளை அரைத்து ஒரு பசுவின் பாலில் கலக்கி புகட்டவும். இந்தப்படி மூன்றுநாள் கொடுக்கத் தீரும்.

குறிப்பு:—இடதுபக்கம் மேல் தொண்டைமுதல் வலது கால்வரை இழுத்து மூன்று சூடு போடவும்.

இந்தப்படி

இரு விலாவிலும்

சுடவும்.



இந்தப்படி
கொம்பை சுற்றிச் சுடவும்.



இதுவுமது

செய்குணம்:—வாய்கிட்டும், கண் சிவக்கும்.

மருந்து:—இந்துப்பு	விராகனிடை	2
பெருங்காயம்	,,	2

உபயோகிக்கும் விதம்:-இவைகளை மயனமாய்ப் பொடித்து $\frac{1}{4}$-படி காடியில் கலக்கிப் புகட்டத்தீரும்.

இந்தப்படி இரு கன்னத்திலும்
சுடவும்.
இந்தப்படி தலையைக் கட்டிச்
சுடவும்.

மந்தடைப்பன் நோய்

செய்குணம்:—வாய்திறந்தும் தலை காணியும் தன்னைத் தான் அறியாமலும் தீவனம் தின்னாமலும் இருக்கும்.

மருந்து:—வெதுப்படை	பிடி	1
ஒட்டடை	,,	1

உபயோகிக்கும் விதம்:—இவை இடித்து 1-படி மோரில் கலந்து கொடுக்கவேண்டும்.

குறிப்பு:—புத்துமண்ணைக் கரைத்துக் காய்ச்சி மூன்று நாள் தேகம் முழுதும் பூசவும்.

இந்தப்படி
நெற்றியில் சுடவும்.



நீரடைப்பன் நோய்

செய்குணம்:-நீர் செறுத்து முக்கும், சாப்பிட்டு அலரும் குன்னிக்கொண்டு நிற்கும்.

மருந்து:—ஊமச்சிலை இடித்து வடிகட்டிக்கொண்டு ¼-படி வாழைக்கிழங்கும் தண்ணீர் ½-படி அல்லது தேங்காய்ப் பால் ½-படியில் கலக்கி உள்ளுக்குக் கொடுக்கத் தீரும்.

இந்தப்படி
இரு கடைவயிற்றிலும்
சூடு போடவும்.



இதுவுமது

7-கடுக்கா	கருஞ்சீரகம்
வசம்பு	கடுகு
நாமதாளி	மஞ்சணத்தியிலை

உபயோகிக்கும் விதம்:-இந்த 6-தினுசுகளையும் அரைத்து இத்துடன் பழம்புளி கூட்டிக் காடியில் கலக்கிக்கொடுக்கவும்.

இந்தப்படி
சூடு போடவும்.



கல்லடைப்பன் நோய்

செய்குணம்:—தீனி தின்னும், சாணியும் குணமாகப் போடும். ஆனால் அகதியாக நிற்கும், கொஞ்ச நாளில் கல்லு வந்து செறுக்கும், பின்பு கோலிற் கட்டும்.

மருந்து:—வெள்ளைப்பூடு	பலம்	1
கடுகு	,,	$\frac{1}{4}$
வெந்தையம்	,,	1
மாதளம்பிஞ்சு	,,	3
நவ்வற்கொழுந்து	,,	3
சித்திரைப்பாலடை	,,	7

உபயோகிக்கும் விதம்:—இவைகளை அரைத்து 4-படி வாழைக்கிழங்குச் சாற்றில் கலக்கி கொடுக்கவேண்டும்.

இந்தப்படி கோலிற் குருக்கே
மூன்று சூடு போடவும். | | |

இதுவுமது

செய்குணம்:—இரத்தமாய் நீர்விடும், ஈரல் குலைப்புறம் வீங்கும்.

மருந்து:—ஈருள்ளி	பலம்	10
மிளகாய் சந்தனம்	,,	1
அதிமதுரம்	,,	1
நற்சீரகம்	,,	1
இலவங்கப்பட்டை	,,	1
விருசங்கொழுந்து	பிடி	3
துத்தியிலை	,,	3

உபயோகிக்கும் விதம்:—இவைகளை அரைத்து ஆவின் வெண்ணெயிலாவது மோரிலாவது புகட்டத்தீரும். இந்தப்படி 3-நாள் கொடுக்கவும்.

இதுவுமது

மருந்து:—அத்திப்பிஞ்சு	படி	1
பருத்திப்பிஞ்சு	,,	1

உபயோகிக்கும் விதம்:—இவ்விரண்டையும் மயனமாய் அரைத்து பசுவின் மோரில் கலக்கிப் புகட்டத் தீரும். இந்தப்படி 3-நாள் கொடுக்கவும்.

இந்தப்படிக்கு
இடது விலாவிற் சுடவும்.



ஈளை மூக்கடைப்பன் குணம்

செய்குணம்:—கிருபூறு என்று இளைக்கும், கண்ணில் நீர்வடியும்.

மருந்து:—கோவையிலை	பிடி	4
வெள்ளுள்ளி	பலம்	3
சுக்கு	,,	2

உபயோகிக்கும் விதம்:—இவைகளை அரைத்துக் காடியில் கலக்கிப் புகட்டவும். இந்தப்படி 3-நாள் கொடுக்கத் தீரும்.

இந்தப்படி முதுகில்
சுடவும். } ——

மூக்கடைப்பன் நோய் குணம்

செய்குணம்:—கிறு கிறு என்றும் செருமும், கண்ணில் நீர்வடியும்.

மருந்து:—சுக்கு	பலம்	1
வெள்ளைப்பூண்டு	,,	1
கொடுப்பையிலை	பிடி	1
மிளகு	பலம்	1

உபயோகிக்கும் விதம்:—இவைகளை இடித்து 2-படி காடியில் கலக்கி உள்ளுக்குக் கொடுக்கவேண்டும்.

நசியம்:—சுக்கு வசம்பு மிளகு தைவேளையிலை இவைகளைச் சரிபாகமாய்ச் சேர்த்துப் பிழிந்து வடிகட்டி நாசியில் நசியம் பண்ணவும்.

துவாலை:—மூக்கரைச்சாரணைவேர் மிளகு வசம்பு இவைகளை அரைத்து ஷை சாரணையிலை சாற்றில் கலக்கித் துவாலை போடவும்.

இந்தப்படி
மூக்கில் சுடவும்.

இதுவுமது

செய்குணம்:—மூக்கை அடைத்து குறு குறு என்னும் திக்கு திக்கு என று செருமும்

மருந்து:—	கண்டங்கத்திரிப்பழம்	பலம்	2
	மிளகு	,,	½
	வசமபு	,,	¼
	குப்பைமேனி	பிடி	1
	தைவேளை	,,	1
	நொச்சிக்கொழுந்து	,,	1
	உப்பு	படி	½

உபயோகிக்கும் விதம்:—இவைகளை இடித்து மோரில் கலக்கி கொடுக்கவேண்டும்.

நசியம்:—நொச்சியிலை, ஈருள்ளி இவைகளை இடித்துச் சாருபிழிந்து சிறுநீரில் கலக்கி வடிகட்டி நாசியில நசியம் பண்ணவும். அல்லது சுண்டக்காய் ஊரிய தண்ணீரிலும் ஷை நசியம் பண்ணலாம்.

இந்தப்படி
இரு விலாவிலும்
சுடவும்.



இந்தப்படி மூக்கில்
சுடவும்.

இதுவுமது

செய்குணம் :—அழிமேய்ச்சல் மேயும், சாணி குணமாகப்போடும், நின்று திகைத்து நாசியில் செருமும், நாட் சென்றால் மூக்கினாலே கற்றாழஞ் சோறுபோலே ஓடும்.

மருந்து:—சுக்கு	பலம்	1
வெள்ளைப்பூண்டு	,,	1
வசம்பு	,,	½
நொச்சியிலை	பிடி	1
குப்பைமேனி	,,	1
தைவேளை	,,	1
சிறுதும்பை	,,	1
சங்கங்குப்பி	,,	1
எருக்கிலை	,,	1

உபயோகிக்கும் விதம்:—இவைகள் வகைக்குப் பிடி ஒன்றுசேர்த்து இடித்து சிறுநீர் விட்டு குழப்பி உள்ளுக்குக் கொடுக்கவும். குடிக்க வெந்நீர் விடவேண்டும்.

இந்தப்படி
இரு விலாவிலும்
சூடு போடவும்.



இந்தப்படி மூக்கு நேரில் சுடவும். — |

இதுவுமது

செய்குணம்:—மூக்கிலிருந்து சளி மிகுதியாய் உண்டாகும், சுல்ப காய்ச்சலும் காணும்.

மருந்து:—பொட்டிலுப்பை இங்கிலீஷ்யிடை ரூபா 1-ல் 3-நாள் காலை மாலை இரண்டு வேளையும் தீனியில் கலந்து கொடுக்கவேண்டும்.

குறிப்பு:—குளிர்காற்றாவது ஈரமாவது படவொட்டாமல் மாட்டை ஜாக்கிரதையாய் வைத்திருக்க வேண்டியது.

இதுவுமது

செய்குணம்:— மூக்கு அடைத்து குறுகுறு எனச் சிறுமும்.

மருந்து:—நொச்சியிலை
ஈருள்ளி

உபயோகிக்கும் விதம்:—இவைகளைச் சமமாய்ச் சிறுநீர் விட்டுத் தட்டி நாசியில் பிழியத் தீரும்.

இதுவுமது

கண்டங்கத்தரிப்பழம்
கரியுப்பு
தைவேளையிலை
வசம்பு
குப்பைமேனியிலை

உபயோகிக்கும் விதம்:—இவைகளைச் சமமாய்ச் சிறுநீர் விட்டுத் தட்டி நாசியில் பிழியத் தீரும்.

இந்தப்படி
இரு விலாவிலும் சூடு போடவும்.



இதுவுமது

செய்குணம்:—மூக்கு அடைத்துக் கிரு பூரு என்று இளைக்கும், கண்ணில் நீர்வடியும்.

மருந்து:—பொன்னாங்கணிசமூலம்	பலம்	10
சுக்கு	,,	10
மிளகு	,,	2
வெள்ளுளி	,,	2

உபயோகிக்கும் விதம்:—இவைகளை அரைத்துக் காடியில் கலக்கிப் புகட்டத் தீரும்.

இந்தப்படி 0 0 0
முதுகில் 0 0 0
சுடவும். 0 0 0

தவளை மூக்கடைப்பன் நோய்

செய்குணம்:—மூக்கு அடைத்து நெடுமூச்சு வாங்கும், தடுமாறும்.

மருந்து:—மிளகு
திப்பிலி
சிந்தியிலை

உபயோகிக்கும் விதம்:—இவைகளைச் சமமாய்ச் சிறுநீர் விட்டு இடித்து பில்லை தட்டி நாசியில் பிழியவும்.

இந்தப்படி
மூக்கில்
சுடவும்.



இந்தப்படி
தலையைச் சுற்றிலும்
சுடவும்.



மூக்குத் தண்டடைப்பன் நோய்

செய்குணம்:—மூக்குத்தண்டு விரிசு தடுமாறும், நெடுமூச்சு வாங்கும்.

மருந்து:—சுக்கு	பலம்	1
மிளகு	,,	1
திப்பிலி	,,	½

உபயோகிக்கும் விதம்:-இம்மூன்றும் ஒன்றாய் அரைத்து 1-படி காடியில் கலக்கி உள்ளுக்குக் கொடுக்கவேண்டும்.

நசியம்:—மிளகு திப்பிலி இரண்டும் ஒரு அளவாகச் சேர்த்து அரைத்து சிந்தியிலைச் சாற்றில் கலக்கி வடிகட்டி நாசியில் நசியம் பண்ணத் தீரும்.

இந்தப்படி
தலையில் சுடவும்.



இந்தப்படி மூக்குமேல் சுடவும்.

சகல அடைப்பனுக்கு மருந்து

மிளகு	பலம்	$\frac{1}{4}$
புளியமடற்கிழங்கு	,,	$\frac{1}{4}$
சிறுகுரட்டைக்கிழங்கு	,,	$\frac{1}{4}$
தில்லைவேர்ப்பட்டை	,,	$\frac{1}{4}$
கொடுவேலிவேர்ப்பட்டை	,,	$\frac{1}{4}$
திருகுகள்ளிவேர்ப்பட்டை	,,	$\frac{1}{4}$
எருக்கம்வேர்ப்பட்டை	,,	$\frac{1}{4}$
பெருங்காயம்	,,	$\frac{1}{4}$

உபயோகிக்கும் விதம்:-இவைகளை இடைப்படி கல்வத்திலிட்டு எருக்கம்பாழைப்புச் சாற்றிலும் கோழியவரையிலைச் சாற்றிலும் தனித்தனியே மெழுகுபோலாட்டி பாக்கு அளவாய் உருட்டி வைத்துக்கொண்டு வேளை ஒன்றுக்கு ஒரு உண்டைவீதம் ஊமத்திலையில் சுருட்டிக் கொடுக்கவும். வியாதி அதிகரித்திருந்தால் ஷை உண்டை கொடுத்தவுடன் 1-பலம் இலுப்பைபிண்ணாக்கை அரைத்துக் கொடுத்துவரவும். வியாதி மீறினல் கோழிக்காரமும் பெருங்காயமும் வகைக்கு 1-பலம் வீதம் இடித்துக் கொடுத்துவர சகல அடைப்பனும் தீரும்.

ஈரல்முட்டி நோய்

செய்குணம்:—தீவனம் தின்னாது, திகைத்துக்கொண்டு நிற்கும், வயிறு ஊதும்.

மருந்து:—மாட்டை மல்லாத்திக்கொண்டு நெஞ்சாங்கொழுக்கில் $\frac{1}{8}$-படி நெய்யைக் காய்ச்சி சாணியை வழித்துக் கொண்டு விடவும். பின்பு,

மிளகு	படி	$\frac{1}{8}$
ஓமம்	,,	$\frac{1}{8}$
அதிமதுரப்பட்டை	பலம்	$\frac{1}{2}$
சுக்கு	,,	1
திப்பிலி	,,	$\frac{1}{2}$

இராம்பு	பலம்	$\frac{1}{4}$
இலவங்கப்பட்டை	,,	$\frac{1}{2}$
கருஞ்சீரகம்	,,	$\frac{1}{2}$
சீரகம்	,,	$\frac{1}{2}$
பாகலிலை	பிடி	4

உபயோகிக்கும் விதம்:-இவைகளைச் சேர்த்து அரைத்து $\frac{1}{4}$-படி வேப்பெண்ணை விட்டுப் பிசைந்து கொடுக்கவேண்டும். அல்லது காடியிலும் பிசைந்து கொடுக்கலாம்.

இந்தப்படி
இரு விலாவிலும்
சூடு போடவும்.



இதுவுமது

செய்குணம்:—தீவனம் தின்னாது, புல்லரிக்கும், வாயில் நீர் வடியும், செருமும், அசை போடாது, கண் சிவந்திருக்கும், மேலே குளிர்ந்திருக்கும்.

மருந்து:—மஞ்சள்	பலம்	$\frac{1}{2}$
சுக்கு	,,	2
காயம்	,,	$\frac{1}{4}$
திப்பிலி	,,	$\frac{1}{2}$
குரோசாணி ஓமம்	,,	1
கடுகு	,,	1
மிளகாய்ப்பழம்	,,	1
வெள்ளைப்பூடு	,,	2
எருக்கலம்பூ	பிடி	1

உபயோகிக்கும் விதம்:—இவைகளை இடித்துச் சாராயம் விட்டுப் பிசைந்து உள்ளுக்குக் கொடுக்கவேண்டும். குடிக்க வெந்நீர் வைக்கவும்.

இந்தப்படிக்கு
இடது விலாவில் சூடு போடவும்.

இதுவுமது

செய்குணம்:—தீவனம் தின்னாது, புல்லரிக்கும், கண்ணில் பீளை சாடும், வயிறு உப்பும், புழுக்கைப்போல் சாணி போடும், இரத்தம்போல் நீர் விடும், பல்லைக் கடிக்கும்.

மருந்து:—மஞ்சட் குருந்தட்டிசமூலம்
மளுக்காரைத்தொலி

உபயோகிக்கும் விதம்:—இவ்விரண்டும் மாங்காய் அளவு சேகரித்துக்கொண்டு தனித்தனி அரைத்து 2-படி காடியில் கலக்கி உள்ளுக்குக் கொடுக்கவும்.

துவாலை:—பிறகு, பிரண்டையை இடித்துத் துவாலை போடவும்.

முன்னங்கால் பட்டையிலிருந்து
பின்னங்கால் தொடைவரையில்
இழுத்து சூடு போடவும்.

இதுவுமது

செய்குணம்:—கண் சிவந்திருக்கும், செவி தாழ்ந்திருக்கும், வாயில் நீர் வடியும், வயிறு உப்பியிருக்கும், தீனி தின்னாது.

மருந்து:—மிளகு	படி	$\frac{1}{4}$
பறங்கிப்பட்டை	பலம்	1
வசம்பு	,,	$\frac{1}{4}$
வெள்ளைபூடு	,,	2

உபயோகிக்கும் விதம்:—இவைகளை இடித்து இத்துடன் மளுக்காரைத்தொலி அரைத்து மாங்காயளவு சேர்த்து 1-படி தும்பை சாற்றில் இவையெல்லாம் கலக்கிக் கொடுக்கவும், குடிக்க வெந்நீர் காட்டவும்.

இந்தப்படிக்கு
இரு விலாவிலும்
சூடு போடவும்.



இதுவுமது

செய்குணம்:—புல் வைக்கோல் தின்னாது, வயிறு ஊதும்.

மருந்து:—பரங்கிப்பட்டை	பலம்	1/2
வசம்பு	,,	1/2
வெள்ளை வெங்காயம்	,,	1

உபயோகிக்கும் விதம்:—இவைகளை எல்லாம் ஒன்றாய் அரைத்து சிறுதும்பைச் சாற்றில் சேர்த்துக் கொடுக்கவும். கண் சிவந்தாலும், செவி தாழ்ந்தாலும் மூன்றுபொழுது கொடுக்கவும்.

இந்தப்படிக்கு
விலாவில்
சூடு போடவும்.

இதுவுமது

செய்குணம்:—பல்லை நெரு நெரு எனக் கடிக்கும், தீவனம் தின்னாது, திகைத்து நிற்கும், வயிறு ஊதும்.

மருந்து:—பிரண்டைத்தண்டு	பிடி	1
மதுக்காரவேர்ப்பட்டை	,,	1

உபயோகிக்கும் விதம்:—இவைகளை மயனமாய் அரைத்துக் காடியில் கலக்கிப் புகட்டத் தீரும்.

இந்தப்படி கழுத்திலிருந்து
வால்வரையில்
இருபுறமும் இழுத்து சுடவும்.



இதுவுமது

மருந்து:—இலுப்பைப் பிண்ணாக்கு	பலம்	1
எருமை வெண்ணெய்	,,	1

உபயோகிக்கும் விதம்:—இவைகளை அரைத்துக் கழுநீரில் கலக்கிப் புகட்டவும்.

இதுவுமது

செய்குணம்:—வயிறு ஊதிக் குராவி நிற்கும்.

மருந்து:—தேற்றும்பழம்	பலம்	10
கொல்லங்கோவைக்கிழங்கு	,,	10
(அல்லது)		
நெய்க்கொட்டான்பழம்	,,	10
ஷை கிழங்கு	,,	10

உபயோகிக்கும் விதம்:—ஷை மருந்துகளில் ஒரு பாகத்தைக் காடியில் அரைத்துக் கலக்கிப் புகட்டத் தீரும்.

தடியீரல் முட்டிநோய்

செய்குணம்:—நெஞ்சு இடிக்கிக்கொண்டு நெஞ்சாலே தள்ளி நடக்கும், தலையைக் குலுக்கும், குன்னி ஓங்காரிக்கும்

மருந்து:—இலுப்பைப் பிண்ணாக்கு எலுமிச்சங்காய் அளவு பசுவின் வெண்ணை மாங்காயளவு சேர்த்துக் கொடுக்கவும்; அவரியிலையும் சிற்றவரியிலையும் சுக்கும் அரைத்து நெஞ்சாங்கொழுந்தில் பூசவும்.

முன்னங்காலுக்கு முன்னே சூடு போடவும்.

கிராமுட்டியின் குணம்

செய்குணம்:—திகைத்து நிற்கும், வயிறு ஊதும்.

மருந்து:—ஷை மாட்டை கீழே விழத்தள்ளி மல்லாத்திக் கொண்டு நெஞ்சுக்கொழுந்தில் ஆழாக்கு ஆவின்நெய்யைக் காய்ச்சிவிட்டு, அப்பால் இதன் அடியில் கண்டிருக்கிற மருந்தை கொடுக்கத் தீரும்.

பாகயிலை	பிடி	4
மிளகு	படி	¾

உபயோகிக்கும் விதம்:—இதை அரைத்து காடியில் கலக்கி புகட்டத் தீரும்.

இதுவுமது

மருந்து:—ஓமம்	பலம்	5
அதிமதுரம்	,,	5
இலவங்கப்பட்டை	,,	$\frac{1}{2}$

உபயோகிக்கும் விதம்:—இவைகளை அரைத்து காடியில் கலக்கிப் புகட்டத் தீரும்.

இந்தப்படிக்கு
இடதுவிலாவில் சுடவும்.



வயிறு ஊதினால்

மருந்து:—கத்தாழைவேர்	பலம்	5
மூக்கரைச்சாரணைவேர்	,,	5
மிளகாயிலை	,,	5

உபயோகிக்கும் விதம்:-இவைகளை அரைத்து வெந்நீரில் கலக்கிப் புகட்டத் தீரும்.

திரட்டி ஈரல்முட்டி நோய்

செய்குணம்:—முன்னங்கால் இரண்டையும் பாரிப் பாரி நிற்கும், காலையுந் தடுமாரவைக்கும், தீனி அரைவாய்க் கொண்டு சுவைக்கும், தலையைத் தாழ்த்தி நிற்கும்.

மருந்து:—வெள்ளைப்பூண்டு	பலம்	1
மிளகு	,,	$\frac{1}{8}$
குப்பைமேனி	பிடி	1
கையாந்தகரை	,,	1

உபயோகிக்கும் விதம்:—இவைகளை ஒன்றாய் அரைத்து 1-படி காடியில் கலக்கி கொடுக்கவும்.

இந்தப்படி
இரு விலாவிலும்
சூடு போடவும்.



இந்தப்படி
முன்னங்கால் முன்னே சுடவும்.

சுழத்தி நோய்

செய்குணம் :—தீனி அரைவாய்க்கொண்டு தின்னும், சாய்ஞ்சி நடக்கும், நாட்சென்றால் கண் தெரியாது, அந்தக் கண் வாக்கிலே சுழற்றும்.

மருந்து:—அபின்	பலம்	மாகாணி
கஞ்சாயிலை	,,	,,
மருள் ஊமத்து	,,	,,
சுழலாவாரைவித்து	,,	,,
சுழல்வண்டு		30

உபயோகிக்கும் விதம்:—இவைகள் எல்லாம் ஒன்றாய் அரைத்து பனங்கள்ளு படி-1, சாராயம் படி-½ சேர்த்துக் கொடுக்கவும். சாயந்திரங் குடிக்க வெந்நீர் விடவும்.

குறிப்பு:—சுழற்றுகிற புறத்தில் நீலநரம்பு பார்த்து இரத்தங் குத்தி எடுக்கவும்.

பின்பு இரண்டு காதுகளிலும்
மடலிலும் சூட்டுக்கோலால் துளைத்து
முகத்தைக் கட்டி நாலுகாலிலும்
சூடு போடவும்.



இதுவுமது

செய்குணம்:—கொப்பூழைப்பற்றி வீங்கும், சுழன்று வலிக்கும்.

மருந்து:—கடுக்காய்	பலம்	7
திப்பிலி	,,	¼
ஓமம்	,,	¾
நெல்லிப்பருப்பு	,,	1

உபயோகிக்கும் விதம்:—இவைகளை இடித்து 2-படி பசுவின் பாலிலாவது 1-படி நெய்யிலாவது கொடுக்கலாம்.

குடிக்க வெந்நீர் விடுவதுமல்லாமல், ஆலஞ்சருகைச் சுட்டு அரைத்து வீக்கத்திற் பூசவும். கலைமான் கொம்பையும் உரைத்துப் பூசலாம்.

இந்தப்படி
முதுகில் சூடு
போடவும்.



இதுவுமது

செய்குணம்:—செக்கு அடித்தாப்போலே சுற்றிச் சுற்றி வரும், செவிதாழும், மண்போலே சாணிபோடும்.

மருந்து:—சுழல்வண்டு	பலம்	$\frac{1}{4}$
வெளிச்சிப்பிசின்	,,	$\frac{1}{4}$
நாய்க்கடுகு	,,	1
நற்சீரகம்	,,	1
சுக்கு	,,	$\frac{1}{4}$

உபயோகிக்கும் விதம்:—இவைகளை அரைத்து நொச்சியிலைச்சாறு குளிதாமரை இலைச்சாறு வள்ளிக்கொடிச்சாறு இவைகள் வகைக்கு படி-$\frac{1}{4}$ எல்லாம் ஒன்றுசேர்த்து 1-படி காடியில் கலக்கி கொடுக்கவேண்டும்.

(அல்லது) - வேப்பம்பிசின்	பலம்	$\frac{1}{4}$
சுக்கு	,,	$\frac{1}{2}$
நாய்க்கடுகு	,,	$\frac{1}{4}$

இத்துடன் இலைக்கள்ளிச்சாறு படி-$\frac{1}{4}$, மாவிலங்கப்பட்டைச்சாறு படி-$\frac{1}{2}$, 1-படி காடியில் ஒன்றாய்ச் சேர்த்து கலக்கிக் கொடுக்கலாம்.

நசியம்:—சுழன்று வருகிறபோது தோளங்கொடியை வாட்டி இரண்டு காதிலும் பிழிந்த பின்பு, 4-பிடி ஒட்டுப் பில்லை கொண்டுவந்து இடித்துக் கவளமாகக் கொடுக்கலாம். ஈரலைப்பற்றி வலது விலாவிலும் நாலு கால்களிலும் அடியில் கண்டபடி சூடு போடவும். இதில் தீராவிட்டால் வாயைத் திறந்து பார்த்தால் இரண்டு நரம்பு நீலநிறமாக யிருக்கும்.

அதைச் சூரைமுள்ளினால் குத்தி இரத்தத்தை வாங்கிப் போட்டு உப்பு மிளகும் சேர்த்துத் தேய்த்துவிடவும். இடஞ் சுத்தி வந்தால் வலதுகொம்பில் இரண்டு விரலுக்குமேல் சூட்டுக்கோலால் சுட்டு நல்லெண்ணெயைக் காய்ச்சி விடவும்.

வலது விலாவில் சுடவும்.



நாலு கால்களிலும் சுடவும்.



இதுவுமது

செய்குணம்:—சுழலச்சுழல வரும், கண் சிவக்கும், வாயில் வெண்ணுரை தள்ளும்.

மருந்து:—வெள்ளாட்டுப்புழுக்கை	பலம்	$\frac{1}{4}$
நாயுருவி	,,	$\frac{1}{2}$

அரைத்து

பசுவின் மூத்திரம்	படி	1
பச்சைநெல்லுதவிடு	,,	2
வெள்ளாட்டு மூத்திரம்	,,	1

உபயோகிக்கும் விதம்:—இவைகளை சேர்த்துக் கொடுக்கவும், சிந்தில்தண்டை இடித்து கலக்கிக் கொடுக்கவும். துவாலையும் போடலாம்.

வலது விலாவில் சுடவும்.



இடது விலாவில் சுடவும்.



இதுவுமது

செய்குணம்:—சுழன்று கிடக்கும், நடக்கமாட்டாது, கண்ணில் பீளை சாடும்.

மருந்து:—கொன்றையிலை	பிடி	2
வசம்பு	பலம்	¼

உபயோகிக்கும் விதம்:—இரண்டும் அரைத்து பச்சை மஞ்சள் சாறு படி-¼, 1-படி கஞ்சியில் கலக்கி கொடுக்கவும்.

இந்தப்படி
சூடு போடவும்.



இதுவுமது

செய்குணம்:-சுழன்று சுழன்றுக்கொண்டு வரும், வாயில் நீர்வடியும், சாணி துப்புரவாகப்போடும், ஆனால் அதின் நிறம் கொஞ்சம் வெள்ளையாக இருக்கும்.

மருந்து:-பேய்ப்பீர்க்கங்காய் காய்ந்தகூடு	பலம்	5
கொல்லன் கோவைக்கிழங்கு	,,	5
சீந்திக்கிழங்கு	,,	5

உபயோகிக்கும் விதம்:-இம்மூன்றும் சேர்த்து அரைத்து 1-படி வெந்நீரில் கலக்கிக் கொடுக்கலாம். குடிக்க வெந்நீர் வைக்கவும்.

இதுவுமது

செய்குணம்:—சுழன்று சுழன்று நிற்கும், மூக்குத் தண்டின்பேரில் பருமனாக வீங்கும.

கொம்பைச்சுற்றி
சூடு போடவும்.



இதுவுமது

செய்குணம்:—சக்கரம்போல் சுற்றிக்கொண்டு வரும், விக்கலெடுக்கும், வாயில் வெண்ணுரை தள்ளும், கண் சிவக்கும், பீளை சாடும், நடக்கமாட்டாது.

மருந்து:—வெள்ளாட்டு நீர்	படி	1
பசுவின் நீர்	,,	1
பச்சைநெல் தவிடு	,,	2

உபயோகிக்கும் விதம்:—இவைகளை ஒன்றாய்க் கலக்கி புகட்டவும். இந்தப்படி 3-நாள் கொடுக்கத் தீரும்.

இந்தப்படி
இடது விலாவில்
சுடவும்.

{O}

தவளை நோய்

செய்குணம்:—குளம்பு நீளும், மொளிக்கு மொளி கட்டும், தவழும், பிள்ளையைப்போல் தவழும்.

மருந்து:-கழுதை மண்டையோட்டை இடித்துப் பொடி செய்ததூள் பலம்-1, சுடலாவரையிலைச்சாறு படி-¼,

உபயோகிக்கும் விதம்:—இரண்டு செவ்வால் அரணையை ¼-படி வேப்பெண்ணையை காய்ச்சின பிறகு ஷை அரணையை எடுத்துப்போட்டு, அந்த எண்ணையும் சேர்த்துக் கொடுக்க வேண்டும்.

(அல்லது) - சுடலாவரையிலை மாங்கா அளவு, குப்பை மேனி மாங்கா அளவு இவைகளை அரைத்து 1-படி காடியில் கொடுக்கலாம். குடிக்க வெந்நீர் விடவும்.

இந்தப்படி வலது விலாவிலும் 0000
நாலுகாலிலும் சுடவும். 0000

அல்லது,

மருந்து:—மாவிலங்கிலை	பலம்	10
தைவேளை	,,	10
குப்பைமேனி	,,	10
தும்பை	,,	10
மிளகு	,,	1
வெள்ளைப்பூடு	,,	1

உபயோகிக்கும் விதம்:—இவைகளை அரைத்துக் கவளமாகச் செய்து கொடுக்கவும்.

இதுவுமது

செய்குணம்:—எழுந்திருக்கமாட்டாது, வயிறு ஊதும், மயிர் சிலிர்க்கும், தாழ்ந்து நிற்கும், நடக்கமாட்டாது.

மருந்து:—மிளகுசாறணைவேர் பலம் 5

உபயோகிக்கும் விதம்:—இதை அரைத்து ஒரு புட்டி சாராயத்தில் கொடுக்கவேண்டும்.

மறுநாள்

மஞ்சள்	பலம்	1
சுக்கு	,,	1
வசம்பு	,,	¼
சருள்ளி	,,	1
மிளகு	,,	½
பூவரசுயிலை	பிடி	1
வேலிப்பருத்தியிலை	,,	1
பிரண்டை	,,	1

இவைகளை சேர்த்து எல்லாம் ஒன்றாய் அரைத்து எலுமிச்சங்காயளவு உருண்டை செய்து கொடுக்கவும்.

(அல்லது) - சிறுகுருஞ்சாயிலைச்சாறு படி-½

உபயோகிக்கும் விதம்:—உள்ளுக்குக் கொடுக்கவும்.

துவாலை:—ஷை சாற்றை மேலே துவாலையும் போடலாம், குடிக்க வெந்நீர் விடவும்.

நசியம்:—சருள்ளி வசம்பு மிளகு
சிறுதும்பை குப்பைமேனி தைவேளை

உபயோகிக்கும் விதம்:—இவைகளை வகைக்குக் கொஞ்சம் இடித்துப் பிழிந்து, வடிகட்டி கண்களிலும் காதுகளினும் மூக்கிலும் நசியம்பண்ணத் தீரும்.

இடது விலாவில் சுடவும்.

இதுவுமது

செய்குணம்:—பிள்ளைகள் தவழ்தல்போலத் தவழும், நாலுகாலும் தள்ளும், பாறு எழுந்திருக்கமாட்டாது.

மருந்து:—சழலாவணையிலை	பலம்	10
குப்பைமேனியிலை	,,	10

உபயோகிக்கும் விதம்:—இவைகளைத் துவைத்துக் காடியில் கலக்கியாவது அல்லது அவைகளை அரைத்துக் கவளமாயாவது அல்லது ௸ இலைகளை இடித்துப் பிழிந்து தனிச் சாராயத்திலாவது கொடுக்கவும். இந்தப்படி 3-நாள் கொடுக்கத் தீரும்.

இந்தப்படி
வலது விலாவில்
சுடவும்.



இதுவுமது

மருந்து:—தைவேளை	பலம்	10
குப்பைமேனி	,,	10
தும்பை	,,	10
மிளகு	,,	1
வெள்ளைப்பூடு	,,	1

உபயோகிக்கும் விதம்:—௸ மருந்துகளை அரைத்துக் கவளமிடவும். இந்தப்படி 3-நாள் கொடுக்க ௸ தவளநோய் தீரும்.

இதுவுமது

மருந்து:—குருஞ்சாயிலை

உபயோகிக்கும் விதம்:—௸ இலையைக் கொண்டுவந்து காடிவிட்டு இடித்து வேளையொன்றுக்கு 1-படி சாறுவீதம் 3-நாள் கொடுக்க, ௸ தவளைநோய் தீரும்.

இதுவுமது

மருந்து:—நொச்சியிலை	பலம்	8
வாதமடக்கியிலை	,,	8
மாவிலிங்கிலை	,,	8

வன்னியிலை	பலம்	8
வெள்ளைப்பூடு	,,	1
மிளகு	,,	1
வெளிச்சிப்பிசின்	,,	2
கருஞ்சீரகம்	,,	2

உபயோகிக்கும் விதம்:-இவைகளை எல்லாம் அரைத்துக் தவளமிடவும். இந்தப்படி 8-நாள் கொடுக்க, ஷை தவள நோய் தீரும்.

இந்தப்படி கொம்பும் அரத்துச் செவியும்
அரத்து கண்ணடி நரம்புப்பார்த்து
நாலுகாலிலுமிரங்க சுடவும்.



தேளேறுமுடத்தின் நோய்

செய்குணம்:—ஒருகாலை நொண்டும், அந்த கால் சிறு குளம்பு அடியில் சுடும், கொழுந்துவற்றிக்காணும், முகம் களைப்பாக இருக்கும்.

மருந்து:—வேலிப்பருத்தியிலை-11
இளந்தயிலை 11

உபயோகிக்கும் விதம்:-பிடிங்கி நிலத்தில்போட்டு அதில் ஒன்பதுயிலை எடுத்து, எருக்கம்பழுப்பில் ஒன்றுசேர்த்து, மூன்றும் கசக்கி மாட்டின் கால்கொழுந்திலிருந்து குளம்பு வரை வாய்பேசாமல் தடவிப் பின்னங்கால் தடத்தில் கால் மாறி பூமியில் புதைக்கவும். விடத்தொலியை ஆதிவாரத்தில் பறித்து கால்மாறிப் புதைக்கலாம்.

அல்லது,

நல்லெண்ணை
எருக்கம்பால்

உபயோகிக்கும் விதம்:—இவை கலந்து சூரிய உதயத்துக்கு முன்னே அந்த முடமான காலில் முழங்காலுக்கு மேலே குத்தவேண்டும்.

பிறகு,

மருந்து:—சுக்கு	பலம்	1
மிளகு	,,	½
திப்பிலி	,,	¼
வசம்பு	,,	¼
தைவேளை வேர்	,,	¼
குப்பைமேனிவேர்	,,	½

உபயோகிக்கும் விதம்:—இதுகளை அரைத்து இரண்டு பாம்பரணையைப் பிடித்துக் குடலை எடுத்துப்போட்டு ½-படி வேப்பெண்ணையைக் காய்ச்சி அதில் அரணையுடன் எண்ணையையும் சேர்த்து உள்ளுக்குக் கொடுத்து, குடிக்க வெந்நீர் விடவேண்டும்.

இந்தப்படி
நாலு துடைகளிலும்
சுடவும்.

கரணை நோய்

செய்குணம்:—வெயிலில் நில்லாது, நீரில்போய்ப் படுக்கும், வலதுபுறம் சாய்ந்து மேய்ச்சல் மேயும், இடதுசெவி தாழ்ந்து நிற்கும்.

மருந்து:—அத்திப்பிஞ்சு	பிடி	1
பருத்திப்பிஞ்சு	,,	1
நாறுமீன் கழுவினதண்ணீர்	படி	1
சரளைமீன்	மாங்காயளவு	

உபயோகிக்கும் விதம்:—இவைகளை அரைத்து 3-படி பனங்கள்ளில் கொடுக்கவேண்டும்.

அல்லது,

ஓரிலைத்தாமரை
ஆனைவணங்கி

உபயோகிக்கும் விதம்:—இவை வகைக்கு மாங்காயளவு அரைத்து 1-படி பசுவின்பாலில் கொடுக்கவும்.

இதுவுமது

செய்குணம் :—வெயிலில் நில்லாது, நிழல் பார்த்து நிற்கும், அரைவாய்க்கொண்டு தீனி தின்னும், மெலிந்து போகும், நெடுமயிர் வளரும், வெயிலிற்போனால் இளைக்கும், இது அசாத்திய வியாதி.

மருந்து:—ஆவாரம்பட்டை	பலம்	1
பேய்க்குமட்டிக்காய்	,,	2

உபயோகிக்கும் விதம்:—இவைகளை அரைத்து 1-படி காடியில் கலக்கி கொடுக்கவேண்டும்.

அல்லது,

மருந்து:—மிளகு	பலம்	1
காயம்	,,	¼
கண்டங்கத்திரி	பிடி	1
சிறுதும்பை	,,	1

உபயோகிக்கும் விதம் :—இவைகளை ஒன்றுசேர்த்து அரைத்து வெந்நீரில் கலக்கி கொடுக்கவேண்டும்.

அல்லது,

ஒரு குள்ளநரியின் ஈரல் ஷை இரத்தம், ஆற்று அசரை மீன் படி-1, அல்லது படி-2,

உபயோகிக்கும் விதம்:-பாலில் சேர்த்து கொடுக்கலாம்.

அல்லது,

காக்கையைப் பிடித்து தீயில் கருகவாட்டி ரோமம் போக்கி, இறகு கால் இவைகளையும் நீக்கி, நன்றாக இடித்து நாய்க்கோட்டாம்வேர் பலம்-5, சேர்த்து அரைத்து 2-படி காடியில் கலக்கிக் கொடுக்கவும்.

துவாலை:—பிறகு குரையிலையை அரைத்து கலக்கித் துவாலை போடவேண்டும். குடிக்க வெந்நீர் விடவும்.

இந்தப்படி
இரு விலாவிலும்
சூடு போடவும்.



அங்கிரி நோய்

செய்குணம்:—கண்விழி இரண்டும் மயிலிரத்தம்போல் இருக்கும்.

மருந்து:—துளசியிலைச்சாறு	படி	½
மோர்	,,	1

உபயோகிக்கும் விதம்:—மாங்காயளவு புளியில் கரைத்துக் கொடுக்கவும்.

இந்தப்படி
தலையில் சூடு போடவும்.

இதுவுமது

செய்குணம்:—(1) கண் சிவக்கும், வாயில் நீர் வடியும், செவி தாழும், குரவளையைப்பற்றி வீங்கும். (2) கண்சிவப்பாயிருக்கும், வாயில் நீர் வடியும், செவி தாழும்.

இவ்விரண்டுக்கும்,

மருந்து:—ஊமத்திலை	பிடி	1
மதுகாரைவேர்ப்பட்டை	,,	1
மிளகு	படி	¾
எருக்கிலைப்பழுப்பு	,,	7

உபயோகிக்கும் விதம்:—இவைகளை மயனமாய் அரைத்துக் காடியில் கலக்கிப் புகட்டவும். இந்தப்படி மூன்றுநாள் கொடுக்கத் தீரும்

இந்தப்படி
இடது விலாவில்
சுடவும்.



உலர்த்தி நோய்

செய்குணம்:—பார்க்கப் பார்க்கப் பாலைபோல் உலர்ந்து போகும், தேறமாட்டாது.

மருந்து:—வேப்பம்பட்டையை 10-ரூபாய் இடை

உபயோகிக்கும் விதம்:—இதை நிறுத்து 1-படி தண்ணீரில் போட்டு வற்றச்செய்து ½-படி கியாழம் இறக்கி அதில் 5-ரூபாயிடை உப்பும் சேர்த்துக் கொடுக்கவும்.

(அல்லது) அகத்தியிலைச்சாறு படி-½ கொடுக்கவும்.

(அல்லது) வசம்பு பலம்-½ அரைத்து (இத்துடன்)

மணத்தக்காளி யிலைச்சாறு	படி-½
மிதிபாகலிலைச்சாறு	,, ¾

உபயோகிக்கும் விதம்:—இவைகளை சேர்த்துக் கலக்கிக் கொடுக்கவும்.

(அல்லது) கஞ்சாங்கோரையிலைச்சாறு படி-½ கொடுக்கவும்.

(அல்லது) பேய்க் குமட்டிக்காய்ச்சாறு	படி	¼
விளக்கெண்ணெய்	,,	¼

உபயோகிக்கும் விதம்:—இவைகளைச் சேர்த்துக் கொடுக்கவும்.

இந்தப்படி
இரு விலாவிலும் சுடவும்.

ஈரலுலர்த்தி நோய்

செய்குணம்:—தீவனம் அடைச்சித் தின்னாது, தின்றாலும் செமியாது, சாணி அதவல் குதவலாகப் போடும், காற்றுக் கழியும்.

மருந்து:—அதிமதுரம்	பலம்	2
ஏலம்	,,	1
மிளகுச்செடியிலை அரைத்தது	மாங்கா அளவு	
(அல்லது) மிளகு அரைத்தது	,,	
வெள்ளறுகு அரைத்தது	,,	
தைவேளை அரைத்தது	,,	
வெண்ணெய்	,,	

உபயோகிக்கும் விதம்:—இவைகளை 1-படி பசுவின் பாலில் கலக்கிக் கொடுக்கவேண்டும்.

இந்தப்படி
இடது விலாவில் சுடவும்.

(அல்லது) வெற்றிலை	பலம்	5
மிளகு	,,	2

உபயோகிக்கும் விதம்:—இவைகளை அரைத்து வெந்நீரில் கலக்கிக் கொடுக்கலாம்.

எரு உலர்த்தி நோய்

செய்குணம்:—வயிறு ஊதும், தீனி தின்னாது, செவி தாழும், மயிர் சிலிர்க்கும், எரு உலர்ந்திருக்கும்.

மருந்து:—களிப்பாக்கு	பலம்	1
சீனி	,,	1
கடுக்காய்த்தோடு	,,	30
கற்றாழஞ்சோறு	படி	½
பழம்புளி	மாங்காயளவு	

உபயோகிக்கும் விதம் :—இவைகளை 1-படி காடியில் கலக்கிக் கொடுக்கவேண்டும்.

இந்தப்படி
இடது விலாவில்
சூடு போடவும்.

வறட்சி நோய்

செய்குணம்:—கால் ஓய்ந்து எய்ப்பு இளைப்பாக மூசு மூசு என்கும், சாணியுடன் சீதமும்விழும், சவற்றலாக வற்றும், செருமும்.

மருந்து:—ஏலம்	பலம்	$\frac{1}{4}$
கிராம்பு	,,	இ
அதிமதுரம்	,,	1
இலவங்கப்பட்டை	பலம்	1
நீர்ப்பூலாத்திவேர்	மாங்காயளவு	

உபயோகிக்கும் விதம்:—இவைகளை அரைத்து 1-படி பாலில் கொடுக்கவேண்டும்.

இந்தப்படி
மூதுகில் சுடவும்

பெரு நோய்

செய்குணம்:—மாடுகளுக்கு உண்டான எல்லா வியாதிகளைப் பார்க்கிலும் இது முக்கியமானதாக இருக்கிறது. இன்ன குறிப்பிட்ட காலத்துக்குத்தான் உண்டாகத் தகுந்தது என்று இல்லை. எந்த ருதுக்களிலும் உண்டாகும். இந்த வியாதி கண்டவுடனே மாட்டின் செவிகள் குளிர்ந்து தாழ்ந்திருக்கும். ரோமம் சிலிர்த்திருக்கும், தேகம் கனத்துச் சோம்பலாய் நிற்கும், தீனி தின்னமாட்டாது. சரியானபடி நீர்விடாமல் அற்ப சொற்பமாய் நீர் விடுகிறது சிவப்பு நிறமாக இருக்கும், அதினுடைய இரத்த ஓட்டம் துரிதமாக விருப்பதில் சிலது மாடுகள் பலவீனமாயும் சிலது பலமாயும் ஓடிக்கொண்டிருக்கும். மூக்கினாலும் கண்களினாலும் நீர் வடிந்துக்கொண்டிருக்கும். சில மாடுகளுக்குக் கண்பட்டைகள் வீங்கி அக்கினிப்பொறிபோ லிருக்கும் கண்களிலிருந்தும் மூக்கிலிருந்தும் அதிகமாய் ஜலம் வடிந்துகொண்டிருக்கும். கண்கள் முதலில் தெளிவாக ஜலம் ஊறிக்கொண்டுமிருந்து, இப்பால் மஞ்சள் நிறமாயும் போகும். மொத்தமாய் ஷை மாட்டின் ஸ்திரமில்லாமல் காட்டு மாடுகளுக்கு ஒப்பாக ஓடித் திரிந்து சமீபத்தில் போகிறவர்களை முட்டுகிறதற்கும் ஆயத்தப்படும். இப்படி நடந்தபின், ஷை மாடு கீழேவிழுந்து கொஞ்சநேரம் கறட்டுக் கரட்டு என்று இழுத்து கொஞ்சந் தெளிவு கண்டபோதிலும் இறந்து

போகும் சில மாடுகள் நெருமிக்கொண்டு அதிகமாக இளைத்துக்கொண்டும் இருக்கும். சில மாடுகளுக்குச் சாணியுடன் இரத்தமும் சலமும் விழும்.

செய்யும் கிரமம்:—மாடுக்கு ஷெ வியாதி கண்டவுடனே அம்மாடுடன் இருக்கிற மற்ற மாடுகளைப் பிரத்யேகமாய் வைத்துப் போடவேணும். வியாதி கண்டவுடனே எவ்வளவு துரிதத்தில் மருந்து செய்யப்படுகிறதோ அவ்வளவு சீக்கிரத்தில் சவுக்கியமாகும்.

உபயோகிக்கும் விசர்:—இவைகளை மயிலிறகும் புளிக்கறியும் உள்ளுக்குக் கொடுக்கவேண்டும்.

இந்தப்படி முதுகில் சுடவும். | | |

இந்தப்படி விலாவில்
சூடு போடவும். ({

(அல்லது) ஷெ சிக்கின் செய்கை என்ன ஸ்திதியாக இருந்தபோதிலும், முதலில் செய்யவேண்டியது. ஷெ மாட்டின் கழுத்து நரம்பில் ஒரு கூர்மையான கத்தியினாலே ஒரு அங்குல நீளத்தில் குத்தி சேர்-1½, அல்லது 2-படி அளவுக்கு இரத்தம் எடுத்து விடவேண்டும்.

பிறகு இரத்தம் குத்தி எடுத்து அதின்பேரில் 8-அவுன்ஸ் விளக்கெண்ணை அல்லது 10-ரூபாயிடை கரிய பவளத்தை ¼-படி தண்ணீரில் சேர்த்து உள்ளுக்குக் கொடுக்க வேண்டியது.

தவிர சாணியை ஜலத்தில் கொழம்பாய்க் கரைத்து வாய் அகன்ற சட்டியில் வார்த்து காய்ச்சி ஷெ மாட்டின் திரேகமுழுதும் போட்டு ஷெ மாட்டை நிழலில் வைத்திருக்க வேண்டும்

மேற்குறிக்கபடி ஒருதபா இரத்தம் குத்தி எடுப்பதில் சவுக்கியப்படாவிட்டால் அப்படிச் செய்ததற்கு 3-மணி நேரத்துக்குப் பின்பு, மறுபடியும் 1-படி ரத்தம் எடுக்க வேணும். வேதும் மேற்குறித்தபடியே போட்டுக்கொண்

KZ:4:6 N60

டிருக்கவும். ஷை மாடு சாணி போடாதிருந்தால் ½-படி விளக்கெண்ணெயை இளஞ்சூடுள்ள ஜலம் 1½-படியில் கலந்து பவனவாய் வழியாக விடவும்.

இந்தப்படி மேற்கழுத்தில் கொம்புகளின்
அடிமுதல் சிமிழ்வரை ஷை நீளமுழுமையிலும் ——
இரண்டு வாரையாக இழுத்து இருபுறமும் ——
சூடு போடவும்.

குறிப்பு:—பீரங்கி வண்டிகளுக்கு உபயோகப்படுத்தி வருகிற மாடுகளுக்கு ஒப்பான உயரமும் காத்திரமும் உள்ள பாரிய மாடடுகககு இதில சொல்லியிருக்கற அளவுபபடி இரத்தம் குத்தி எடுககலாம். அதற்குக் கீழ்தரமான மாடுகளுக்கு அந்தத் தரத்துக்குத தக்கபடி இரத்தம் குத்தி எடுககவேண்டிய அளவைக் குறைததுககொள்ள வேணடியது. ஆனல் இது நனறுயக கைம்தாந்தவர்கள் தான் செயயலாம.

கவனிப்பு:—மேற்கண்ட மருந்தினுல் வியாதி அதிகமாய் குணத்துக்கு வந்தினபேரில் இதன அடியில் கண்டபடி மசாலா கொடுக்கவேண்டும்.

(அல்லது) - மஞ்சள்	பலம்	1
சதகுப்பை	,,	1
கருளளி	,,	2

உபயோகிக்கும் விதம்:—இவைகளை அரைத்துத் தயிர் படி 2-ல் கலக்கி ஈராலுபாகம செய்து, அனறுடும இரண்டு தபா கொடுககவேணடியது. பிறகு காயந்த புளிக்கறியை அதை தணணீர்விட்டு அரைத்துக கலக்கி இரண்டு அலலது மூன்றுநாள் காலமே கொடுக்கலாம்.

பெருவெக்கை நோய்

செய்குணம்:—மயிர் சிலிர்க்கும், வாயில் நீர்வடியும், இரை தின்னுது.

மருந்து:—எள்ளு பலம் 2

MAD

உபயோகிக்கும் விதம்:—இடித்து ஆவின்பாலில் கலக்கி 3-நாள் கொடுக்கவும்.

இதுவுமது

செய்குணம்:—வாயில் நீர்வடியும், திகைத்து நிற்கும்' கண்ணில் பீளை சாடும், இரை தின்னாது.

மருந்து:—கருஞ்சீரகம்	பலம்	3
அதிமதுரம்	,,	3

உபயோகிக்கும் விதம்:-இவைகளை அரைத்துக் காடியில் கலக்கி 3-நாள் கொடுக்கவும்.

ளா ய

இதைப்போல்
இடது விலாவில் சுடவும்.

இதுவுமது

மருந்து:—பொன்னாங்கண்ணி
வல்லாரை
நீர்பூசாயிலை

உபயோகிக்கும் விதம்:—இம் மூன்று தினுசு இலைகளைக் கொண்டுவந்து ஜலம் விடாமல் அரைத்து உண்டை திரட்டி எடுத்து நாழி பசுவின் பாலில் கரைத்துக் கொடுக்க சொஸ்த மாகும்.

குன்னி நோய்

செய்குணம்:-மயிர் சிலிர்த்துக்கொண்டு குன்னி நிற்கும்.

மருந்து:—ஓமம்	பலம்	1
வசம்பு	,,	$\frac{1}{4}$

உபயோகிக்கும் விதம்:—இவ்விரண்டும் அரைத்து இத்துடன் ஆவாரயிலையும் அரைத்து மாங்காயளவு சேர்த்து 1-படி வெந்நீரில் கலக்கிக் கொடுக்கவேண்டும்.

நசியம்:—சுக்கு வசம்பு
வெள்ளைப்பூடு தைவேளை
குப்பைமேனி

உபயோகிக்கும் விதம்:—இவைகளை அரைத்துக் கொஞ்சம் ஜலம்விட்டுக் கலக்கி வடிகட்டி கண்களிலும் மூக்கு செவிகளிலும் நசியம் பண்ணத் தீரும்.

இதுவுமது

செய்குணம்:—குன்னிநிற்கும், தீவனம் தின்னாது, வானத்தை பார்த்தே நிற்கும், சொருக்கு மூத்திரம் விடும்.

மருந்து:—பெருங்காயம்	பலம்	⅜
சுக்கு	,,	1
மிளகு	,,	1
வசம்பு	,,	1
இலுப்பைபிண்ணாக்கு	,,	¼
வெள்ளைப்பூண்டு	,,	1
நொச்சியிலை	பிடி	1
சிறுதுமபை	,,	1
குப்பைமேனி	,,	1

உபயோகிக்கும் விதம்:—எலுமிச்சம்பழச்சாறு படி-¼, விட்டு இவைகளை ஒன்று சேர்த்து இடித்தபிறகு, சிறுநீர் படி-¼ சேர்த்துக் கொடுக்கத் தீரும்.

நசியம்:—கொத்தமல்லி
உப்பு

உபயோகிக்கும் விதம்:—இவைகளை அரைத்துக் கலக்கி வடிகட்டிக் காது மூக்கு இவைகளில் நசியம் பண்ணத் தீரும்.

இதுவுமது

செய்குணம்:—காலுகாலு மெல்லடியாக வைக்கும் குன்றிக்கொண்டு நடக்கும்.

மருந்து:—ஈருள்ளி	பலம்	5
இலவங்கப்பட்டை	,,	2
முருங்கையிலை	மாங்காயளவு	
மூங்கிலிலை	,,	

உபயோகிக்கும் விதம்:—இவைகளை சேர்த்து ஒன்றாய் அரைத்து 1-படி காடியில் கலக்கிக் கொடுக்கவேண்டும்.

இந்தப்படி
அடிவயிற்றில்
சூடு போடவும்.

இந்தப்படி நாலுகாலிலும்
சூடு போடவும்.

00000

குரல் நோய்

செய்குணம்:—தீவனம் தின்னாது, வாலை சுருக்காக வீசும், தடுமாறும், வாயை மூடாமல் நிற்கும், நின்று கூப்பிடும்.

மருந்து:—மிளகு	பலம்	1	வெள்ளைப்பூடு	பலம்	1
திப்பிலி	,,	இ	தைவேளை	பிடி	1
வசம்பு	,,	¼	குப்பைமேனி	,,	1
பெருங்காயம்	,,	⅛	வெள்ளறுகு	,,	1

உபயோகிக்கும் விதம்:-இவைகளை மருந்துடன் சேர்த்து அரைத்துச் சாராயம் விட்டுப பிசைந்து கவளமாகக் கொடுக்க வேண்டும்.

(அல்லது) வெள்ளைப்பூடு	பலம்	1
சோமநாதன பெருங்காயம்	,,	⅛
சிறுதும்பைச்சாறு	படி	காலே அரைக்கால்

உபயோகிக்கும் விதம்:—இவைகளை ¾-படி வெந்நீரில் கலக்கிக் கொடுக்கவேண்டும். குடிகக வெந்நீர் விடவும்.

இந்தப்படி
இரு விலாவிலும்
சுடவும்.



குரல்முட்டி நோய்

செய்குணம்:—முகத்தில் வீங்கும், செவி தாழும், நடை தளரும், வாயாலே உதவி சாயும்.

மருந்து:—முருக்கம்பூ	பலம்	10
மாதளம்பூ	,,	10
கடு பிஞ்சு	,,	5
கிராம்பு	,,	2

உபயோகிக்கும் விதம்:—இவைகளை அரைத்து ½-படி சாராயத்தில் கொடுக்கவேண்டும். குடிக்க வெந்நீர் விடவும்.

இந்தப்படி

குதவளையில் சூடு

போடவும்.



குதவளைத்தாக்கன் நோய்

செய்குணம்:—மேய்கிறபோது திகைத்துக்கொண்டு நிற்கும்; கண்கள் வரையிட்டுக் குழியும்; குதவளையில் கட்டும், வாலைச் சுறுக்காக வீசும்.

மருந்து:—வெள்ளைப்பூடு	பலம்	2
காருகோலரிசி	,,	2
இலுப்பை பிண்ணாக்கு	,,	¼

உபயோகிக்கும் விதம்:—இவைகளை அரைத்து ½-படி வேப்பெண்ணெயில் கலக்கித் தொண்டைக்குள் மெதுவாகக் கொடுக்கவேண்டும். குடிக்க வெந்நீர் விடவும்.

இந்தப்படி குதவளையில்

சூடு போடவும்.



குடல் நோய்

செய்குணம்:—வயிறு வீங்கும், தீவனம் தின்னாது, கண் குழியும், மயிர் சிலிர்த்திருக்கும், இடைகொள்ளாது.

மருந்து:—இஞ்சி	பலம்	1
சருள்ளி	,,	1
வசம்பு	,,	$\frac{1}{4}$
அமுக்கிராவேர்	,,	$\frac{1}{4}$
ஊமத்தம் வேர்	,,	$\frac{1}{4}$

உபயோகிக்கும் விதம்:—இவைகளை சேர்த்து அரைத்து 2-படி காடியில் கலக்கிக் கொடுக்கவேண்டும்.

இதுவுமது

செய்குணம்:-வயிறு வீங்கும், வாய்நீர் வடியும், விழுந்து விழுந்து எழுந்திருக்கும், நாளுக்கு நாள் உலர்ந்துவரும்.

மருந்து:—வேலிப்பருத்தியிலைச்சாறு	படி	$\frac{1}{2}$
உப்பு	,,	$\frac{1}{8}$

உபயோகிக்கும் விதம்:—இவைகளை சேர்த்துக் கொடுக்கவும்.

இந்தப்படி
இரு விலாவிலும்
சூடு போடவும்.



குடல்வாத நோய்

செய்குணம்:—வயிறு ஊதும், அருவருத்து மேயும், கெட்டபுல்லைப் பார்த்து தின்னும், வாயில் நீர் வடியும்.

மருந்து:—மிளகு	பலம்	1
வசம்பு	,,	$\frac{1}{4}$
சருள்ளி	,,	1

உபயோகிக்கும் விதம்: இவைகளை அரைத்து இத்துடன் முடக்கத்தான் பிடி-1, கொத்தாங் கொளுஞ்சிச்சாறு படி-2 சேர்த்துக் கலக்கிக் கொடுக்கவும். காலை மாலை குடிக்க வெந்நீர் வைக்கவும்.

இடது விலாவில் சூடு
போடவும்.



இதுவுமது

செய்குணம்:—வயிறு வீங்கும், வயிறு முழங்கும், மேழ விழும்.

மருந்து:—உத்தமதாளிச்சாறு	படி	½
சாணிக்கயலி மீன்	,,	1

உபயோகிக்கும் விதம்:-நனையப்போட்டு மறுநாள் 2-படி பனங்கள்ளில் கலக்கிக் கொடுக்கவேண்டும்.

இந்தப்படி
இரு விலாவிலும்
சுடவும்.

குடற்பளுவன் நோய்

செய்குணம்:-குடலில் அழுக்கு ஒட்டியிருக்கும், அதனால் தீவனம் தின்னாது, தண்ணீரும குடியாது.

மருந்து:—ஆடுதீண்டாப்பாளையிலை	பிடி	1
குப்பைமேனியிலை	,,	1
பேய்க்குமட்டியிலை	,,	1
வசம்பு	பலம்	¼
வெள்ளைப்பூடு	,,	இ

உபயோகிக்கும் விதம்:—இவைகளை அரைத்துச் சிறுநீரில் கலக்கிக் கொடுக்கவேண்டும்.

இந்தப்படி தலையில்
சூடு போடவும்.

குடல்முறுக்கு நோய்

செய்குணம்:-கிடந்த கிடையில் கிடந்து காலைச் செதுக்கும், சாணி போடும்.

மருந்து:—நாய்ப்பாகயிலைச்சாறு	படி	இ
பசுவின்பால்	,,	இ
ஷை நெய்	,,	$\frac{1}{8}$

உபயோகிக்கும் விதம்:—இவைகளை ஒன்றாய்க் கலந்து கொடுக்கவேண்டும். மறுநாள அகில் கட்டை பலம்-1, இளைதது இடிதது காடியில் ஊறவைததுக் கொடுக்கவேண்டியது.

இந்தப்படி குறுக்கே சூடு போடவும்.



குலை நோய்

செய்குணம்:—துரிதமாய் மூச்சுவிடும், காது சாய்ப்திருக்கும், தலை குனிந்து நிற்கும், கொம்புகளின அடிர் பக்கததில் சூடாயிருக்கும், நாசி காய்ந்து சூடாயிருக்கும், தீவனம் தின்னாது, பூராவும சோம்பலாய் நிற்கும்.

மருந்து:—இதற்கு 2-படி முதல் 5-படி வரை இரத்தம் குத்தி எடுக்கவேணும, மாட்டின தேகத்தில சாணி வேது போட்டு டாட்டா மிட்டிக் (இங்கலீஷ் மருந்து) காலே மாகாணி ரூபாயிடை, ரேர்வாளவிதை அரையே அரிக்கால் ரூபாயிடை இவைகளை $\frac{1}{2}$-படி வெந்நீரில் கலக்கி இரத்தம் குத்தி எடுத்த 1-மணிக்கு அப்பால் உள்ளுக்கு கொடுக்க வேண்டியது.

ஷை மருந்து இரண்டையும் கொஞ்சம் தவிட்டில் சேர்த்துக் கொடுத்து, ஷை வெந்நீரை மேலே ஒத்தடம் கொடுத்து சூடுள்ள வேதும் மேலே போடவேணும்.

இதுவுமது

செய்குணம்:-வயிறு வீக்கும், வாயில் நீர்ஒழுகும், காலு காலும் நடுக்கம் கொடுக்கும்.

மருந்து:—எருக்கிலைச்சாறு
நல்லெண்ணெ

உபயோகிக்கும் விதம்:—இவை இரண்டும் கலந்து உள்ளுக்கு கொடுக்கவும் சொஸ்தமாகும்.

இந்தப்படி மேலே
சூடு போடவும்.



குலைப்பன் நோய்

செய்குணம்:—செவி தாழ்ந்திருக்கும், கண் குழியும், உருண்டுவிழும்.

மருந்து:—		
முருங்கப்பட்டை	பலம்	1
முருக்கம்பட்டை	,,	1
பிராய்ப்பட்டை	,,	1

உபயோகிக்கும் விதம்:—இவைகளை இடித்து 8-படி தண்ணீரில் போட்டு பச்சரிசி குறுணியைக் கூடப்போட்டு கூழாகக் காய்ச்சி ஒரு வேளைக்கு 1-இ-படி வீதம் கொடுக்க வேண்டும். இந்தப்படி 3-நாள் கொடுக்கவும்.

இந்தப்படி
இடது விலாவில்
சுடவும்.



குணட நோயின் குணம்

செய்குணம்:—வில்போல் உடலைச் சுருக்கி இழுத்து வளைக்கும், குறுகிநிற்கும், வாயால் இரத்தம் விழும்.

செய்குணம்:—விழுந்து விழுந்து எழுந்திருந்து உலாவும், வாயில் உதிரம் விழும்.

மருந்து:—குட்டித்தக்காளியிலைச்சாறு படி $\frac{1}{2}$
வெள்ளுள்ளி பலம் 1

உபயோகிக்கும் விதம்:—ஷை சாற்றில் வெள்ளுள்ளியை அரைத்து கலக்கி புகட்டி, ஷை இலையும் வெள்ளுள்ளியும் அரைத்து உடம்பு எங்கும் பூசி முறுக்கிவிடத் தீரும்.

இதுவுமது

மருந்து:—வேலிப்பருத்தியிலை

உபயோகிக்கும் விதம்:—ஷை இலையைக் கொண்டுவந்து மோர்விட்டு இடித்து 1-படி சாறு பிழிந்து கொடுக்கவும். இந்தப்படி 3-நாள் கொடுக்கத் தீரும்.

இந்தப்படி
இடது விலாவில்
சுடவும்.

குட்ட நோய்

செய்குணம்:—வில்லுச் சுருக்காச் சுருக்கிக்கொண்டு நிற்கும்; மேலெல்லாம் வேர்வை யுண்டாகும். ஒருவேளை வாயிலிருந்து ரத்தம் விழும்.

மருந்து:—வெள்ளைப்பூடு பலம் $\frac{1}{4}$

உபயோகிக்கும் விதம்:—இதனை அரைத்து குட்டித் தக்காளி இலைச்சாறு $\frac{1}{2}$-படியில் கலக்கி கொடுக்கவேண்டும். வெள்ளைப்பூடு அரைத்து ஷை சாற்றில் கலக்கி துவாலையும் போடவும். பிறகு வேலிப்பருத்தியிலையைக் கொண்டுவந்து மோர்விட்டு இடித்து, 1-படி சாறுபிழிந்து கொடுக்க வேண்டும்.

குழவிகடி நோய்

செய்குணம்:—மேலெல்லாம் தடித்து இருக்கும்.

மருந்து:-பூவரசுப்பட்டையை மேற்பரணி சீவிப்போட்டு, அதில் பலம்-1, எடுத்து தூளாகயிடித்து 1-படி பசுவின்

பால் போட்டுக் காய்ச்சி இறுத்துக்கொண்டு அதில் பேய்க் குமட்டிக்காய்ச் சாறு படி-½ சேர்த்துக் கொடுக்கவும்.

(அல்லது) சுக்கு	பலம்	½
ஈருள்ளி	,,	1
கடுக்காய்த்தோல்	,,	½
சீரகம்	,,	1
நொச்சியிலை	பிடி	4

உபயோகிக்கும் விதம்:—இவைகளை ஒன்று சேர்த்து அரைத்து 1-படி வெந்நீரில் கலக்கிக் கொடுக்கவும்.

கொடு நோய்

செய்குணம்:—அலைபாய்ந்து திரியும், படுக்கும், எழுந்திருக்கும், பாக்கப் பாக்கப் பார்க்கும், பயித்தியங் கொண்டதுபோல் ஓடித்திரியும். நிற்கும், கனைக்கும், கத்தும்.

மருந்து:—சிறுகிரை வேர்
வில்வயிலை
முன்னையிலை

உபயோகிக்கும் விதம்:—இவைகளை அரைத்து வகைக்கு மாங்காயளவு சேர்த்து, 1-படி வெள்ளாட்டு நீரிலாவது அல்லது மோரிலாவது சுறுக்காக கொடுக்கவேண்டும்.

இந்தப்படி நெற்றியில் சடவும்.



கோல நோய்

செய்குணம்:—நாலுகாலும் நடைதளரும், வயிறு முழங்கும், தலை தாழ்ந்து நிற்கும்.

மருந்து:—விஷ்ணுக்கிராந்தி
ஆலம்விழுது

உபயோகிக்கும் விதம்:—இவை வகைக்கு மாங்காயளவு அரைத்து 1-படி பாலிலாவது காடியிலாவது கலக்கி கொடுக்கவும்.

இந்தப்படி
இரு விலாவிலும்
சுடவும்.



புலி நோய்

செய்குணம்:-கண் சிவந்திருக்கும், மனிதரைச் சினந்து பார்க்கும், பாயவரும்.

மருந்து:—வாகையிலை
துளசியிலை

உபயோகிக்கும் விதம்:—இவைகள் வகைக்குப் பிடி-1, அரைத்து, 1-படி காடி அல்லது பனங்கள்ளில் கலக்கி உள்ளுக்கு கொடுக்கவும்.

இதுவுமது

செய்குணம்:-காலை வெட்டிக்கொண்டு நிற்கும், தீவனங் குணமாய்த் தின்னாது, உடல் மெலியும், மனிதரைப் பாய வரும்.

மருந்து:—நாயுருவியிலை
ஷை வேர்ப்பட்டை
வெள்ளைப்பூடு
வசம்பு
கறியுப்பு

உபயோகிக்கும் விதம்:—இவைகளை வகைக்குப் பலம்-½ வீதம் சேர்த்து அரைத்து இத்துடன் ½-படி விளக்கெண்ணெயில் கலக்கி கொடுக்கவேண்டும்.

இந்தப்படி
இரு விலாவிலும்
சுடவும்.

புலியின்நோய் குணம்

நாலுகாலும் மடங்கும், செவி குளிர்ந்து தாழும், கண்ணின் இமை தடிக்கும், சிறுத்துச் சிறுத்து நீர்விடும்.

செய்குணம்:—நாலுகாலிலும் நரம்பு புடைக்கும், இமை தடிக்கும், செவி தாழும், நீர் சிறுத்து இறங்கும்.

மருந்து:—திப்பிலி	பலம்	1
மிளகு	,,	1
கச்சந்திராயச்சாறு	படி	3/4
நொச்சிச்சாறு	,,	1/4
காணச்சாறு	,,	1/4
நல்லெண்ணெ	,,	3/4

உபயோகிக்கும் விதம்:-ஷை சாறுவகைகளையும் எண்ணெயையும் ஒன்றாய்க் கலந்து அதில் மற்ற மூன்று மருந்துகளையும் அரைத்துப் போட்டு கலக்கி கொடுக்கவும். இந்தப் படி 3-நாள் கொடுக்கத் தீரும்.

இதுவுமது

மருந்து:—திப்பிலி	பலம்	1
மிளகு	,,	1
கச்சந்திராயசமூலம்	பிடி	5

உபயோகிக்கும் விதம்:—இவைகளை அரைத்து நல்லெண்ணெய் விட்டுப் பிசைந்து கவளமிடவும். இந்தப்படி 3-நாள் கொடுக்கத் தீரும்.

இந்தப்படி இடது விலாவில் சுடவும். ☞ விலி

இதுவுமது

செய்குணம்:—முன்னங்கால் இரண்டும் பாரித்து இருக்கும், தலை கவிழும், இரையை அரைவாயாய் எடுத்து கொஞ்சங் கொஞ்சமாய்ச் சுவைக்கும்.

மருந்து:—குப்பைமேனியிலை	பிடி	3
கரிப்பானிலை	,,	3
மிளகு	பலம்	1
வெள்ளுள்ளி	,,	1

உபயோகிக்கும் விதம்:—இவைகளை அரைத்துக் காடியில் கலக்கிப் புகட்டவும். இந்தப்படி 3-நாள் புகட்டத் தீரும்.

இதுவுமது

செய்குணம்:— முன்னங்காலைப் புரட்டிப் புரட்டிக் கொண்டுநிற்கும், கால் தடுமாறும, தலை கவிழும், தீவனத்தை அரைவாய் எடுத்துச் சுவைக்கும்.

மருந்து:—குப்பைமேனியிலை	பிடி	4
மிளகு	பலம்	4
வெள்ளுள்ளி	,,	1

உபயோகிக்கும் விதம்:—இவைகளை அரைத்துக் கவளமிட்டும், இந்தப்படி 3-நாள் கொடுத்து ஷை மருந்துகளை எல்லாம் ஒன்ருய் அரைத்துக் காலிலும் பூசி வரவும்.

இந்தப்படி இடது விலாவில் சுடவும். ☞ வி வி ளி

சிறுபுள்ளு நோய்

செய்குணம்:-நடை தளரும், உடல் வற்றிவரும், பொய் மேச்சல் மேயும், தூங்கும்.

மருந்து:—வெள்வெங்காயம் தேங்காயளவு அரைத்துப் பசுவின்பாலில் கொடுக்கவும்.

இந்தப்படி இரு விலாவிலும் சுடவும்.



இதுவுமது

செய்குணம்:—முதுகை நெளிக்கும், மயிர்க்கால் செறியும், பின்னங்கால் மொளிநடுங்கும்.

மருந்து:—பெருமரத்துப்பட்டை	பலம்	2
வேப்பம்பட்டை	,,	2
நெல்லரிசிக் குறுணை	படி	¼

உபயோகிக்கும் விதம்:—8-படி தண்ணீரில் போட்டு 2-படியாகக் காய்ச்சி கொடுக்கவேண்டும்.

(அல்லது) சிறுதும்பைச்சாறு	படி	1
சிறுநீர்	,,	1

உபயோகிக்கும் விதம்:—இவைகளை சேர்த்துக் கொடுக்கலாம்.

இந்தப்படி
இரு விலாவிலும் சுடவும்.



நப்புரி நோய்

செய்குணம்:—பரக்கப் பரக்கப் பார்க்கும், தளர்ந்து சுழன்று நெளியும்.

மருந்து:—வண்ணான் அவரியிலைச்சாறு	படி	இ
செருப்படி யிலைச்சாறு	,,	இ

உபயோகிக்கும் விதம்:—இவை இரண்டையும் கொடுக்க வேண்டும்.

இதைப்போல்
நெற்றியில் சூடு
போடவும்.



இதைப்போல்
முதுகில் இடதுபுறம்
சுடவும்.

கருங்காலி நோய்

செய்குணம்:—முகங்கறுத்து இருக்கும், நாடியைப் பூமியில் போட்டுக்கொண்டிருக்கும், உடம்பு வீங்கும், அயர்ந்து நிற்கும், நீர்விடும்.

மருந்து:—மிளகு	பலம்	1
சுக்கு	,,	1
வசம்பு	,,	½
வெள்ளைப்பூடு	,,	1
ஈருள்ளி	,,	2
சிறுகீரை	பிடி	1
குப்பைமேனி	,,	1
தைவேளை	,,	1

உபயோகிக்கும் விதம்:—இவைகளை இடித்துக் கொடுக்க வேண்டும் கொமட்டியிலை கொளுஞ்சியிலை கிழாநெல்லியிலை இம்மூன்றும் இடித்துத் துவாலை போடவும். குடிக்க வெந்நீர் விடவும்.

கொப்பூழைச்சுற்றி
மேலே இழுத்தாப்போல்
சூடு போடவும்.



மகாவிருட்டி நோயின் குணம்

செய்குணம்:—வாயில் நீர்வடியும், மண்டை வீங்கும், மயிர் சிலிர்க்கும் வயிறு ஊதிப் பொருமும், தொண்டைக்குள் பந்துபோல் நோய் திரண்டடைக்கும், நின்றநிலையாக நிற்கும்.

மருந்து:—தாழையின் காயைச்சீவி இடித்து,

பிழிந்த சாறு	படி	½
பேய்பீர்க்கிலைச்சாறு	,,	½
வெள்ளுள்ளி	பலம்	1
சுக்கு	,,	1
கொழுஞ்சியிலை	படி	1
எலிப்புழுக்கைசிரங்கை	,,	1

உபயோகிக்கும் விதம்:—இவைகளில் ஷை சாறுகளை ஒன்றாய்க் கலந்து அதில் மற்ற மருந்துகளை அரைத்துப் போட்டுக் கொடுக்கத் தீரும்.

இந்தப்படி
இடது விலாவில்
சுடவும்.



விருட்டி நோய்

செய்குணம் :— கழுத்தைக்கட்டி வீங்கும், கிருட்டு கிருட்டு என்று வலுவாய் நாசி அடைத்து வாங்கும். மயிர் சிலிர்க்கும், உடம்பு தடிக்கும்.

மருந்து:—இலுப்பைப் பிண்ணாக்கு பலம்-இ, அரைத்து ½-படி குதிரை மூத்திரத்தில் கலக்கிப பன்றிநெய் படி மாகாணி சேர்த்துக் கொடுக்கவேண்டும். குடிக்க வெந்நீர் விடவும்.

நசியம்:—பேய்ப்பீர்க்கிலைச் சாறு சிறுதும்பைச் சாறு இலுப்பைப் பிண்ணாக்கும் பன்றிநெய்யும் கொஞ்சம் சேர்த்துக் கலக்கி வடிகட்டி நசியம் பண்ணவும். பிறகு மாட்டின் முட்டெலும்பும் பன்றிவிட்டையும் பெருங்காயமும் இம் மூன்றும் பாக்களவு சேர்த்துப் புகை காட்டவும்.

இதுவுமது

செய்குணம்:-நாடி வீங்கும், விருட்டு விருட்டு என்னும், மயிர்சிலிர்க்கும், முகத்தை மடித்துக்கொள்ளும், தீவனம் கொஞ்சமாகத் தின்னும்.

மருந்து:—நாயுருவிக் கதிர் பிடி-1, அரைத்து நெல்லுத் தவிடு படி-1, சேர்த்துப் பன்றி இரத்தமும் குதிரை மூத்திரமும் விட்டுப் பிசைந்து கொடுக்கவேண்டும். குடிக்க வெந்நீர் விடவும்.

இதைப்போல்
தொண்டையை சுற்றிச்
சூடு போடவும்.

இதுவுமது

செய்குணம்:— தொண்டைகட்டி வீங்கும், வயிறு ஊதும், வாயில் நீர்வடியும், செவிதாழும், கண்சிவந்திருக்கும்.

மருந்து:—			கருஞ்சீரகம்	பலம்	½
மிளகு	பலம்	1	ஈருள்ளி	,,	2
சுக்கு	,,	1	வெள்ளைப்பூண்டு	,,	1
வசம்பு	,,	½	எருக்கிலைப்பழுப்பு	,,	5

சங்கு இலை	மாங்காயளவு
பேய்ப்பீர்க்கிலை	,,
வேப்பிலை	,,
கருஞ்சூரைவேர்த்தொலி	,,
மருக்காரைத்தொலி	,,

உபயோகிக்கும் விதம்:—இவைகளை சேர்த்து அரைத்து 2-படி காடியில் கலக்கிக் கொடுக்கவேண்டும்.

அல்லது			பெருங்காயம்	,,	¼
மிளகு	பலம்	இ	வசம்பு	,,	¼
சுக்கு	,,	1	குப்பைமேனி	பிடி	1
திப்பிலி	,,	¼	தைவேளை	,,	1

இவைகளை இடித்து

பன்றிரத்தம்	படி	¼
குதிரைமூத்திரம்	,,	1

உபயோகிக்கும் விதம்:—இதனுடன் இடித்த மருந்துகளை சேர்த்துக் கொடுக்கவேண்டும் இந்த மருந்து விரட்டி நோய்க் கெல்லாம் கொடுக்கலாம். குடிக்க வெந்நீர் விடவும்.

இந்தப்படி
இடது விலாவிலும்
தொண்டையிலும்
சூடுபோடவேண்டும்.



பன்றி நோய்

செய்குணம்:—தீவனம் தின்னாது, மயிர் சிலிர்க்கும், கண் வட்டங்குழியும், வாயைத் திறக்கும், வாயாலே நுரை தள்ளும், செங்கோல் கண்டும், சுருக்கு மூத்திரம் விடும், கைநொடி தூரத்துக்கு ஓடி விழும்.

மருந்து:—அரையளவு பள்ளத்திற்கு குழி வெட்டி அதனுள்ளே ஓலைப்பாயை விரித்து, அதில் ஒரு நரிநாயையும் ஒரு நாய்க்கொடி விரிசன்பாம்பையும் போட்டு அதின்மேல் 16-படி உப்பைத் தட்டி, அந்த இரண்டு ஜெந்துக்களையும பொதித்து, மேலே ஓலைப்பாயை மூடி மண்ணைத் தள்ளிவைத்திருந்து ஒருமண்டலம் (45-நாள்) சென்று எடுத்து, எலும்பைப் பொறுக்கிப்போட்டு, மேற்படி உப்பை ஒரு மண் புதுக்குடத்தில் வைத்துக்கொள்ளவும். அந்த உப்பு பலம்-1, வெள்ளைப்பூண்டு பலம்-1 அரைத்து 1-படி தும்பைச்சாற்றில் கொடுக்கவேண்டும். அல்லது சிறுதும்பைசசாறு படி-1, வெள்ளாட்டுநீர் படி-1 சேர்த்துக் கொடுக்கலாம்.

கவனிப்பு:—பன்றிநோய் என்றதுக்கெல்லாம் சோதனை பலகையை மாட்டின் வாயிற்போட்டு அதின் வழியாகக் கையைவிட்டு பார்க்கிறபோது அந்த வியாதி ஈருள்ளி சுருகு போலேகிடக்கும். அதை எடுத்துப்போட்டு மருந்து கொடுக்க வேண்டியது. குடிக்க வெந்நீர் விடவும்.



இந்தப்படி
இடது விலாவில் சுடவும்.

இதுவுமது

செய்குணம்:-கழுத்தைக்கட்டி வீங்கும், நாசி அடைத்து இரட்டு இரட்டு என்று மூச்சுவிடும்.

மருந்து:—இலுப்பைப்பிண்ணாக்கு பலம் 2

உபயோகிக்கும் விதம்:—இதை அரைத்து குதிரை மூத்திரத்தில் கலக்கிப் புகட்டி, இசன் அடியிற் கண்டிருக்கிற நசியத்தைப் பிழிந்து புகையும்போடத் தீரும்.

நசியம்:—இலுப்பைப்பிண்ணாக்கு
சிறுதும்பையிலை
பேய்ப்பீர்க்கிலை

இவைகளை ஓர் நிறையாகச் சிறுநீர்விட்டுத் தட்டி மூக்கிலும் கண்ணிலும் காதிலும் நசியம் செய்யவும்.

வேறு நசியம்

எருக்கிலைப்பழுப்பு
உப்பு

உபயோகிக்கும் விதம்:—ஓர் நிரையாகக் கசக்கி கண் செவி மூக்கில் நசியம் செய்யவும்.

புகை:—மாட்டின் மூட்டெலும்பு
பன்றிபுட்டை
பெருங்காயம்

இவைகளை ஒன்றாய்ப் பொடித்து நெருப்பிலிட்டு புகை காட்டவும்.

இந்தப்படி 
வீக்கத்திலும் முகததிலும் சுடவும்.

இதுவுமது

செய்குணம்:—தொண்டை கட்டும், நாசி அடைக்கும், கிரட்டு கிரட்டு என்று சுவாசமிடும், வாயில் வெண்ணுரை தள்ளும், இரை தின்னாது, கண் சிவக்கும்.

மருந்து:—கருங்கொரட்டையிலை
பேய்ப்பீர்க்கிலை
சங்கிலை
வேப்பங்கொழுந்து

உபயோகிக்கும் விதம்:— இவைகளைச் சமமாயிடித்து காடி தெளித்து ஒருபடி சாறு பிழிந்து கொடுக்கவும். இந்தப்படி மூன்றுநாள் கொடுக்கத் தீரும்

பன்றித்தாக்கன் நோய்

செய்குணம்:—தீவனம் தின்னாது, கண்வட்டங்குழியும், கண் சிவந்திருக்கும், கால் பாஞ்சிசிறகும், தலையை ஏறிட்டுப் பார்க்கும், அலறிவிழும், கொம்பை பிடிக்கவொட்டாது, கட்ட வொட்டாது.

மருந்து:— மேற்சொல்லியபடி சோதனைப் பலகையால் சோதித்து, பன்றிநோய்க்குச் சொல்லியிருக்கிற மருந்தைக் கொடுக்கவும். குடிக்க வெந்நீர் விடவும்.

இந்தப்படி
இருவிலாவிலும்
சுடவும்.



பன்றிகுருக்கை நோய்

செய்குணம்:—தீவனம் தின்னாது. கண்விழி வட்டங் குழியும், அரைக்கண்போட்டு விழிக்கும், மயிர் சிலிர்த்திருக்கும், வயிறு ஊதும், கண் சிவக்கும், செவி தாழும், கால் மடியாமல் விழும், விழுந்து கிடக்கும், 20-நாழிகை சென்றால் வாயாலே நுரைதள்ளும், பின்பு தண்ணீா வடியும்.

மருந்து:— சோதனைப் பலகைபோட்டுப் பார்த்துக் கொண்டு பன்றி நோய்க்குச் சொல்லியிருக்கிற மருந்தைக் கொடுக்கவேண்டும். குடிக்க வெந்நீர் விடவும்.

இந்தப்படி
இருவிலாவிலும்
சுடவும்.

இந்தப்படி குதவளையில்
சூடு போடவும்.



பன்றிமூட்டி நோய்

செய்குணம்:—தீவனம் தின்னாது, கண்விழி தெரிக்கப் பார்க்கும், வாயால் நுரைதள்ளும், பின்பு உதவித் தண்ணீர் போல வரும், இரைக்கும், குதவளையிற் கட்டும், ஜவ்வுபோல் சாணிபோடும்.

மருந்து:—வெள்ளைப்பூண்டு	பலம்	3
கார்கோலரிசி	,,	2
கடுக்காய்த்தோல்	,,	3
கையாந்தகரை	பிடி	1
குப்பைமேனி	,,	1
சிறுதும்பை	,,	1

உபயோகிக்கும் விதம்:—மேற்படி மருந்துடன்சேர்த்து இடித்து வேப்பிலைச்சாற்றில் கொடுத்தபிறகு குடிக்க வெந்நீர் விடவும்.

இந்தப்படி
இருவிலாவிலும சுடவும்.

இந்தப்படி
குதவளையில
சுடவும்.



நன்குலை நோய்

செய்குணம்:—வாயை வாயைத் திறக்கும், வாயில் நீர் வடியும், நாக்கை நீட்டும், கண்கள் கலங்கிச் சிவந்திருக்கும்.

மருந்து:—பெருந்தும்பையிலை
அகத்தியிலை
சித்திரப்பாவாடையிலை
கோவைக்கிழங்கு

உபயோகிக்கும் விதம்:—இவைகள் வகைக்கு அரைத்தது மாங்காயளவு, பீர்க்கங்காய் காய்ந்தகூடு-1 அரைத்து அதனுடன் சேர்த்து ஒருபடி காடியில் கலக்கிக் கொடுக்கவும். இந்தப்படி 3-நாள் கொடுக்கத் தீரும்.

காய்ச்சல் நோய்

செய்குணம்:—மேல்சுடும், தீவனம் தின்னாது, அசதியாக நிற்கும்.

மருந்து:—பேய்க்குறுஞ்சாயிலைச்சாறு	படி	$\frac{1}{4}$
குளப்பாலையிலைச்சாறு	,,	$\frac{1}{4}$

உபயோகிக்கும் விதம்:—1-படி காடியில் கலக்கி கொடுக்க வேண்டும்.

நசியம்:—மூக்கரைச்சாரணைவேரும் குப்பைமேனியிலையு மிடித்து நெய்க்கொட்டான் பழச்சாறும் சிறுநீரும் சேர்த்துக் கலக்கி வடிகட்டி நாசியில் நசியும் பண்ணவும். துவாலையும் போடவும். குடிக்க வெந்நீர் விடவும்.

இதுவுமது

செய்குணம்:—எருக்கிலைச்சாறுபோல கழியும், உடம்பு இளைத்துப்போகும்.

நிவர்த்தி:— பிரண்டை உப்பு இவை இரண்டையும் இடித்து உள்ளுக்குக் கொடுக்க சொஸ்தமாகும்.

அஸ்திசுரத்தின் நோய்

செய்குணம்:—உரோமம் சிலிர்க்கும், செவி தாழும், அதிக காங்கையில்லாவிடங்களில் நடுக்கம் காணும், கழுத்தையும் விலாவையுஞ் சேர்ந்த தசை நரம்புகளில் இழுப்புகாணும் ஈறுகளும் உதட்டின் உட்புறமும் புண்ணாய்ப்போகும், ஆரம்பத்தில் மூன்றுநாள் நாலுநாள் வரைக்கும பசி எப்பொழுதும் போலவே யிருக்கும், பின்பு பசி தீபனங் கெடும், வாய் உலர்ந்துபோகும், சளியைச் சேர்ந்த ஜவ்வு திரட்சியாகும், கண்களில் இருந்து தண்ணீர் வடியும், மூக்கிலிருந்து சளி வடியும், எருக்கலுண்டாகி சீக்கிரத்தில அதிகரிக்கும், தண்ணீர் தண்ணீராய் கழியும், சாணி அழுகலோடும் ஜீரணிக்காத இரையோடும் சீதத்தோடும் காணப்படும்.

பின்பு இரத்தமாயும் காணப்படும். மலம் கொஞ்சம் கொஞ்சமாய் இறங்கும், அப்படி இறங்கும்போது அதிக வருத்தப்படும். நாடி துரிதமாய் ஓடும். உடம்பின் மேல்புறமும் காலின் மூலைகளும் குளிர்ந்துபோவதுமன்றி கண் குழிந்து துரிதத்தில் மூச்சுவிடும்.

முதலாவது இந்த மாட்டை வேறே யிடத்தில் தனியே கட்டவேண்டியது.

ஆரம்பத்தில் கழிச்சல் இல்லாவிட்டால்

மருந்து:—கர்ப்பூரம்	ரூபாயிடை	$\frac{1}{2}$
பொட்டிலுப்பு	,,	$\frac{1}{2}$
கரு ஊமத்தை விதை	,,	$\frac{1}{4}$
நிலவேம்புக்குச்சு	,,	$\frac{1}{2}$
சாராயம்	படி	$\frac{1}{8}$

உபயோகிக்கும் விதம்:— இதில் கர்ப்பூரத்தை சாராயத்தில் கரைத்து மற்றதைப் பொடியாக்கி ஒன்றாய்ச்சேர்த்து ஒருபடி கஞ்சியில் கலக்கிப் புகட்டவேண்டும்.

கவனிப்பு:— மேற்படி எருக்கலுண்டாவதை உடனே நிறுத்தக்கூடாது. ஏனெனில், அக்கழிச்சலினாலே வியாதி குறைவுபடும் கழிச்சல் அதிகரிக்கும்படி விடுவோமானால் பலயீனப்பட்டு கெடுதியுண்டாகும் ஆதலா நாள் ஒன்றுக்கு மேல் மேற்படி கழிச்சல் இருக்குமானால் மேற்சொல்லிய மருந்துடனே மாசிக்காய் அரையே அரிக்கால் ரூபாயிடை நிறுத்து நன்றாகப் பொடிசெய்து சேர்த்துக் கொடுக்கவேண்டும். மாட்டுக்கு சௌக்கியம் உண்டாகிறதென்று காணப்பட்டால் மருநதை குறைக்கவேண்டியது. அல்லது மருந்தை நிறுத்திப்போடவேண்டியது. உடம்பு மெலிந்து போகாதபடிக்கு ஏற்ற ஆதரவுசெய்து கஞ்சிகாய்ச்சிகொடுத்து பலத்தை உண்டாக்க வேண்டும். அதிக பலயீனமாயிருந்தால் கஞ்சியில் மாகாணிப்படி சாராயத்தைச் சேர்த்துக் கொடுக்கலாம். பசும்புல்லைப் போடவேண்டியது.

ஈரலைப்பற்றிய காய்ச்சல் நோய்

செய்குணம்:—மூக்கு உலர்ந்திருக்கும், நாடி சுருக்காய் ஓடும், கொம்புகளின் அடியில் சூடாயிருக்கும், வாய் சூடாகவும் உலர்ந்துமிருக்கும், மலம் கட்டுப்படும், வலது பக்கத்தைக் கையினாலே அழுத்தினால் நோய் உண்டாகும்.

மருந்து:—மலம் தாராளமாய் இறங்குகிறவரையில் ஒரு நாளைக்கு இரண்டுதடவை கரியபவளம் அரையே அரிக்கால் ரூபாயிடைமுதல் ஒரு ரூபாயிடை வரையில் வெந்நீரிற்சேர்த்து கலக்கிக்கொடுக்கவும். பின்பு காச்சலின் தன்மையைப்பார்த்து நாள் ஒன்றுக்கு இரண்டுதடவை அல்லது மூன்றுதடவை

கர்ப்பூரம்	ரூபாயிடை	½
பொட்டிலுப்பு	,,	½
ஜென்சன்ரூட்டு-(ஓர்வித வேர்)	,,	½

இம்மூன்றையும் ஒன்றாகச் சேர்த்துக் கொடுக்க வேண்டும்.

மந்தத்தைச் சார்ந்த காய்ச்சல் நோய்

செய்குணம்:—இந்த வியாதி சாதாரணமாய் இராத்திரியிலே உண்டாகிறபடியினாலே சீக்கிரத்தில் கண்டுகொள்வது அரிது. உதயத்தில் மாடு அசதியாய்க் காணப்படும். தீவனம் தின்னாது, அதிக தாகமுண்டாகும், வாய் உலர்ந்திருக்கும், அசை போடாது, மூச்சு துரிதமாய் விடும், முகம் விகாரமுள்ளதாகக் காணப்படும், நாடி படபடப்பாய் ஓடும், நடக்க மாட்டாது, நடக்கும்படி ஓட்டினால் அதிகமாய் நொண்டும், அப்படி நொண்டுகிற காலில் வீக்கம் காணப்படும். தோளிலாவது இடுப்புகளிலாவது முதுகு துவக்கி பின்னங்கால்கள் வரைக்கும் அல்லது கால்களிலிருந்து குழைச்சு மயிர்த்திரள் வரைக்கும் இந்த வீக்கம் காணப்படும் அதைத் தொட்டுப் பார்த்தால் சூடாயிருக்கும். அதிகமாய் நோகும், கெறகெற என்கிற சத்தமுமுண்டாகும். வியாதி சீக்கிரத்தில் அதிகரிப்பதினால் மாடு வருத்தப்படும். கால்களில் வீக்கங்கொண்ட இடங்களும் குளிர்ந்து நாடி சீக்கிரமாய் ஓடி படிபடியாய் இறங்கும்.

இவ்வியாதி உண்டாகிற காரணம்:— அதிக தீனியினால் இரத்தபுஷ்டி அதிகமாய் அதற்கேற்ற வேலையில்லாமலிருந்தாலும், மழைகாலத்தின் ஆரம்பத்திலுண்டாகிற பசும்புல்லைத் தின்கிறதினாலும் இந்த வியாதி யுண்டாகிறது.

மருந்து:—வீக்கங்களை கத்தியினால் கீறி அவைகளிலிருந்து கொஞ்சம் இரத்தம் வரும்படி செய்தால் நல்லது. முதலாவது பேதியாகும்படி சித்தாமணக்கெண்ணை படி-$\frac{1}{4}$ கொடுக்கவேண்டியது. பின்பு,

சுக்கு	பலம்	$3\frac{1}{2}$
பொட்டிலுப்பு	ரூபாயிடை	$2\frac{1}{2}$

உபயோகிக்கும் விதம்:— இவ்விரண்டும் பொடிசெய்து $\frac{1}{4}$-படி கஞ்சியில் போட்டுக் கலக்கி உள்ளுக்குக் கொடுக்க வேண்டும். பிறகு 1-மணிநேரத்துக்கு ஒருவிசைகொடுக்கவும். இந்தப்படி மூன்றுநாள் கொடுக்கவும்.

சனிநோய் அல்லது காய்ச்சல்நோய்

செய்குணம்:—ஆரம்பத்தில் பசிதீபனம் கெடும். கண்கள் பஞ்சடைந்தாற்போல மந்தமான பார்வையாகும், அடிக்கடி கொட்டாவிவிடும், அலுப்பினாலே செய்வதுபோல பின்னங் காலைச் சிலவேளை நீட்ட முயற்சிக்கும், மயிர் சிலிர்த்துக் கொண்டிருக்கும், கொம்பு காது கால் இவைகள் குளிர்ச்சியாக யிருக்கும், உடம்பு முழுவதுமாவது சிலயிடமாவது நடுங்கும், பின்பு நாடி படப்படப்பாகும், கண்கள் மந்தம் நீங்கிப் பிரகாசமாகும், உட்ஜவ்வுத்தோள்கள் சிவந்திருக்கும், வாய் வரண்டு சூடாயிருக்கும், நாக்கு முள்ளுபோலிருக்கும், தண்ணீர்த்தாகம் உண்டாகும், துரிதமாய் மூச்சுவிடும், சரியானபடி சாணிபோட மாட்டாது, சிவந்த நிறமாயும் துர் வாசனையாயும் இருக்கும், கண்களிலிருந்து தண்ணீர் வடியும்.

மருந்து:—கரியபவளம்	ரூபாயிடை-	$2\frac{1}{2}$
சுக்கு	,,	$2\frac{1}{2}$

உபயோகிக்கும் விதம்:-இவைகளைப்பொடிசெய்து $\frac{1}{2}$ படி வெந்நீரில் கலக்கி பேதிக்குக் கொடுக்கவேண்டியதுந் தவிர

சாணியைக் கரைத்துக் கொதிக்கவைத்து இரண்டு விலாவிலும் வேது போடவேண்டும். பின்பு

கர்ப்பூரம்	ரூபாயிடை-2¼
பொட்டிலுப்பு	,, 2¼
நிலவேம்புக்குச்சி	,, 2¼

உபயோகிக்கும் விதம்:-இவைகளை அரைத்து உருண்டை செய்து ஒரு நாளைக்கு 3-தடவை உள்ளுக்குக் கொடுக்க வேண்டியது.

ஜன்னி நோய்

செய்குணம்:—கழுத்தை நீட்டாது, மடக்கிக்கொண்டேயிருக்கும், நாலுகாலும் நடைகூடாது, குறுக்கு நிமிர்ந்து நில்லாது. நெளிக்கும், குண்டியைத் தாழ்க்கும்.

மருந்து:—½-படி வேப்பெண்ணை கொடுத்து, எருக்கம் பால் ஒரு சிரங்கை, கொஞ்சம் வேப்பெண்ணை, பன்றிநெய், சனி ஞாயிறு வசம்பு, சுக்கு, வெள்ளைப்பூடு, இவைகளை அரைத்து கலக்கி கொதிக்கவைத்து 2-நாள் துவாலை போடவும். குடிக்க வெந்நீர் விடவும்.

இதுவுமது

செய்குணம்:—கழுத்தை ஒருபுறமாய்ச் சாய்த்துக் கொண்டு நிற்கும், புழுக்கைபோல அல்லது உலர்ந்த சாணமாய்ப் போடும். வானத்தைப் பார்த்துக்கொண்டு நாய்போலக் குந்தியிருக்கும். பின்னங்கால் இரண்டும் தடுமாறும், தீவனம் தின்னும், தண்ணீர் குடிக்கும், அசைபோடும் உடல் அயரும், அல்லது நடுங்கும்.

மருந்து :—எருக்கலம்பூவை இடித்துத் துணியில் பொதிந்துகொண்டு இரும்புச்சட்டியில வேப்பெண்ணைவிட்டு காய்ச்சி அதில் முக்கி சரீரமெல்லாம் ஒத்தல் போட வேண்டும். மறுநாள் திருகுகள்ளியும் நொச்சியிலையும் இடித்து துணியில் பொதிந்துக்கொண்டு மேற்கண்டபடி வேப்பெண்ணையில் முக்கி ஒத்தல் போடவேண்டியது.

தவிர,

சுக்கு	பலம்	1
மிளகு	,,	1
பெருங்காயம்	,,	½

உபயோகிக்கும் விதம்:—இவைகளை அரைத்துப் போதுமான சிறுநீரில் கலக்கி உள்ளுக்குக் கொடுக்கவேண்டும்.

இதுவுமது

செய்குணம்:—மாடு முதுகை வளைத்துக்கொண்டு நிற்கும், நடக்க மனமிராது, அதை நடக்கச் செய்தால் திமிர் வாதம் கொண்டதுபோல தடுமாறும், வருத்தத்தோடே மூச்சுவிடும், அடிவயிறு நோகும், கண் வாயைச்சேர்ந்த புறம்பான சவ்வு திரட்டப்படும், நாடி மெலிந்து துரிதமாய் ஓடும், முகம் களைப்பாக யிருக்கும், நீர் இரத்தநிறமாயிருக்கும், சிக்கிரத்தில் ஸ்மரணை கெட்டு 6-மணி நேரத்துக்குள்ளாக இறந்து போகும், உடம்பிலுள்ள இரத்தம் கெட்டுப்போவதுதான் இந்த வியாதிக்குக் காரணம். இது அசாத்திய வியாதி இருந்தபோதிலும்,

மருந்து:—ஆரம்பத்தில் சிற்றுமணக்கெண்ணை படி-$\frac{1}{8}$, கொடுக்கவேண்டியது. பின்பு,

பொட்டிலுப்பு	ரூபாயிடை-1¼
சுக்கு	,, 1¼

உபயோகிக்கும் விதம்:— இரண்டையும் பொடிசெய்து $\frac{1}{8}$-படி சாராயத்தில்சேர்த்து கொடுக்கவேண்டியது இந்தப்படி 1-மணி நேரத்துக்கு ஒருதபா கொடுத்துவரவும்.

இந்தப்படி
தலையில் சுற்றி
சூடு போடவும்.

இந்தப்படி நெற்றியில் சுடவும். ——

இந்தப்படி வயிற்றில்
சுடவும்.

விருட்டி பெருநோயின் குணம்

செய்குணம் :—கவிழ்ந்து நிற்கும், குறு குறுக்கும் வாயில் நீர்வடியும், தொண்டைக்குள் பந்துபோல் அடைக்கும்.

கவனிப்பு:—இந்தப் பிணி கண்ட நிமிஷமே அவுடதம் செய்யாவிட்டால் மூச்சு அடைத்து கொன்றுவிடும்.

மருந்து:—சுக்கு	பலம்	¼
வெள்ளுள்ளி	,,	¼
எலிப்புழுக்கை	,,	¼
வசம்பு	,,	¼
மிளகு	,,	¼
ஓமம்	,,	¼
புகையூரல்	,,	¼
கருஞ்சீரகம்	,,	¼
பெருங்காயம்	,,	¼
அரிதாரம்	,,	¼
குப்பைமேனியிலை	பிடி	2
தைவேளையிலை	,,	2

உபயோகிக்கும் விதம்:—இவைகளை யெல்லாம் பேய்க் குமட்டிக்காய்ச் சாற்றில் அரைத்து கலக்கிப் புகட்டவும். இந்தப்படி 3-நாள் கொடுக்கத் தீரும்.

இந்தப்படி கழுத்தில் சுடவும்.

மூளையைப்பற்றிய ஜன்னி நோய்

செய்குணம்:—ஆரம்பத்தில் மாடு அசதியாய் தூக்க மயக்கமுள்ளதுபோல் இருக்கும், தலையை நீட்டி அதைத் தாங்கிக்கொள்ளும்படி ஒன்றைநாடும், நாடி நிறைவுத் தாமதமுள்ளதா யிருக்கும், வாய் கண் இவைகளைச் சேர்ந்த சவ்வு திரண்டிருக்கும், அறிவுகெட்டு அதிக கலக்கமுள்ளதாகி கிட்ட வருகிற மனிதரையும் மாடுகளையும் முட்டவரும், அடிக்கடி கதறி பூமியை கொம்புகளினாலும் முன்னங் கால்களினாலும் கிளறும்.

வியாதி உண்டாவதற்கு காரணம்:-தலையின்மேல் படுகிற அடியினாலாவது, கொம்பு ஒடிந்து போவதினாலாவது, அதிக வெயிலில் வெகுதூரம் ஓட்டுவதினாலாவது, இந்த வியாதி உண்டாகிறது.

மருந்து:-20-நெல்லிடை நேர்வாளப்பருப்பை அரைத்து காலே அரைக்கால்படி சிற்றாமணக் கெண்ணெயில் கலந்து கொடுக்கவேண்டியது. பேதியாகும்.

முகவாதஜன்னி நோய்

செய்குணம்:—நாக்கைச் சுருட்டி வலிக்கும், செவி தாழ்ந்திருக்கும், முகத்தையும் இழுக்கும்.

மருந்து:—பொங்கணந்தூக்கிப் பச்சிலை-(முடக்கத்தான்) சாறு படி-½ கொடுக்கவேண்டியது.

(அல்லது)	இலுப்பெண்ணெ	படி	¼
	வேப்பெண்ணெ	,,	¼
	புன்னைக்காயெண்ணெ	,,	¼
	நல்லெண்ணெ	,,	¼
	விளக்கெண்ணெ	,,	¼
	முடக்கற்றான்சாறு	,,	¼

அதில்,

சுக்கு	பலம்	1
வெள்ளைப்பூடு	,,	1

உபயோகிக்கும் விதம்:—இவைகளை தட்டிப்போட்டு கொஞ்சம் மயிலிறகுப்போட்டு காய்ச்சி போதைக்கு ¼-படி வீதம் கொடுக்கவேண்டும். மேலே துவாலையும் போடவும். குடிக்க வெந்நீர் விடவும்.

இந்தப்படி
நெற்றியில் சுடவும்.



இந்தப்படி
முதுகில் சுடவும்.

வலிப்பின் நோய்

செய்குணம்:—நாலு கால்களும் வலித்து இழுக்கும், உடல் குளிர்ந்து இருக்கும், தலையைப் போட்டடித்துப் பறக்கும்.

மருந்து:—சுக்கு	பலம்	$\frac{1}{8}$
வசம்பு	,,	$\frac{1}{4}$
குருவிஞ்சியிலைச்சாறு	படி	$\frac{1}{4}$
குப்பைமேனிச்சாறு	,,	$\frac{1}{4}$
வேப்பெண்ணெ	,,	$\frac{1}{4}$

உபயோகிக்கும் விதம்:—இவைகளைச் சேர்த்து கொடுக்க வேண்டும். குறிஞ்சாயிலைச்சாறு சீந்தில் கொடியிலைச்சாறு கூட்டி துவாலை போடவும். குடிக்க வெந்நீர் விடவும்.

நாலுகாலிலும்
இரங்கச் சுடவும்.

இதுவுமது

செய்குணம்:—உடலைத்திருகி முறுக்கி வலிப்பு உண்டாகும், தடுமாறி நிற்கும்.

மருந்து:—ஆவிலெத்தி
குதிரைலெத்தி
ஆனைநெருஞ்சி

உபயோகிக்கும் விதம்:—இவைகளைச் சமமாய் இடித்து 1-படி சாறு பிழிந்து உள்ளுக்குப் புகட்டி உடம்பிலும் துவாலையிடத் தீரும். இந்தப்படி 3-நாள் கொடுக்கத் தீரும்.

இந்தப்படி
இரு விலாவில் சுடவும்.

நாய்புரிநோயின் குணம்

செய்குணம்:—முறுகி முறுகி திமிரும், வெயிலிற்போய் தூங்கி விழும்.

மருந்து:—தலைச்சுருளிவேர்	பலம்	3
வெற்றிலை	,,	5
வசம்பு	,,	2

உபயோகிக்கும் விதம்:—இவைகளை அரைத்து காடியில் கலக்கிப் புகட்டவும். இந்தப்படி 3-நாள் கொடுக்கத் தீரும்.

இந்தப்படிக்கு இடது விலாவில் சுடவும்.

நாய்வலிப்புநோயின் குணம்

செய்குணம்:—முதுகை நெளிக்கும், முறுக்கும் கீழே விழும்.

மருந்து:—கருத்தக்காக்கணத்தியிலை
நாய்ப்பாகலிலை
குன்றிமணியிலை

உபயோகிக்கும் விதம்:—இவைகளைக் கொண்டுவந்து இடித்துச் சாறுபிழிந்து உடலால் ஆதியந்தமும் பூசி நாசியில் நசியமிடத் தீரும்.

மருந்து:—வேப்பெண்ணெய்	படி	1/4
வாழையிலைச்சாறு	,,	1/4
புங்கன்வேர்சாறு	,,	1/4
வெள்ளுள்ளி	பலம்	1
வசம்பு	,,	1

உபயோகிக்கும் விதம்:—ஷை சாறுகளையும் வேப்பெண்ணெயையும் ஒன்றாய்க் கலந்து அதில் மற்ற இரண்டு மருந்துகளையும் அரைத்துப் போட்டுக் காய்ச்சி முதுகிலும் காதிலும் விட்டு உடம்பினும் தவாலையிடத் தீரும்.

இந்தப்படி பின்னங்கால் தொடை இரண்டிலும் சுடவும்.

இந்தப்படிக்கு இடது விலாவில் சுடவும்.

—000—

நரம்புவலிப்பின் நோய்

செய்குணம்:—முதலில் ஒருவித திமிர் உண்டாகும், மறுநாள் அது அதிகப்படும், மூன்றுநாளில் உடம்பிலுள்ள தசை நரம்புகளெல்லாம் அதிகமாய் இழுப்புக்கொள்ளும், நரம்புகளில் அதிக அழற்சி யுண்டாயிருக்கும், தலையை உயர்த்திக்கொண்டிருக்கும், மூக்கு நீண்டிருக்கும், கண்ணின் எதிரில் ஓர்வித தோல் எழும்பியிருக்கும், வாலைத் தூக்கிக் கொண்டிருக்கும், வாய் திறக்கப்படாமல் பலப்பூண்டுபோகும், கிட்ட யாராவது போனால் அதிக கலக்கமும் பயமுமுள்ளதாய் காணப்படும், துர்தமாய் மூச்சுவிடும், நாடி சுருக்காய் ஓடும், சாணி போடாது.

மருந்து :—முதலாவது பேதியாகும்படி நேர்வாளப் பருப்பு 25-எண்ணிக்கை அரைத்து சிற்றாமணக்கெண்ணை படி-காலே அரைக்காலில் கலக்கிக் கொடுக்கவேண்டியது.

பின்பு நரம்பைச் சேர்ந்த அழற்சி நீங்கும்படி
4-மணி நேரத்துக்கு ஒருதடவை

அபின்	ரூபாயிடை	$\frac{1}{4}$
கரு ஊமத்துவிதை	,,	$\frac{1}{8}$
சடம்புவிதை	,,	$\frac{1}{4}$

இம்மூன்றுங் கொடுத்து வரவேண்டும்.

கண்டவலிப்பின் நோய்

செய்குணம்:—விழுந்து கிடக்கும், கழுத்தை தெற்றி வலிக்கும்.

மருந்து:—மாவிலங்கிலையை அரைத்து மாங்காயளவு உண்டைசெய்து 1-படி வெள்ளாட்டு நீரில் கலக்கிக் கொடுக்க வேண்டும். பிறகு மாவிலங்கு வேரும் நீர்பூலாயிலையும் அரைத்து சதுரக்கள்ளிப்பால் விட்டுப் பிசைந்து மேலே பூசவும். குடிக்க வெந்நீர்விடவும்.

கொடுவலிப்பின் நோய்

செய்குணம்:—வலிப்புத்தோன்றி திடுக்கிட்டு வலிக்கும், காலை இழுத்துவைக்கும், வாயில் நீர் வடியும்.

மருந்து:—குன்றியிலை கொன்றையிலை வகைக்கு மாங்கா பளவு இடித்து 1-படி காடியில் கலக்கி கொடுக்கவேண்டும்.

ஏரியிலிருந்து நெடுக இழுத்து
நாலுகாலு மிறங்கச் சூடும்
இடது விலாவிலும்
சூடு போடவும்.

சூலைகூனி வலிப்பின் நோய்

செய்குணம்:—கண் சிவந்திருக்கும், தீவனம் தின்னாது, திகைத்துக்கொண்டு நிற்கும், வலிபபுத தோன்றி யிருக்கும.

மருந்து:—சுக்கு	பலம்	½
அதிமதுரம்	,,	½
விழுதியிலை	மாங்கா பளவு	
விளாத்தியிலை	,,	

உபயோகிக்கும் விதம்:—இவைகளை அரைத்து கோமூத்திரம் படி ஒன்றில் கலக்கிக் கொடுக்கவேண்டும். சாரணை வேரை அரைதது நல்லெண்ணையில் கலக்கி கொதிக்க வைதது துவாலை போடவும்.

இந்தப்படி
இருவிலாவிலும்
சுடவும்.



திருக்கு வலிப்பின் நோய்

செய்குணம்:—திருகத்திருக வலித்து இழுக்கும், நிற்க முட்டாது, சுற்றிச்சுற்றி வரும், தடுமாறும்.

மருந்து:—ஆனைலத்தி
குதிரைலத்தி
ஆனைவணங்கி அல்லது ஆனைநெரிஞ்சி

உபயோகிக்கும் விதம்:—இவைகளை இடித்துப் பிழிந்து வகைக்கு ¼-படி சாறு கொடுக்கவேண்டியது. தவிர மேலே தவாலையும் போடவேண்டும்.

நாலு கால்களிலும்
இரங்கச் சூடுபோட்டு
பிறகு இருவிலாவிலும் சூடு
போடவும்.



குதிரை வலிப்பின் நோய்

செய்குணம்:- நாலு கால்களும் வலித்திருக்கும், மார்பில் வலிகாணும், அரைக்கண்போட்டு விழிக்கும்.

மருந்து:—ஐவிரலிக்காய்
வெள்ளருக்கலங்கொம்பு
மேற்படி பூ

உபயோகிக்கும் விதம்:— இம்மூன்றும் தனித்தனி அரைத்து வகைக்கு சிறுமாங்காயளவு திரட்டி, கள்ளிச்சாறு படி-¼, கோமூத்திரம் படி-1 இதுகளைச் சேர்த்துக் கலக்கி ஒருவேளை கொடுக்கவேண்டியது. மறுநாள்முதல் கற்பூரவல்லி யிலையும் ஒருபிடி கூடச் சேர்த்துக் கொடுக்கவேண்டும்.

அல்லது

சுக்கு	பலம்	1
மிளகு	,,	1
திப்பிலி	,,	½
ஓமம்	,,	½
வசம்பு	,,	⅛
பெருங்காயம்	,,	[illegible]
வெள்ளைப்பூடுத்தைலம்	,,	[illegible]

வேப்பெண்ணெ படி இ

இவையுஞ்சேர்த்துக்கொடுக்கலாம். குடிக்க வெந்நீர் விடவும்.

தலைமுதல் வால்வரை முதுகில்
இருபுறமும் வளையாக இழுத்துச் சூடும்
நாலுகால்களும் இறங்கச்
சூடுபோடவும்.



இதுவுமது

செய்குணம்:—புல் வைக்கோல் அரைவாய் கொண்டு தின்னும், கண்ணை யுருட்டி விழிக்கும், தலையை ஏறவாங்கும், வாயிலே நுரை தள்ளும், நாலு காலும் தள்ளும், கீழேவிழுந்து புறளும், கண்ணை சொருகி வாங்கும் பார்க்கும்.

மருந்து:—சன்னிநாயிறு	பலம்	1இ
அபின்	,,	1இ
பனங்கள்ளு	படி	1
குன்றியிலைச்சாறு	,,	1
சாராயம்	,,	½

உடபோகிக்கும் விதம்:— இவையெல்லாம் ஒன்றாய்க் கலக்கிகொடுக்கவும். அதன்பிறகு கொம்பு அறுத்து செவியும் அறுத்து கண்ணடி நரம்பு துடிப்புப் பார்த்து,

இந்தப்படி
நாலுகாலிலும இறங்கச் சுடவும்,

விலாவிலும்
சூடு போடவும்.



இதுவுமது

செய்குணம்:—நடுநடுங்கிக் கீழேவிழும், வாயில் வெண் நுரை தள்ளும், கண் குழிவிழும்.

மருந்து :—கருங்கொாட்டை ஷை மூலிகை சமூலங் கொண்டுவந்து இடித்து, வெந்நீர்விட்டுச் சாறுபிழிந்து, நாள் ஒன்றுக்கு 1-படி வீதம 3-நாள் கொடுக்கத் தீரும.

எருக்கம்பூ பிடி-3, இதைப் பசுவின்நீரில் அரைத்துக் கலக்கி 2-நாள் கொடுக்கத் தீரும்.

இந்தப்படி
இருபக்கத்திலும் சுடவும்.

ஆனைவலிப்பின் நோய்

செய்குணம்:—தீவனம் தின்னாது, கண்ணை உருட்டி விழிக்கும், தலையை ஏறவாங்கும், வாயால் நுரைதள்ளும், நாலுகால்களும் தள்ளும், விழும், இழுக்கும, கண்ணைச் சொருகி வாங்கும், படபடத்து விழும், பாரும.

மருந்து:—	சன்னிநாயறு	பலம்	½
	சுடலாவரையிலை அரைத்தது	நெல்லிக்காயளவு	
	சாளைக்கருவாடு	,,	
	கருங்குன்றியிலைச்சாறு	படி	௨
	பனங்கள்ளு	,,	1
	கழுதைமூத்திரம்	,,	1

இவைகளை சேர்த்துக் கொடுக்கவேண்டும். குடிக்க வெந்நீர் விடவும். இதில கண்ட சூடுபோட்டபிறகு மாட்டின்தலையில் குளிர்ந்த ஜலம் நூறுகுடம விடவேண்டியது

இரு விலாவிலும்
சூடு போடவும்.



இந்தப்படி
தலையில் சூடு போடவும்.



ஜன்னி வலிப்பின் குணம்

செய்குணம்:—காலுகாலும் தெத்தி தெத்தி நடக்கும்.

மருந்து:—பூண்டு
வசம்பு

உபயோகிக்கும் விதம்:—இவை இரண்டையும் அரைத்து காடியில் கரைத்து கொடுக்கவும் பின்பு சூலம்போல சுடவும். உடனே குணம் கொடுக்கும்.

முசல் வலிப்பின் நோய்

செய்குணம்:-இன்ன வேளையென்று இல்லாமல் நிற்கும் போதும் நடக்கும்போதும் காசாவில் கட்டியிருக்கும்போதும் திடீரென்று கீழே விழுந்து வலிப்புத்தோன்றி இழுக்கும்.

மருந்து:-காக்கையைக் கொன்று தீயில்சுட்டு கால் தலை ரோமம் இறகு இவைகளைத் தள்ளிப்போட்டு, வயிற்றைக்கீறி குடலை எடுத்துப்போட்டு நின்றதை, ½-படி சாராயத்தில வேகவைத்து முள்ளு எலும்புகளை பொறுக்கிப்போட்டு பிசைந்து உள்ளுக்கு கொடுக்கவேண்டும்.

(அல்லது)	கஸ்தூரி	பலம்	⅛
	கோரோசனை	,,	¼
	ஜாதிக்காய்	,,	1

உபயோகிக்கும் விதம்:— இவைகளைப் பொடிசெய்து மலட்டு வெள்ளாட்டுநீரில் விளாவிக் கொடுக்கவேண்டியது. ஷை ஆட்டின் இரத்தத்தை நசியமும்பண்ணி மேலே துவாலை போடவும். குடிக்க வெந்நீர்விடவும்.

வெதுப்பு நோய்

செய்குணம்:-மயிர் சிலிர்த்திருக்கும், எருகும்.

மருந்து:—	துத்தியிலை	குத்து	1
	கர்பபூரவள்ளியிலை	,,	1
	மாதளையிலை	,,	1
	மாதளம்பிஞ்சு	,,	1

உபயோகிக்கும் விதம்:—இவைகளைச் சேர்த்து இடித்து கவளங் கொடுக்கவேண்டும்.

(அல்லது) ஈருள்ளி பலம்-5, விடத்தலையிலை அரைத்து மாங்காயளவு எருமைமோர் அல்லது காடியில் கலக்கி கொடுக்கலாம்.

(அல்லது)	ஆத்து அலரியிலை	பிடி	3
	சீரகம்	பலம்	1
	ஈருள்ளி	,,	5

உபயோகிக்கும் விதம்:—இலைகளை இடித்து கவளம் கொடுக்கலாம்.

(அல்லது) கொடும்பையைச் சமூலத்துடன் வெந்து பிசைந்து இறுத்துக்கொண்டு அதில் சீரகம படி-⅛, ஈருள்ளி பலம்-2 அரைதது கலக்கி எருமைமோர் படி ஒன்றில் சேர்த்துக் கொடுக்கலாம்.

(அல்லது) அயிரைமீன்-1, இசங்கம்பட்டை மாங்காய் அளவு அரைதது 1-படி மோரில் கலக்கி எல்லா வெதுப்பு நோய்க்கும் கொடுக்கலாம்.

இதுவுமது

செய்குணம்:—தண்ணீர்போல கழியும் உடம்பு உலர்ந்து அசதியாகும.

மருநது:-கற்றாழையைக் குருக அரிந்து வெந்து தேங்காயளவு, கல்லுப்பு பலம-¼, 1-படி மோரில் கலக்கி கொடுக்கவேண்டும்.

இதுவுமது

வியாதிவரும் காரணம்:—அடிக்கடி எருகும் வைக்கோல் முதலிய உலாகதீனி தின்றுக்கொண்டேயிருந்து சடுதியில் புல் முதலிய பசுநதீனி தினபதினாலும் உஷ்ணமாயிருந்து உடனே குளிா்சசு உண்டாவதினாலும் இராக்காலததில் வெட்டவெளியி லிருப்பதினாலும உண்டாகும்.

கவனிப்பு:— பசுந்தீனியால் உண்டாயிருந்தால் அதை நிறுத்தவேண்டியது குளிர்ச்சியினாலும் ஈரத்தினாலு முண்டாயிருந்தால் உடனே கூரைக்குள் கட்டி கூட்டை மூடிப்போட்டு தேய்த்து உஷ்ணமா யிருக்கும்படி கம்பளி முதலானதைப் போர்க்க வேண்டியது. எரிச்சல் நிற்காமல் பலத்து கொஞ்சம் சுரமும் கண்டால்,

அபின்	ரூபாயிடை	1½
சாராயம்	படி	⅛
கஞ்சி	,,	½

இம்மூன்றையும் சேர்த்துக் கொடுக்கவேண்டும். 4-மணிக்கு ஒருதரம் கொடுக்கலாம்.

இதுவுமது

செய்குணம்:-மூக்கிலிருந்து நீர்வடியும், செங்கல் மங்கலாக எருகும்.

மருந்து:-தென்னம்பூவிரியில் காடிவிட்டு இடித்துப் பிழிந்தசாறு 1-படி கொடுக்கவேண்டும்.

இந்தப்படி இடது விலாவில் சுடவும்.



இதுவுமது

செய்குணம்:-வாய்நீர் வடியும், மயிர் சிலிர்க்கும், தீவனம் அரைவாய்க்கொண்டு தின்னும், அடிக்கடி சிறுகச் சிறுக எருகும்.

மருந்து:-பெரிய கிலுகிலுப்பைச்செடி சமூலங்கொண்டு வந்து இடித்துப் பிழிந்த சாறு படி-¼ கொடுக்கவேண்டும்.

இதுவுமது

செய்குணம்:—தின்ற தீவனம் நன்றாய்ச் செரியாமலும், உடலில் ஒட்டாமலும், எகிரிக்கொண்டு இருக்கும், உடம்பு மெலியும்.

மருந்து:—ஈருள்ளி	பலம்	10
சீரகம்	,,	5

உபயோகிக்கும் விதம்:—இவைகளை அரைத்து பசுவுக்கு எருமைமோரிலும் எருமைக்குப் பசுவின்மோரிலும் கலக்கிக் கொடுக்கவேண்டியது.



இந்தப்படி
இடது விலாவில்
சூடு போடவும்.

இதுவுமது

செய்குணம்:—கண்களிலிருந்தும் வாயிலிருந்தும் நீர் வடியும், சாணி பீச்சிக் கழியும், நாறும்.

மருந்து:—விளாயிலை	பிடி	3
இண்டங்கொழுந்து	,,	3

உபயோகிக்கும் விதம்:—இவைகளை அரைத்து 3-படி தண்ணீரில் கலக்கி கொடுக்கவேண்டும்.



இந்தப்படி
இடது விலாவில்
சுடவும்.

தீராத எருக்கல்

மருந்து:—பங்கம்பாளை வேரும் இலையும் மாங்காயளவு அரைத்து ½-படி பசுவின்பாலில் கொடுக்கவேண்டும், எருக்கல் நின்றுபோவதுந் தவிர சாணியும் போடாது அதற்கு உப்பிலி வேர் பலம்-1, அரைத்து 1-படி தண்ணீரில் கலக்கி குடிக்கக் கொடுத்தால் சரியானபடி சாணி போடும். வேண்டியிருந்தால் 3-நாள் கொடுக்கலாம்.

இதுவுமது

செய்குணம்:—கொடுப்பையை சமூலம் பிடுங்கிவந்து இரவு அடுப்பில் வேகவைத்து காலையில் தண்ணீர இறுத்துக் கொண்டு சீரகம் நெல்லிக்காயளவும் வெங்காயம் எலுமிச்சங் காய் அளவும் அரைத்து எருமை மாடானால் பசுவின் மோரிலும், பசுமாடானால் எருமை மோரிலும் கொடுக்க வேண்டும்.

இந்தப்படி
இடது விலாவில்
சுடவும்.



சீதள வெதுப்பு நோய்

செய்குணம்:—உடம்பெல்லாங் குளிர்ந்திருக்கும், செவி தாழ்ந்திருக்கும், கண்குழியும, சிலநாள் சென்றபின் தண்ணீர் போலெருகும்.

மருந்து:—கடுக்காய்தோடு	,,	7
கருஞ்சீரகம்	பலம்	¼
கடுகு	,,	¼
ஓமம்	,,	1
மஞ்சணத்திக் கொழுந்து	பிடி	3
வசம்பு	,,	¼

உபயோகிக்கும் விதம்:—இவைகளை திருநாமத்தாளியிலை சாரணைத்தியிலை வகைக்கு அரைத்தது மாங்காயளவு பழம்புளி யிலை பலம்-½, 1-படி காடியில் கொடுக்கவேண்டும்.

சில்வெதுப்பு நோய்

செய்குணம்:—கண்ணிற் பீளைசாடும், மயிர் சிலிர்க்கும், சரீரம் சுடும், உடம்பு சுழிக்கும், குருவிகிற்கும், எருகும், அசை இடாது.

மருந்து:—அதிமதுரம்	பலம்	½
ஏலம்	,,	½

கிரும்பு	,,	½
சாருள்ளி	,,	1
சீரகம்	,,	இ
கோட்டம்	,,	½
சுக்கு	,,	½
இலவங்கம்	,,	⅛
இலந்தையிலை	பிடி	1
அத்திப்பிஞ்சு	படி	¼

உபயோகிக்கும் விதம்:—இவைகளை அரைத்து பசுவின் பால் அல்லது கழுநீர் படி-ஒன்றில் கலக்கி கொடுக்கவேண்டும்.

பெருவெதுப்பு நோய்

செய்குணம்:—தீவனம் அரைவாய்கொண்டு தின்னும், வயிறு சிறு மந்தங்கொள்ளும், மயிர் சிலிர்க்கும், கண்கள் கலங்கி கண்பட்டைகள் வீங்கும், மேலே கொதிக்கும், எருகும் மூன்றுநாள் ஏறுகிறபோது நுரைக்கும்.

மருந்து:—ஏலம்	பலம்	½
இஞ்சி	,,	1
சீரகம்	,,	1
வசம்பு	,,	¼
மிளகு	,,	¼
வெற்றிலை	,,	1

உபயோகிக்கும் விதம்:—இவைகளை ஒன்று சேர்த்து அரைத்து பருத்திவிதைப்பால் படி 1-ல் கலக்கிக் கொதிக்க வைத்து இரண்டு பொழுது கொடுக்கவேண்டும்.

பின்பு,

சீரகம்	பலம்	1
அதிமதுரம்	,,	1
செங்கழுநீர்க்கொட்டம்	,,	1
இலவங்கம்	,,	¼
சாருள்ளி	,,	1

வெதுப்படக்கியிலை	பிடி	1
கருவைக்கொழுந்து	,,	1
ஆவாரம்பூ	,,	1
பாருத்திபூ	,,	1
பருத்திபிஞ்சு	படி	¼
அத்திப்பிஞ்சு	,,	½
மாதளம்பிஞ்சு	,,	5
கொடுப்பைவிழியிலை	பிடி	1
திருனாத்தாளி	,,	1
உளுந்து	படி	இ

உபயோகிக்கும் விதம்:—இவ்வளவும் ஒன்றுச் சேர்த்து கவளம் செய்துக் கொடுக்கவும்.

(அல்லது) அத்திப்பட்டை	பலம்	1
ஆவரம்பட்டை	,,	1
மருதப்பட்டை	,,	1
நெல்லிப்பட்டை	,,	1
குருந்கட்டி சமூலம்	,,	1
உதலி	,,	3

இவைகளைத் தரித்துப்போட்டு 10-படி தண்ணீர்விட்டுக் கொதிக்கவைத்துப் போதைக்கு 2-படி தண்ணீர் காட்டவும்.

இந்தப்படி
இடது விலாவில் சுடவும்

குடல்வெதுப்பு நோய்

செய்குணம்:-கண்சிவந்து கண்ணீர்வடியும், பீளைசாடும், வாயில் நீர்வடியும், எருகும்.

மருந்து:—சருள்ளி	பலம்	2
சமுத்திராபழம்	,,	இ
சதகுப்பை	,,	இ
குருந்தட்டிவேர்த்தெலி	,,	½
விழியிலை	பிடி	1

உபயோகிக்கும் விதம்:—தென்னம்பூவிரி இவை மருந்துடன் சேர்த்து அரைத்து மாங்காய் பிரமாணம் உண்டை திரட்டி எருமைமோர் படி 2-ல் கலக்கிக் கொடுக்கவேண்டும்.

ஒழுக்குவெதுப்பு நோய்

செய்குணம்:—கெகிழமாகச் சாணிபோடும் அடிக்கடி சிறுகச் சிறுக எருகும், சவ்வுசவ்வாய்ப் பீச்சும், உடம்பெல்லாந் தடிக்கும்.

மருந்து:—விடத்தலையிலை
வீழியிலை

உபயோகிக்கும் விதம்:— இவை வகைக்கு மாங்காயளவு அரைத்துப் பழமோர் அல்லது பழங்காடி படி ஒன்றில் கலக்கிக் கொடுக்கவேண்டும். கொப்பூழில் நின்று வயிற்றைக் கட்டி மேலே சுடிவாங்கவும்.

இந்தப்படி
மேலே சுடவும்.



மூலவெதுப்பு நோய்

செய்குணம்:—நடைதளரும் உடம்பு கொதிக்கும் தீவனம் தின்னாது நாக்கு வழுவழுக்கும் நீர் சிவந்திருக்கும் அயர்ந்து கிடக்கும் சிறிதுநேரம் சாணி இறுகலாகப்போடும் சிறிதுநேரம் எருகும் அதில் துர்நாற்றமுண்டாகும்.

மருந்து:—சீரகம்
கோவைத்தண்டிலை

உபயோகிக்கும் விதம்:—இவை இரண்டையும் சேர்த்து அரைத்து மாங்காயளவு உண்டைசெய்து 1-படி பசுவின் பாலில் கொடுக்கவேண்டும்.

அல்லது,

சீரகம்	பலம்	1
வெள்ளைப்பூடு	,,	1
எள்ளுபிண்ணாக்கு	,,	5

உபயோகிக்கும் விதம்:—இவைகளை இடித்து இத்துடன் முருக்கிலைச்சாறு படி-¼, புழுங்கலரிசி படி அரையும் வெந்த சாதத்தில் சேர்த்து உள்ளுக்குக் கொடுக்கவும்.

அல்லது

கடுக்காய்த்தோடு	7
நீர்க்கடுப்புத்தோல்	
உலகுய்யக்கொட்டான்-(உரலியிலை)	
ஷை வேர்	

இவை வகைக்கு இடித்ததூள் மாங்காயளவு எடுத்துக் கொண்டு 2-படி தண்ணீரில் போட்டுக் கொதிக்கவைத்து உள்ளுக்குக் கொடுக்கவும்.

இந்தப்படி முதுகில் சுடவும்.



இந்தப்படி நெற்றியில் சுடவும்.



மந்தவெதுப்பு நோய்

செய்குணம்:-மயிர் சிலிர்த்திருக்கும் வாயால் நீர்வடியும், தீவனம் தின்னாது, தூங்கிவிழும்.

மருந்து:—½-படி எள்ளையிடித்து மாங்காய் அளவு வெண்ணெயில் குழப்பி அல்லது 1-படி பாலில் கலக்கி கொடுக்கவேண்டும்.

அல்லது

மிளகு	பலம்	1
வெள்ளைப்பூடு	,,	2
அகத்திச்சாறு	படி	¼
நெய்	,,	¼

உபயோகிக்கும் விதம்:-இவைகளைச் சேர்த்து கொடுக்க வேண்டும். குடிக்க வெந்நீர் விடவும்.

இந்தப்படி விலாவில் சுடவும்.



அழல் வெதுப்பு நோய்

செய்குணம் :—உடம்பு கொதிக்கும், மேலெல்லாம் தடித்து சிரங்குபோலிருக்கும், எருகும்.

மருந்து:—சதகுப்பை	பலம்	½
அத்திப்பட்டை		
அகத்திப்பட்டை		
அதிமதுரம்		
தென்னம்பூவிரி		

உபயோகிக்கும் விதம்:—இவைகளை வகைக்கு மாங்காய் அளவு அரைத்து 1-படி காடியில் கொடுக்கவேண்டும்.

இதுவுமது

செய்குணம்:—கண் சிவந்திருக்கும், பீளை சாடும், கண்ணீர்வடியும், தலைகவிழ்ந்து நிற்கும், மேலெல்லாம் கொப்பளமாக விருக்கும், தலை நடுக்கும், சீரம் பரப்பெடுக்கும், செருமும், நாக்கில் காசுபோல் தடிக்கும்.

மருந்து:—கற்பூரவள்ளி இலைச்சாறு	படி	¼
தாளியிலைச்சாறு	,,	¼
கற்றாழஞ்சோறு	,,	¼
குருந்தட்டியிலை அரைத்தது	மாங்காயளவு	
குளிதாமரையிலை	,,	
சீரகம்	பலம்	1
அதிமதுரம்	,,	1
ஓமம்	,,	1
ஏலம்	,,	1
சுருள்ளி	,,	2

இவைகளை அரைத்து 2-படி காடியில் கொடுக்க வேண்டும்.

அல்லது,

புல்லுருவி அரைத்தது மாங்காயளவு
வாழைப்பழம் 20
இளநீர் தண்ணீர் படி-2

இவ்விரண்டில் கொடுக்கலாம்.

இதுவுமது

செய்குணம்:—மேல்கொதிக்கும், உடம்பெங்கும் பொத்திட்டு வாரியிடும் முதுகையும் உடலையுஞ் சுழித்துச் சுழித்து வாங்கும், தீவனம் தின்னாது, கிடந்த இடையிற் கிடக்கும்.

மருந்து:—நவ்வற்பட்டை	பலம்	5
அத்திப்பட்டை	,,	
மருதம்பட்டை	,,	
குருந்தட்டிவேர்	,,	

உபயோகிக்கும் விதம்:—இவைகளை இடித்து காடியில் ஊறப்போட்டு இறுத்துக் கொடுக்கவேண்டும்.

அல்லது

கட்டுக்கொடி இலைச்சாறு	படி	¼
தாளியிலைச்சாறு	,,	¼
கரிமுசட்டை இலைச்சாறு	,,	¼
பருத்திவிதைப்பால்	,,	இ
எருமைப்பால்	,,	1

இவைகளை சேர்த்துக் கொடுக்கலாம்.

இந்தப்படி
இடது பக்கம்
சூடு போடவும்.



இரத்த வெதுப்பு நோய்

செய்குணம்:-இரத்தமாகப் பீசும், ஆடைபோலே அந்த இரத்தத்துக்குள்ளே கலந்திருக்கும், மீன் செடிநாறும வயிறு இரையும்.

மருந்து:—அதிமதுரம்	பலம்	2
இலவங்கப்பட்டை	,,	2
சீரகம்	,,	1
சுருள்ளி	,,	2
ஏலம்	,,	1
மாதளங்காய்	உரு	1
ஆவாரங்கொழுந்து		
குளிதாமரையிலை		

உபயோகிக்கும் விதம்:—இரண்டு இலையை முந்தி அரைத்து மாங்காயளவு சேர்த்து, பிறகு எல்லாம் ஒன்றாய் அரைத்து,

நல்லெண்ணெ	படி	$\frac{1}{4}$
கோழிமுட்டை	உரு	20

இவைகளை சேர்த்து 2-படி காடியில் கலக்கி கொடுக்கவும்.

இந்தப்படி
முதுகில்
சூடு போடவும்.



இதுவுமது

செய்குணம்:—இரத்தமாகப் பீசும்.

மருந்து:—விளாம்பிஞ்சு	உரு	10
அத்திப்பட்டை	பலம்	5
மயிர் மாணிக்கம்	,,	$\frac{1}{4}$
வட்டத் துத்தியிலை	பிடி	3
படங்கொடி. (அல்லது)		
இண்டங்கொடி	,,	3

உபயோகிக்கும் விதம்:—இவைகளை இடித்து 1-படி மோரில் கலக்கி கொடுக்கவேண்டும்.

அல்லது,

வீழியிலை	பிடி	$\frac{1}{4}$
கல்லத்திப்பிஞ்சு	பலம்	10

இவைகள் இரண்டுமிடித்து 3-படி காடியில் கொடுக்கவும்.

கடுவெதுப்பு நோய்

செய்குணம்:-வாயில் நீர்வடியும், செவிதாழும், தீவனம் தின்னாது, குனனிநிற்கும், எருகும், அதில் இரத்தமும் ஜலமும் திண்டம் திண்டமாகவும், சவ்வு சவ்வாகவும் விழும், அதில் துர்க்கந்த வாசனை யுண்டாகும், தலையைப் பூமியில் போட்டுக்கொண்டிருக்கும், நிற்கமாட்டாது.

மருந்து:—வெந்தயம்	பலம்	$\frac{1}{2}$
சீரகம்	,,	$\frac{1}{2}$
அதிமதுரம்	,,	இ
இலவங்கப்பட்டை	,,	$\frac{1}{2}$
ஈருள்ளி	படி	$1\frac{1}{2}$
கொடுப்பை அரைத்தது	மாங்காயளவு	
ஆரைக்கீரை அரைத்தது	,,	
தென்னம்பூவிரி அரைத்தது	,,	
நல்லெண்ணெய்	படி-3	மாகாணி

உபயோகிக்கும் விதம்:—இவைகளைச் சேர்த்து கொடுக்கவும். பிறகு அரிசிக்கூழ் காய்ச்சி மத்தியான வேளையில் பால்மாறாமல் கொடுக்கவும்.

சீதவெதுப்பு நோய்

செய்குணம்:—சாணியுடன் ஜலம்கலந்து விழும்.

மருந்து:—வசம்பு	பலம்	$\frac{1}{8}$
எள்ளு	படி	$\frac{1}{2}$
கழிதும்பைச்சாறு	,,	$\frac{1}{4}$

உபயோகிக்கும் விதம்:—இவைகளைச் சேர்த்து இடித்து கொடுக்கவேண்டும்.

இதுவுமது

செய்குணம்:-எச்சை வாயில் இடைவிடாமல் கற்றாழஞ் சோறுபோல் வடிந்துக் கொண்டிருக்கும், பின்னங்கால் நடுங்கும்.

மருந்து:—முருக்கிலைச்சாறு	படி	1
காடி	,,	3
வெளிச்சிப்பட்டை	பலம்	2

உபயோகிக்கும் விதம்:—ஷை பட்டையை அரைத்து காடியில் கலக்கி புகட்டத் தீரும்.

இந்தப்படி இடது
விலாவில் சுடவும்.

பிளிவெதுப்பு நோய்

செய்குணம்:—சாணியுடனே இரத்தம் கலந்து விழும்.

மருந்து :—தென்னம்பூவிரியும், குளிதாமரையிலையும் இவ்விரண்டும் மாங்காயளவு சேர்த்து இடித்துக் கொடுக்கவும்.

அல்லது

தேக்கம்பட்டைச்சாறு	படி	$\frac{1}{2}$
தேங்காய்ப்பால்	,,	$\frac{1}{2}$
பசுவின்மோர்	,,	1

உபயோகிக்கும் விதம்:—இம்மூன்றும் சேர்த்து ஊர வைத்திருந்து மறுநாள் கொடுக்கலாம்.

அல்லது

நிலவேம்பு மாங்காயளவு அரைத்து 1-படி காடியில் கொடுக்கலாம்.

சீதக்கழிச்சல் நோய்

செய்குணம்:—இரத்தமும் ஜலமும் சாணியுடன் விழும்.

மருந்து:—ஏலம்	பலம்	$\frac{1}{4}$
கிராம்பு	,,	$\frac{1}{4}$
அதிமதுரம்	,,	$\frac{1}{4}$
இலவங்கப்பட்டை	,,	$\frac{1}{2}$

உபயோகிக்கும் விதம்:—இவைகளை பூலாத்தித்தோல் எலுமிச்சங்காய் அளவு மருந்துடன் சேர்த்து அரைத்து எருமைப்பால் படி-அரையில் கலக்கி கொடுக்கவேண்டும்.

அல்லது

ஜாதிக்காய்	உரு	2
ஜாதிபத்திரி	பலம்	$\frac{1}{4}$
கிராம்பு	,,	$\frac{1}{4}$
மாசிக்காய்	,,	$\frac{1}{4}$
இலவங்கப்பட்டை	,,	$\frac{1}{2}$
சீரகம்	,,	$\frac{1}{2}$
மிளகு	,,	$\frac{1}{4}$
வெற்றிலை	,,	1

உபயோகிக்கும் விதம்:—இவைகளை அரைத்து மாங்கா அளவு வெண்ணெயும் சேர்த்துக் கொடுக்கலாம். $\frac{1}{2}$-பலம் மிளகு தட்டிப் போட்டு வெந்நீர்வைத்து குடிக்கவிடவும்.

இதுவுமது

செய்குணம்:-இரத்தமும் சகலமும் சாணியுடன் விழும், அடிப்பக்கம் கொஞ்சம் வீங்கியிருக்கும் இந்த வியாதி மழைக் காலம் ஆகையாலும், பனிக்கால ஆரம்பத்திலும் வேனிற் காலத்திலும் உண்டாகும்.

மருந்து:—மாட்டின் தேகமுழுமையும் நன்றாய் வேது போடுவது உத்தமமாயிருப்பதுந் தவிர, $\frac{1}{8}$-படி விளக்கெண்ணை யும் சுகபேதியாகக் கொடுக்கவேண்டும். அவசியமிருந்தால் அடிக்கடி கொடுக்கலாம்.

3 × 11 3 × 11

இதுவுமது

செய்குணம்:—சதை சதையாய்ப் பீச்சிக் கழியும்.

மருந்து:—1-பலம் மிளகை அரைத்து

நல்லெண்ணெ	படி	$\frac{3}{4}$
தாழை விழுதுச்சாறு	,,	1

உபயோகிக்கும் விதம்:—இவைகளைச் சேர்த்துக் கலக்கி கொடுக்கவேண்டும்.

இதுவுமது

செய்குணம்:—சாணத்துடன் இரத்தம் விழும், ஜலம் விழும், சவ்வுவிழும், முக்கும்.

மருந்து:—மிளகுப் பருமனாக இருக்கிற

அத்திப்பிஞ்சு	படி	1
ஆவாரம்பூ	பிடி	4
பூலாத்திவேர் தோல்	,,	4
பச்சரிசிமாவு	படி	இ

உபயோகிக்கும் விதம்:—இவைகளை நன்றாய் அரைத்து கழுநீரில் கலக்கி கொடுக்கவேண்டும்.

இரத்தக்கழிச்சல் நோய்

செய்குணம் :—இந்த வியாதி இருந்தாற்போலிருந்து உண்டாகும், சாதாரணமாய் கதகதப்புடனே நடுக்கங் காணும், செவி தாழும், ஆரம்பத்தில் எருகும், பிறகு சீதமும் இரத்தமும் கலந்து குழம்பாகத் துர்க்கந்தமாகக் கழியும், சில சமயத்தில் சவ்வுபோலவும் கலந்திருக்கும், இரத்தமாகவும் பீச்சும், கழியும்போது மாடுகள் வெகு வருத்தப்படும். பின்பு கொஞ்சநேரம் வரையில் முக்கிக்கொண்டிருக்கும், அடிக்கடி அடிவயிற்றில் கடுநோய் உண்டாகி தன் பக்கத்தை மாடு சுற்றுமுற்றும் பார்க்கும், பல்லைக்கடிக்கும், கூப்பிடும், முதுகை வளைத்துக்கொண்டு நிற்கும், மூச்சு சீக்கிரமாய் வரும், நாடி படபடத்து அடிக்கும்.

மருந்து:—மலம் இளகி யிருந்தபோதிலும் பேதி மருந்து கொடுப்பது உத்தமம்.

அதற்கு,

சிற்றாமணக்கெண்ணை	படி	¼
அபின்	ரூபாயிடை	¼

உபயோகிக்கும் விதம்:—இவைகளை சேர்த்து கொடுக்க வேண்டும். பின்பு வேண்டியிருந்தால் மறுநாள் காலையிலும் இதைப்போலவே கொடுக்கலாம். இதுவுமல்லாமல் நாள் 1-க்கு 3-தரம்,

அபின்	ரூபாயிடை	⅛
வால்மிளகுத்தூள்	,,	3-இ
நெய்	படி	¼

இம் மூன்றும் சேர்த்துக் கொடுக்கவேண்டும். அடிவயிற்றில் சூடான ஒத்தடம் போடவேண்டியது. இளம் சூடாயிருக்கும்படி 6-படி வெந்நீரை பீச்சாங்குழலினால் ஆசனத்துக்குள் அடித்தால் அதிக குணமுண்டாகும் தீனி வெகு ஜாக்கிரதையாய்ப் பார்க்கவேணும். பிசைந்த தவிடும் பச்சரிசிக் கஞ்சியும் பசுமையான இளமபுல்லுந்தான் கொடுக்கலாம்.

அல்லது

இந்த வியாதி கண்டவுடனே ½-படி நெய்யில் ¼-ரூபாயிடை அபினியைச் சேர்த்துக் கொடுக்கவேண்டியது. பின்பு எட்டு மாதளம்பிஞ்சை இரண்டாகப்பிளந்து அதில் நாலு சாதிக்காயை இரண்டாக வெட்டி உள்வைத்துப் பொருத்தி முள்ளினால் தைத்து நெருப்பில் வேகவைத்து எடுத்து அதை மோர்விட்டு அரைத்து அதில் நாலேமாகாணி ரூபாயிடை அபினியுஞ் சேர்த்து ஒருபடி மோரில் கலக்கிக் கொடுக்க வேண்டும். இந்தப்படி காலை மாலை கொடுப்பதுந்தவிர சமயத்துக்குத் தக்கபடி நாள் ஒன்றுக்கு மூன்றுபொழுதும் கொடுக்

கலாம். விலாவிலும் வயிற்றிலும் வெந்நீர் ஒத்தடம் போட்ட பிறகு அரிசிக்கூழ் காய்ச்சி ஆகாரங் கொடுக்கவேண்டும். குடியாவிட்டால் புகட்டவேண்டியது.

கவனிப்பு:—இந்த வியாதி ஆரம்பத்தில் பன்றிநெய் படி-½ கொடுத்து அநேகமாய் குணங்கண்டு இருக்கிறது. கதலிவாழைப்பழமும் பசுவின் நெய்யும் கொடுத்து அநேகமாய் குணங்கண்டிருக்கிறது.

கழிச்சல் நோய்

இவ்வியாதி வரும் காரணம்:— பெருநோயின் காரணத்தால் உண்டாகாமல் இருக்கிறபட்சத்தில் முதல்மழைக்கு அப்பால் உண்டாகிற இளம்புலலில் மேய்கிறதினால் உண்டாகின்றது.

மருந்து:— திரேகமுழுதும் வேது போடவேண்டியது.

தவிர,	காசுக்கட்டி	ரூபாயிடை	அரையேஅரிக்கால்
	கிராம்பு	,,	காலேமாகாணி
	மிளகு	,,	காலேமூன்றுமாகாணி
	சுக்கு	,,	காலேமாகாணி

உபயோகிக்கும் விதம்:— இவைகளைப் பொடிசெய்து அரைபடி வெந்நீரில் கலக்கி கொடுக்கவேண்டும். வியாதி அநேகமாய் குணமானதின் பின்பு காட்டுக்கொள்ளுயிலை பலம்-4 அரைத்து 5-படி எலுமிச்சம்பழச்சாற்றில் கலக்கி அன்றாடம் 1-படி வீதம் காலமே கொடுக்கவேண்டியது.

இராணிக்கழிச்சல் நோயின் குணம்

செய்குணம்:—தீபனம் குதப்பித் தள்ளும்.

மருந்து:—பிரண்டைத்தண்டு	பிடி	1
உப்பு	,,	1

உபயோகிக்கும் விதம்:— இவை இரண்டையும் இடித்து கவளம் போடச் சொஸ்தமாகும்.

கழிகிற மாட்டுக்கு வேறுவிதம்

மருந்து—வரப்பூலாவேர்
கடப்பன்கொழுந்து
உளுத்தமாவு
தென்னம்பாளை
கருவேப்பிலை

உபயோகிக்கும் விதம்:— இவைகளை அரைத்து நாழி பசுவின்பாலில் கரைத்துக் கொடுக்க குணமாகும்.

இந்தப்படி

இடதுவிலாவில் சுடவும்

துர்ப்பல வியாதி நோய்

செய்குணம்:— தேகத்தில் கொப்பளங்கள் உண்டாகும். சில சந்தர்ப்பத்தில் மேற்கண்ட கொப்பளங்கள் நாரஞ்சிபழம் பிரமாணங்கூட யிருக்கும். சிலவிஷயத்தில் மாட்டின் தோல் மட்டுஞ் சிவந்து ரோமமும் சிலிர்த்திருக்கும். பலமான மழைகளில் நனைந்தால் கழிச்சலுண்டாகும். தலையும் காதுகளும் சாய்ந்து இரைபெடாமல் சோம்பலாய் நிற்கும்.

மருந்து:—10-ரூபாயிடை கரியபவளத்தை ¼-படி வெந்நீரில் கரைத்து கொடுக்கவேண்டியது. தவிர சாணியை தண்ணீரில் கொழுக்கக் கரைத்து காய்ச்சி திரேகத்தில் வேது போடவேண்டியது.

மறுநாள் முதல்

மருந்து:-கியாலமல் (இங்கிலீஷ்மருந்து)	நெல்லிடை-60
சல்பியூரெட் ஆப் அண்டிமோணி	நெல்லிடை-40
சவுக்காரம்	ரூபாயிடை-1½

உபயோகிக்கும் விதம்:—இம் மூன்றையும் சேர்த்து உருண்டைசெய்து உள்ளுக்கு கொடுக்கவேண்டியது. இந்தப் படி ஒன்றுவிட்டு மறுநாளாக 2-வாரம் கொடுக்கவேண்டும். இரை கொஞ்சம் தின்கிறபட்சத்தில் 10-ரூபாயிடை வேப்பம் பட்டையை 1-படி தண்ணீரில் போட்டு ½-படி தண்ணீராகும் படியாய் வற்றச்செய்து அதில் 5-ரூபாயிடை உப்பைச் சேர்த்துக் கொடுக்க வேண்டியது.

இந்த வியாதி அநேகமாய் குணமானபின்பு

கொடுக்க வேண்டிய மசாலா

மருந்து:—கஸ்தூரிமஞ்சள்	பலம்	6
சருள்ளி	படி	இ
உப்பு	,,	3

உபயோகிக்கும் விதம்:—இவைகளை இடித்து 20-சிதாப் பழத்தை துண்டுதுண்டாக நறுக்கி கூடச்சேர்த்து ஒருபெரிய பானையிற்போட்டு மூய 4-வாரம் பூமிக்குள் புதைத்திருந்து அப்பால் எடுத்துவைத்துக்கொண்டு 7-நாள் காலமே காலமே ஒரு கைகொண்டமட்டும் எடுத்துக் கொடுத்துக்கொண்டு வரவும்.

மற்றொருவகை மசாலா

மருந்து:—சோற்றுக்கற்றாழைமடல்		4
மஞ்சள்	பலம்	3
வேப்பிலை	படி	இ

உபயோகிக்கும் விதம்:-இவைகளை இடித்து உப்பு படி-இ கூடச்சேர்த்து 4-பாகம் செய்து அன்றாடம் இரண்டு தபா மூன்று அல்லது நாலுநாளைக்குக் கொடுக்கவேண்டியது.

இந்தப்படி
மேலே சூடு போடவும்.

புள்ளிருந்த மாட்டின் குணம்

செய்குணம்:—கால்நடை அசந்துபோகும். மாடு உட்கார்ந்தாப்போல இருக்கும்.

மருந்து:—சிறுகொத்தானிலை
நாயுருவி
தருதாழையிலை
எருதுசாணம்

உபயோகிக்கும் விதம்:— இவைகளை ஒருமிக்க இடித்து 2-படி ஜலம்விட்டுக் காய்ச்சி மேலே அடிதது பூச சொஸ்தமாகும்.

இந்தப்படி
இருபுரத்திலும் சுடவும்.



மாட்டு வாகடம் முற்றிற்று.

மலர்மகள் விலாசம் பிரஸ் சென்னை—1. 22-8-60.

பரதேசிகள் அனுபவ

கைமுறை குழந்தை வைத்தியம்

என்னும்

ஹிந்து பால வைத்திய போதினி

பதிப்புரிமை செய்தது — விலை ரூபா 1-50

அளவிடுதற்கரிய சிறப்புவாய்ந்த இவ்வுலகத்தின்கண் சர்வ உயிர்களும் சரண்புகத்தக்க முத்தராகிய சித்தர்கள் பதினெண் பெயரும் திருவாய்மலர்ந்தருளிய வைத்திய சாஸ்திரங்கள் ஏராளமாயிருப்பினும், தற்கால நிலைமைக்கு இயன்றவாறு ஷை சாஸ்திரங்களை அனுசரித்த நிகண்டுகள் முதலான அகராதிகளைக் கண்ணுறாது கையாடும் பெயருக்கு பயன்படாது என்பது திண்ணமாகக் காட்டுகிறதுபற்றி இந்நூல் இசைத்தலாயினேம். ஆயினும் முதனூல் வழிநூல் என்னும் சித்தர்கள் நூலும் மற்றவர்கள் நூலும் கொண்டே ஆராய்ச்சி செய்து அனுபவ திருஷ்டாந்தங்களைக்கொண்டு குழந்தைகளுக்கு இசைந்த சிகிச்சா பக்குவங்களை மாத்திரம் ஒருங்கே திரட்டி, செய்யுட்களாயுள்ளனவற்றை அகராதிகள் வேண்டாது யாவரும் எளிதில் அறியத்தக்க வசனரூபமாக மொழிபெயர்த்து அவ்வசனங்கடோறும் வினவிடைகளாக வகுத்து, ஏனைய புல்லறிவினர்க்கும் எளிதில் விளங்கும்படி வெள்ளிய பாவனையாக வரையப்பட்டது.

இதில் மாந்தவகுப்பு, கணவகுப்பு, கரப்பான்வகுப்பு, குளிகைவகுப்பு, கண்டாவிழ்தவகுப்பு, பாலகிரகதோஷ வகுப்புகள் தனித் தனியாகப் பிரித்து எழுதியுள்ளன. ஆகையால் ஒவ்வொருவரும் ஆ. ச. சி. பாலஞான பரதேசி, செழுமணவை. நல்லண்ண பரதேசி இவ்விருவராலும் கையாண்டுவந்த அனுபவமுறைகள் யாவும் ஷை யார்களின் சிஷ்யர் ஞானசுந்தர சுவாமிகள் உத்தரவின்படி சிறுமணவூர் முனிசாமி முதலியாரால் எழுதியதாவெனக் கவனிக்கவும்.

கிடைக்குமிடம்:— சரஸ்வதி புத்தகசாலை,
175. செட்டியார் தெரு, கொழும்பு.

ஆரிய அனுபோக ரகஸ்ய

வைத்திய அரிச்சுவடி 4-பாகங்கள்

இந்நூல் ஒவ்வொருவரும் எளிதில் கற்றுக்கொள்ளும் படியான முறையில் பஞ்சபக்ஷி கணித ஜோதிடரும், நேடிவ் டாக்டருமாகிய கொரக்கோட்டை. ப. வடிவேல் செட்டியார் அவர்களால் எழுதப்பட்டது. வைத்தியம் என்பது நமக்கு உண்டாகும் வாத-பித்த-சிலேத்துமமாகிய திரிதோஷங்களைப் பரிகரித்து 'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்' என, சுகாதார ஜீவாதார பூரண ஆயுளோடு உலகில் போக பாக்கியங்களை அனுபவிக்கும் விதி-இலக்குகளை விளக்கிக்காட்டும் உயர்தர ஆயுர்வேதமாகும். ஆகலால் வைத்தியம் செய்யப்பட்டவர்களும், வைத்தியம் கற்றுக்கொள்ள விருப்பமுடையவர்களும் சுலபமாக சீக்கிரத்தில் வைத்தியம் தெரிந்து கொள்வதற்கு இந்த வைத்திய அரிச்சுவடி அனுபவ போதனாசக்தி வாய்ந்த முறையாகும். இதன் விலை ரூபா 1

பச்சிலைவர்க்க பசுமூலி அகராதி

இந்நூல் ககோள சித்தாந்த கணித சதாவதானம் செழுமணவை சித்திரக்கவி தேவேந்திரநாதபண்டிதர் அவர்களால் நூதனமாய்ச் சில ஏட்டுப் பிரதிகளிலிருந்தும் அகராதிகளிலிருந்தும் பல முறைகட்கு இணங்க ஒன்றுசேர்த்து, வாதம் வைத்திய முதலிய விஷயங்கட்கு ஆடுஞ்சரக்கு-64, கூடும் உபரசம்-120, நாடுங் கடைசரக்கு-64, அட்டகாமமூலிகை 60-க்கும் தொன்றுதொட்டுப் பழமையாய் வழங்கிவருவனவற்றுள் ஒன்றேனுஞ் சிதறாது வரிசைக்கிரமமாய் அமரவர்க்கமோடு அமைத்து யாவரும் எளிதில் கண்டறிய நுணுக்கமாய் இயற்றியதை சுத்தப் பிரதியாய் அச்சிட்டு அழகிய பைபிண்டு செய்துள்ளது. இதன் விலை ரூபா 1-25.

கிடைக்குமிடம்:— சரஸ்வதி புத்தகசாலை,
175. செட்டியார் தெரு, கொழும்பு.

வைத்திய வித்வன்மணி

C. கண்ணுசாமி பிள்ளை அவர்களால்

எழுதிய

பாக்கெட் வைத்தியம்

"பாக்கெட் வைத்தியம்" என்பதற்குப் பொருள் வைத்தியர்கள் தேசசஞ்சார காலத்தில் பெருநூல்களை எல்லாம் தம்முடன் எடுத்துச் செல்லுவது கஷ்ட சாத்தியமாகும். அத்தகையோர் சட்டைப்பையில் அடக்கமாகக் கூடிய சிறு நூலாகவும் வேண்டிய விஷயங்களுக்கெல்லாம் ஒருவழிகாட்டியாகவும் இருக்கவேண்டும் என்ற கருத்தை முன்னிட்டு விரிவாய் எழுதப்பட்டது.

இந்நூலில் குறிப்பிட்டுள்ள நாடி, நிதானம், அஷ்டவிதப் பரிக்ஷை, சரக்குசுத்தி, கியாழம், சூரணம், மாத்திரை, லேகியம், கிருதம், மெழுகு, தைலம், பற்பம், செந்தூரம் யாவும் அனுபவத்தில் அடிக்கடி உபயோகப் படுத்தப்பட்டவைகளாகும். இதுவுமன்றிப் பலவிதமான அனுபவ சிகிச்சைகளை எச்ச இலம்பகத்தில் கூறப்பட்டு உள்ளன. ஆகவே இந்நூல் எல்லா வைத்தியர்களுக்கும் இனிது பயன்படுமென்பதில் சிறிதும் ஐயமில்லை. ஆகையால் இந்நூல் ஆங்காங்கு ஒழுங்குபடுத்தி பிரித்து எளிதில் அறிந்து கொள்ளும்படியாய் மலர்மகள்விலாச அச்சுக்கூடத்தில் அச்சிட்டு வெளிப்படுத்திய பெருமுறை பாக்கெட் வைத்தியம் என்னும் புஸ்தகத்தைப் பார்த்து வாங்கும்படியாய்க் கோருகின்றேன்.

விலை ரூபா 2-50

கிடைக்குமிடம் :—

சரஸ்வதி புத்தகசாலை

175, செட்டியார் தெரு, கொழும்பு.